Smart Leaders IAS

*Smart Way to Succeed*



2025

# SANGAMAM

**2025**

## TNPSC GROUP-I

# CURRENT AFFAIRS COMPILATION

(TAMIL)

# TNPSC சங்கமம் - CURRENT AFFAIRS


| | | |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு திட்டங்கள் | 01 |
| 2 | மத்திய அரசு திட்டங்கள் | 12 |
| 3 | அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் | 24 |
| 4 | சுற்றுச்சூழல் | 39 |
| 5 | அரசியல் | 45 |
| 6 | வரலாறு மற்றும் இந்திய தேசிய இயக்கம் | 62 |
| 7 | பொருளாதாரம் | 82 |
| 8 | நியமனங்கள் மற்றும் குழுக்கள் | 105 |
| 9 | விருதுகள் | 112 |

# நடப்பு நிகழ்வுகள்

# தமிழ்நாடு திட்டங்கள்

**தமிழ் வளர்ச்சித்துறை**

**1. 'வேர்களைத் தேடி' திட்டம் எனது அரசியல் வாழ்வில் ஒரு மைல்கல்: முதல்வர்**

- 'வேர்களைத் தேடி' திட்டம் எனது அரசியல் வாழ்க்கையில் ஒரு மைல்கல். திராவிட இயக்கக் கோட்பாடுகளுக்கு கிடைத்த பெரும் வெற்றி, இந்த 'வேர்களைத் தேடி' திட்டம் என்று முதல்வர் தெரிவித்துள்ளார்.
- அயல்நாட்டுத் தமிழர்கள் மற்றும் தமிழ்ச்சங்கங்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே உறவுப்பாலமாக செயலாற்றும் அயலகத் தமிழ் இளைஞர் ஒருவருக்கு, "சிறந்த பண்பாட்டுத் தூதுவர்" என்ற விருது இந்த ஆண்டு முதல் முறையாக வழங்கப்பட்டுள்ளது.

**'வேர்களைத் தேடி' திட்டம்**

- **தொடக்கம்:** 24.05.2023
- **நோக்கம்:** வெளிநாட்டில் வாழும் 18 முதல் 30 வயது வரையிலான 200 தமிழ் இளைஞர்களை தமிழக அரசு செலவில் தமிழகத்திற்கு வரவழைத்து அவர்கள் தமிழர்கள் பெருமையை அறியச் செய்தல்
- **அயலகத் தமிழர் தினம்:** வெளிநாடு வாழ் தமிழக உறவுகளை ஒன்றிணைக்கும் வகையில் தமிழக அரசானது அயலகத் தமிழர் தினத்தை ஜனவரி 11, 12 ஆகிய நாட்களில் கொண்டாடி வருகின்றது.

**2. வெளிநாடுகளில் தமிழ் மொழி, கலைகள் பயிற்றுவிக்க ரூ.10 கோடியில் புதிய திட்டம்**

- வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் மக்களின் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு தமிழ் மொழி, நாட்டுப்புற கலைகள், தமிழ் பண்ணிசைகளை 100 ஆசிரியர்கள், கலைஞர்கள் மூலம் நேரடியாக பயிற்றுவிக்க ரூ.10 கோடியில் புதிய திட்டம் உருவாக்கப்படும் என்று சென்னையில் நடைபெற்ற அயலக தமிழர் தின விழாவில் முதல்வர் அறிவித்துள்ளார்.

**மருத்துவத்துறை**

**3. முதல்வர் மருந்தகங்கள்**

- **தொடக்கம்:** 25 பிப்ரவரி 2025
- **நோக்கம்:** தமிழக கூட்டுறவு துறை சார்பில் மக்களுக்கு குறைந்த விலையில் தரமான மருந்துகளை விற்பனை செய்தல்
- ஜெனரிக் உள்ளிட்ட மருந்துகளை மக்களுக்கு குறைந்த விலையில் வழங்கும் வகையில், முதல் கட்டமாக 1,000 மருந்தகங்கள்

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

திறக்கப்படும் என்று கடந்த 2024 ஆகஸ்ட் 15-ம் தேதி சுதந்திர தின உரையில் அறிவிக்கப்பட்டது.

**தகுதி**

- பி.பார்ம்., டி.பார்ம். படிப்பு நிறைவு செய்தவர்கள் அல்லது அவர்களின் ஒப்புதல் பெற்றவர்கள்
- 110 சதுரஅடிக்குக் குறையாமல் சொந்த இடம் அல்லது வாடகை இடம் இருக்க வேண்டும்.
- சொந்த இடம், எனில் அதற்கான சான்றிதழ்களாக சொத்து வரி ரசீது அல்லது குடிநீர் வரி ரசீது அல்லது மின் இணைப்பு ரசீது சமர்ப்பிக்க வேண்டும்.
- வாடகை இடம் எனில் இடத்துக்கான உரிமையாளரிடம் வாடகை ஒப்பந்தப் பத்திரம் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்கலாம்.

**நிதி உதவி**

- அரசு மானியம் ரூ. 3 லட்சம் இரு தவணைகளாக ரொக்கமாகவும் மருந்துகளாகவும் வழங்கப்படும்.
- மானியத் தொகை ரூ.1.50 லட்சம்
- இறுதிக்கட்ட மானியம் ரூ. 1.50 லட்சம் மதிப்புக்கு மருந்துகளாக வழங்கப்படும்.

## 4. கருப்பைவாய் புற்றுநோய் தடுப்பூசி திட்டம்

- **தொடக்கம்:** 2024
- தமிழகத்தில் சோதனை முயற்சியாக, விழுப்புரம் மாவட்டத்தில் 9 முதல் 14 வயது வரையிலான பெண் குழந்தைகளுக்கு HPV தடுப்பூசி இலவசமாக வழங்கும் திட்டத்தை 2024 ஆம் ஆண்டு முதல்வர் தொடக்கி வைத்தார்.
- **காரணி:** மனித பாப்பிலோமா வைரஸ்
- HPV தடுப்பூசி 14 வயதுடைய அனைத்துப் பெண் குழந்தைகளுக்கும் படிப்படியாக வழங்கப்படும் என நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.
- ரூ.36 கோடி நிதி ஒதுக்கீடு

## 5. 'இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48' திட்டம் நாடு முழுவதும் அமலாகிறது

- இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டத்தின் தரவுகளை மத்திய அரசு பெற்று, இத்திட்டத்தை இந்தியா முழுவதும் விரைவில் செயல்படுத்தவுள்ளது.

**'இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48' திட்டம்**

- **தொடக்கம்:** 18.12.2021
- **நோக்கம்:** சாலை விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைத்திடும் நோக்கில் தமிழக அரசால் வகுக்கப்பட்ட உன்னத திட்டமே இன்னுயிர் காப்போம் திட்டம்.

**சிறப்பம்சங்கள்:**

- தமிழ்நாட்டின் எல்லைக்குள் ஏற்படும் சாலை விபத்துகளில் காயமடைவோர்களுக்கு முதல் 48 மணி நேரம் வரை

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

SMART LEADERS IAS ACADEMY

கட்டணமின்றி மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட 81 மருத்துவச் சிகிச்சை முறைகளுக்கு நபர் ஒருவருக்கு ரூ.2.00 லட்சம் வரை (ஆரம்பத்தில் 1 லட்சம்) செலவினத்தில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இத்திட்டத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட 201 அரசு மருத்துவமனைகள் மற்றும் 408 தனியார் மருத்துவமனைகள் என மொத்தம் 609 மருத்துவமனைகள் உரிய தகுதியின் அடிப்படையில் இணைக்கப்பட்டு, மருத்துவ சிகிச்சைகள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- கட்டணமில்லா தொலைபேசி எண் 104

**பள்ளிக்கல்வித்துறை**

## 6. நம்ம School நம்ம ஊரு பள்ளி

- சமூகம் மற்றும் பெருநிறுவனங்களின் பங்களிப்பைப் பெற்று அரசுப்பள்ளிகளை மேம்படுத்துகிற தமிழ்நாடு அரசின் திட்டமே நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NSNOP) திட்டம்.
- **தொடக்கம்:** 2022 டிசம்பர் 19
- நம்ம ஸ்கூல் நல்ல ஊரு பள்ளி திட்டத்திற்காக பிரத்யேகமாக https://nammaschool.tnschools.gov.in/ என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

## 7. பள்ளிச் சாளரம் (Virtual Pavilion)

- அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களை ஒருங்கிணைத்து பள்ளிகளின் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் 'பள்ளிச் சாளரம்' எனும் புதிய வலைப்பக்கத்தை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தொடங்கிவைத்தார்.
- **நாள்:** ஜனவரி 2025
- **அமைச்சகம்:** பள்ளிக் கல்வித் துறை
- இந்த வலைப்பக்கத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகள், அதன் தற்போதைய நிலை, பணிபுரிந்த ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள் குறித்த விவரங்கள் தனித்தனி பகுதிகளாக இடம் பெற்றுள்ளன.
- இந்தப் பக்கத்தில் அரசுப் பள்ளியின் முன்னாள் மாணவர்கள் ஒவ்வொருவரும் இணைந்து தங்களது பள்ளிக்கு தேவையான உதவிகளை வழங்க முடியும்.

## 8. மணற்கேணி செயலி

- பள்ளிகளில் 'மணற்கேணி செயலி' முறையாக பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை ஆய்வு செய்யுமாறு அதிகாரிகளுக்கு தொடக்கக் கல்வித் துறை அறிவுறுத்தியுள்ளது.
- மணற்கேணி செயலியை பயன்படுத்தி வகுப்பறைகளில் கற்பித்தல் செயல்பாடுகளை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டுமென தொடக்கக்


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

- **தொடக்கம்:** 2023
- **உருவாக்கம்:** மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அமைப்பு (SCERT)

### மணற்கேணி செயலி பற்றி

- தமிழகத்தில் கணினி சார்ந்த புதிய அறிவியல் தொழில்நுட்பங்களுடன் கற்றல் செயல்பாட்டுக்கு பெரிதும் உதவும் வகையில் 'மணற்கேணி செயலி' வடிவமைக்கப்பட்டுள்ளது.
- செயலியில் 1 முதல் 12-ஆம் வகுப்பு வரை உள்ள பாடங்கள், தமிழ் மற்றும் ஆங்கில வழியில் அனிமேஷன் காணொலிகளாக மாணவர்கள் எளிதில் புரியும் விதமாக வழங்கப்பட்டுள்ளன.
- குறிப்பாக 11, 12-ம் வகுப்பில் உள்ள ஒவ்வொரு பாடப் பொருளும், அதற்கு அடிப்படையாக 6 முதல் 10-ம் வகுப்பு வரையான பாடப்பொருட்களுடன் தொடர்புபடுத்தி வழங்கப்பட்டுள்ளது.

## 9. இல்லம் தேடி கல்வி திட்டத்தால் கற்றல் ஆர்வம் அதிகரிப்பு

- இந்திய அளவில் தோல் பொருட்கள் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்களிப்பு 47 சதவீதமாக உள்ளதாகவும் இல்லம் தேடி கல்வி திட்டத்தால் மாணவர்களின் கற்றல் ஆர்வம் வெகுவாக அதிகரித்திருப்பதாகவும் மத்திய அரசின் பொருளாதார ஆய்வறிக்கையில் பாராட்டு
- **தொடக்கம்:** 2021 அக்டோபர் 27
- **நோக்கம்:** கரோனா பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட கல்வி இடைவெளியைக் குறைத்தல்
- **பயனாளிகள்:** ஒன்று முதல் எட்டாம் வகுப்பு அரசுப்பள்ளி மாணவர்கள்.
- **சிறப்பம்சங்கள்:**
- தன்னார்வலர்கள் மூலம் கல்வி
- மாலை நேரங்களில் மாணவர்கள் வசிக்கும் பகுதிகளில் கற்பிக்கப்படும்.

### சமூக நலம் மற்றும் மகளிர் மேம்பாட்டுத் துறை

## 10. பெண்கள் பெயரில் சொத்து பதிவுக்கு 1% கட்டண குறைப்பு

- **தொடக்கம்:** ஏப்ரல் 01, 2025
- **நோக்கம்:** 'சமூகத்தில் மட்டுமின்றி, அவரவர் குடும்பங்களிலும் பெண்களுக்கான சமபங்கை உறுதி செய்தல்.

### சிறப்பம்சங்கள்:

- ரூ.10 லட்சம் வரையிலான மதிப்புள்ள வீடு, மனை, விவசாய நிலம் உள்ளிட்ட அனைத்து அசையா சொத்துகள், பெண்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டால், அத்தகைய ஆவணங்களுக்கு பதிவு கட்டணம் ஒரு சதவீதம் குறைக்கப்படும்.
- 75 சதவீத பதிவுகள் இந்த அறிவிப்பால் பயன்பெற இயலும்.

SMART LEADERS IAS ACADEMY

**விதிமுறைகள், நிபந்தனைகள்:**

- கூட்டாக சேர்ந்து சொத்து வாங்கினாலும், பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்கள் அனைவரும் பெண்களாக இருக்க வேண்டும்.
- ஒரே சொத்தை பல பாகங்களாக பிரித்து வாங்க முயற்சிக்க கூடாது.

## 11. மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு பேருந்துகளில் 100 கி.மீ வரை கட்டணமின்றி தயாரிப்புகளை எடுத்துச் செல்ல அனுமதி!

- மகளிர் தினத்தையொட்டி சென்னையில் நடைபெற்ற ‘உலக மகளிர் தின விழா’வில் கலந்து கொண்ட முதல்வர், “தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக, நகரப் பேருந்துகள் மற்றும் புறநகர் பேருந்துகளில், சுய உதவிக் குழு பெண்கள், தாங்கள் தயாரிக்கும் பொருட்களை 25 கிலோ வரை கட்டணமின்றி எடுத்துச் செல்லலாம்” என்ற அறிவிப்பை வெளியிட்டார்.
- அதை செயல்படுத்தும் விதமாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் அரசாணை வெளியிடப்பட்டது.
- அதன்படி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் வழங்கப்பட்ட மகளிர் சுய உதவிக்குழு அடையாள அட்டை வைத்திருக்கும் பெண்கள், ஏசி பேருந்துகளை தவிர்த்து அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் 25 கிலோ வரை தயாரிப்பு பொருட்களை கட்டணமின்றி எடுத்த செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.
- சாதாரண கட்டண புறநகர் பேருந்துகளில் 100 கிமீ வரை கட்டணமின்றி பொருட்களை எடுத்து செல்ல அனுமதிக்கப்படும்.

## 12. பிங்க் ஆட்டோ

- சர்வதேச மகளிர் தினத்தையொட்டி ‘பிங்க் ஆட்டோ’ உள்பட பெண்களுக்கான பல்வேறு சிறப்பு திட்டங்களை முதல்வர் சென்னையில் மார்ச் 08 அன்று தொடங்கி வைத்தார்.
- **அமைச்சகம்:** சமூக நலம் மற்றும் மகளிர் மேம்பாட்டுத் துறை
- முதல்கட்டமாக 250 பெண் ஓட்டுநர்கள் தேர்வு செய்யப்பட்டு, சென்னையில் ‘பிங்க் ஆட்டோ’ சேவை வழங்கப்பட்டுள்ளது.
- ஒரு லட்சம் ரூபாய் வரை அரசு மானியம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

### தகுதிகள்

- பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
- 25 வயது முதல் 45 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- 10-ம் வகுப்பு தேர்ச்சி, ஓட்டுநர் உரிமம் தேவை.
- சென்னையில் குடியிருப்பவராக இருக்க வேண்டும்.

## 13. ‘போலீஸ் அக்கா’ திட்டம்

SMART LEADERS IAS ACADEMY

- கல்லூரி மாணவிகளின் பாதுகாப்புக்காக கடந்த 2022ம் ஆண்டு 'போலீஸ் அக்கா' என்ற திட்டத்தை கோவையில், மாநகர போலீஸ் கமிஷனர் பாலகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.
- **நோக்கம்:** கல்லூரி மாணவிகள் தாங்கள் சந்திக்கும் பிரச்னைகளை தயங்காமல் போலீசில் தெரிவிக்கவும், பாலியல் அத்துமீறலில் இருந்து அவர்களை பாதுகாப்பதுமே ஆகும்.

**'போலீஸ் புரோ'**

- கல்லூரி மாணவர்கள் ராகிங், போதைப்பொருள் சம்பந்தமாக தங்களது கல்லூரிகளில் நியமிக்கப்பட்ட காவலர்களிடம் புகார் அளிப்பதற்காக 'போலீஸ் புரோ' என்ற திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை

### 14. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்

- **தொடக்கம்:** 9.12.2022.
- **நோக்கம்:** காலநிலை மாற்ற மேலாண்மை மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- **அமைச்சகம்:** சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை
- தமிழக முதல்வர் தலைமையில் காலநிலை மாற்ற நிர்வாகக்குழு அமைக்கப்பட்டுள்ளது
- காலநிலை மாற்றம் குறித்து ஆராய, இந்திய மாநிலங்களிலேயே முதன்முதலாக மாநாடு நடத்துவது தமிழகம்.
- துறையின் பெயரையே சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை என்று மாற்றியுள்ளது.
- 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், காலநிலை மாற்ற மேலாண்மை மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, "தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம்" 500 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்திருந்தது.

### 15. கடற்கரைகளுக்கான நீலக்கொடி சான்றிதழ் திட்டம்

**தொடக்கம்:** 2022

**நோக்கம்:**

- நிலையான சுற்றுலா மற்றும் ஆரோக்கியமான கடலோர நிர்வாகத்தை மேம்படுத்துதல்,
- கடற்கரைகளில் மாசுபாட்டைக் குறைத்தல்.
- சர்வதேச தர அளவீட்டிற்கு கடற்கரைகளை உயர்த்துதல்.
- செங்கல்பட்டு கோவளம் கடற்கரை தமிழ்நாட்டின் முதல் நீலக்கொடி சான்றிதழ் பெற்ற கடற்கரையாகும்.

### 16. பசுமை தமிழ்நாடு இயக்கம்

- **தொடக்கம்:** 2022
- **நோக்கம்:** காடுகளின் பரப்பளவை, 21 சதவீதத்தில் இருந்து 33 சதவீதமாக, அடுத்த

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

பத்து ஆண்டுகளுக்குள் உயர்த்துதல்.

- **அமைச்சகம்:** சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை

## 17. திறன்மிகு கிராமம்

- **தொடக்கம்:** 2022

நோக்கம்:

- சூரிய ஒளி ஆற்றலை முழு அளவில் பயன்படுத்துதல்;
- காலநிலை மாற்றம் தொடர்பான தகவல்களை அளித்தல் மற்றும் பசுமை மேம்பாடு ஆகியவற்றை கிராமங்களில் உருவாக்கி, அந்த கிராமத்தை திறன்மிகு கிராமமாக மாற்றுதல்.
- தமிழகத்தில் 10 கிராமங்களைத் தேர்வு செய்து, அவற்றுக்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து செயல்படுத்த, உலக வள ஆதார நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- இதற்காக பசுமைத் திறனாளர்களை தேர்வு செய்யும் பொறுப்பு, அண்ணாப் பல்கலையின் ஆற்றல் கல்வி மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுஉள்ளது.

## 18. பசுமைப் புத்தாய்வு அங்கத்தினர் திட்டம்

- **தொடக்கம்:** 2022
- **நோக்கம்:** காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்ளவும், அதனை ஏற்று வாழ்வதற்குரிய பல்வேறு உத்திகளைக் கண்டறியவும், மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து, மாவட்டத்திற்கு உகந்த காலநிலை மாற்றம் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கும், மாவட்டந்தோறும் பசுமைத் திறனாளர்கள் தேர்வு செய்யும் திட்டம்.

## 19. பசுமைத் தொன்மங்கள் திட்டம்

- **தொடக்கம்:** 2022
- தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் ஒரு பகுதி
- தமிழகத்தில் இரு கோவில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு காலநிலை மாற்றத்தை ஏற்றுக்கொள்ளும் வகையில் மாதிரி கோவில்களாக உருவாக்கப்படும்.
- இவை மீள்திறன், நீர் உபயோகத்திறன், கழிவு மேலாண்மை போன்ற பல்வேறு வகையில் காலநிலை மாற்றத்தை தாங்கக்கூடியவையாக மாற்றப்படும்.

## 20. பசுமைப் பள்ளிகள் திட்டம்

- **தொடக்கம்:** 2022
- மாநிலத்தில் 25 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு, அப்பள்ளிகளில் சூரிய ஒளி தகடுகளை அமைத்து, அதன்மூலம் பெறப்படும் மின்சாரத்தை பள்ளிகளின் பயன்பாட்டுக்கும், மின் மோட்டார் மூலம் அங்குள்ள மூலிகை, காய்கறித் தோட்டங்கள் அமைத்து, அப்பள்ளிகள் பசுமைப் பள்ளிகளாக செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

**நோக்கம்:**

- மாணவர்களிடையே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- மரங்களின் அருமை பெருமைகளை உணர்த்துதல்
- மரபுசாரா எரிசக்தியின் பயன்பாட்டை உணர்தல்

## 21. தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம்

- **தொடக்கம்:** ஆகஸ்ட் 2022

### நோக்கங்கள்

- தமிழ்நாட்டில் உள்ள ஈரநிலங்களை அடையாளம் காணவும், வரைபடமாக்கவும், கண்டுபிடித்தல்.
- ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017 இன் கீழ் அடையாளம் காணப்பட்ட ஈரநிலங்களை அறிவிப்பதற்கான ஒருங்கிணைந்த ஈரநில மேலாண்மைத் திட்டம் போன்ற விரிவான ஆவணங்களைத் தயாரித்தல்.
- பொது விழிப்புணர்வு பிரச்சாரம் மூலம் ஈரநில பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- பயனுள்ள மேலாண்மைக்காக ஈரநில வளங்களின் ஆராய்ச்சி, பட்டியல் மற்றும் கண்காணிப்பை ஊக்குவித்தல்.

## 22. நெய்தல் மீட்சி இயக்கம்

- தமிழக கடலோர வளங்களை மீட்பதற்காக "நெய்தல் மீட்சி இயக்கத்தினை" தொடங்குவதற்கான ஆணைகளை தமிழக அரசு 2024-ஜனவரியில் வெளியிட்டது.
- தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், பசுமைத் தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு ஈரநில இயக்கம், ஆகியவற்றைத் தொடர்ந்து, அரசின் நான்காவது திட்டம்.
- தமிழகத்தின் 14 கடலோர மாவட்டங்களில், 1076 கிலோமீட்டர் தூரத்தை மையமாகக் கொண்டு, வரும் ஐந்து ஆண்டுகளில் உலக வங்கியின் நிதி உதவியுடன் நெய்தல் மீட்சி இயக்கம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- நீலப் பொருளாதாரத்தின் திறனைப் பயன்படுத்திக் கொள்ள முதன்முதலில் தமிழ்நாடு புளூ கார்பன் நிறுவனத்தை அமைப்பதை இந்தத் திட்டம் கருதுகிறது.
- தமிழ்நாடு "புளூ கார்பன் ஏஜென்சி" சதுப்புநிலங்கள், பவளப்பாறைகள் மற்றும் உவர் சதுப்பு நிலங்களை மீட்டெடுக்கும்.

### முக்கியக் கருப்பொருள்கள்:

- கடற்கரையோர பல்லுயிர் பெருக்கம்,
- கடற்கரையோரப் பாதுகாப்பு,
- கடற்கரையோர சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும்
- கடலோரப் பகுதிகளில் மாசுக் கட்டுப்பாடு

SMART LEADERS IAS ACADEMY

### 23. சில்ஹல்லா நீரேற்று மின் திட்டம்

- சில்ஹல்லா நீரேற்று மின் திட்டம் (SPSHEP) என்பது மாநிலத்தின் உச்ச மின் தேவையை நிவர்த்தி செய்வதற்கும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒருங்கிணைப்பை ஆதரிப்பதற்கும் தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக லிமிடெட் (TNGECL) முன்மொழியப்பட்ட ஒரு முக்கிய உள்கட்டமைப்பு முயற்சியாகும்.
- **அமைவிடம்:** தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டம், குந்தா பகுதிக்குள், அமைதிப் பள்ளத்தாக்கு மற்றும் முக்கூர்த்தி தேசிய பூங்காக்களை ஒட்டி அமைந்துள்ளது.
- **நோக்கம்:** உச்ச மின் தேவையை பூர்த்தி செய்ய 1,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்தல்.

## தொழில்துறை

### 24. 'நிமிர்ந்து நில்' திட்டம்

- தமிழகத்தில் 2,000 கல்வி நிறுவனங்களில் பயிலும் 6 லட்சம் மாணவர்களுக்கு புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு பயிற்சி வழங்கும் நோக்கில் 'நிமிர்ந்து நில்' என்ற திட்டம் செயல்படுத்தப்படும் என சட்டப்பேரவையில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவித்தார்.

### 25. கலைஞர் கைவினைத் திட்டம்

**தொடக்கம்: ஏப்ரல்** 19, 2025.

| அம்சம் | மத்திய அரசின் விஸ்வகர்மா திட்டம் | மாநில அரசின் கலைஞர் கைவினைத் திட்டம் |
| --- | --- | --- |
| வயது வரம்பு | குறைந்தபட்சம் 18 வயது | உயர் கல்வி பாதிக்காமல் குறைந்தபட்சம் 35 வயது |
| தொழில்கள் / துறைகள் | 18 வகை கைவினைத் தொழில்கள் | 25 வகை தொழில்கள் |
| முதலீட்டு மானியம் | மானியம் இல்லை | 25% முதலீட்டு மானியம் |
| கடன் வழங்கும் முறை | இரண்டு தவணைகளில் | ஒரே தவணையில் முழு தொகை |

### 26. முதல்வரின் 'காக்கும் கரங்கள்' திட்டம்

- **தொடக்கம்:** 19 பிப்ரவரி 2025
- **நோக்கம்:** முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோரை தொழில் முனைவோராக உருவாக்குதல்.

**சிறப்பம்சங்கள்:**

- முன்னாள் படைவீரர்கள் தொழில் தொடங்க ரூ. 1 கோடி வரை வங்கிகள் வாயிலாக கடன் வழங்கப்படுகிறது.
- தொழில்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையில் 30 சதவீதம் மூலதன மானியமும், 3 சதவீத வட்டி மானியமும் வழங்கப்படும்.

**பயனாளிகள்:**

- 55 வயதுக்குள்பட்ட முன்னாள் படைவீரர்கள்,

SMART LEADERS IAS ACADEMY

- ராணுவப் பணியின்போது உயிரிழந்த படைவீரர்களின் கைம்பெண்கள்,
- முன்னாள் படைவீரர்களின் திருமணமாகாத மகள் மற்றும்
- முன்னாள் படைவீரர்களின் விதவை மகள்கள்

## 27. கிராம தொழில்முனைவோர் திட்டம்

- தேசிய ஊரக வாழ்வாதார இயக்ககத்தின் கீழ், கிராம தொழில் முனைவோர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- **தொடக்கம்:** 2016 இல் தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா-தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தின் (DAY-NRLM) ஒரு பகுதியாக தொடங்கப்பட்டது.
- நோக்கம்: ஊரகப் பகுதிகளில் சிறு சிறு தொழில்களைத் தொடங்கி தொழில் முனைவோராகத் துடிக்கும் இளைஞர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் மானியங்களை அளித்து ஊக்கம் அளிப்பது.
- மாநில பங்கு நிதி ரூ.4.16 கோடியை விடுவித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

### இதரத் துறைகள்

## 28. உபரி நதிநீர் இணைப்புத் திட்டம்

- திருநெல்வேலியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில் உபரி நதிநீர் திட்டமான தாமிரவருணி-கருமேனியாறு-நம்பியாறு இணைப்புக் கால்வாய் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.
- நாள்: பிப்ரவரி 7 2025

### குறிப்புகள்

- 2009-ஆம் ஆண்டு பிப்ரவரி 21-ஆம் தேதி அப்போதைய முதல்வர் கருணாநிதியால் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.
- தாமிரபரணி ஆற்றின் வெள்ளநீரை வறண்ட இடங்களான திசையன்விளை, சாத்தான்குளம் பகுதிக்குக் கொண்டு செல்லும் திட்டம்.
- நோக்கம்: தாமிரவருணி ஆற்றிலிருந்து கடலில் உபரியாக கலக்கும் வெள்ள நீரில் விநாடிக்கு 3,200 கனஅடி வீதம் 10 நாள்களுக்கு 2,765 மில்லியன் கனஅடி நீரை கருமேனியாறு-நம்பியாறு நதிகளுடன் இணைப்பது.
- திருநெல்வேலி மாவட்டத்தில் 14,084.98 ஹெக்டேர் பரப்பு, தூத்துக்குடி மாவட்டத்தில் 8,905.02 ஹெக்டேர் பரப்பு என மொத்தம் 23,040 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

## 29. ‘உங்களை தேடி உங்கள் ஊரில்’ திட்டம்

- **தொடக்கம்:** ஜனவரி 2024
- **நோக்கம்:** அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும் தங்குதடையின்றி விரைந்து மக்களை சென்றடைவதை உறுதி செய்தல்.
- சென்னை தவிர்த்து மற்ற அனைத்து மாவட்டங்களிலும்,

SMART LEADERS IAS ACADEMY

குறிப்பிட்ட வட்டத்தில், மாதம் தோறும் 4-வது புதன்கிழமை மாவட்ட ஆட்சியர் தலைமையில் 'உங்களை தேடி உங்கள் ஊரில்' திட்ட முகாம் நடைபெறும்.

- சென்னையில் மாநகர ஆணையர் தலைமையில் நடைபெறும்.
- மாவட்ட ஆட்சியர் மற்றும்மாவட்ட அளவிலான இதர உயர் அதிகாரிகள் காலை 9 மணி முதல் மறுநாள் காலை 9 மணிவரை தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டத்தில் தங்கி,பல்வேறு அரசு துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், சேவைகளின் செயல்பாடுகள் குறித்து கள ஆய்வு மேற்கொள்வார்கள்.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

# மத்திய அரசின் திட்டங்கள்

1. **மீன்வளர்ப்பு காப்பீட்டுத் திட்டம்**
   - **தொடக்கம்: மே** 2025
   - பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனாவின் (PMMSY) துணைத் திட்டமான பிரதான் மந்திரி மத்ஸ்ய கிசான் சம்ரிதி சா-யோஜனா (PM-MKSSY) கீழ் தொடங்கப்பட்டுள்ளது.
   - இது விளிம்புநிலை மீன் விவசாயிகளுக்கு இடர் குறைப்பு மற்றும் நிதிப் பாதுகாப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2. **பசுமை ஹைட்ரஜன் சான்றிதழ் திட்டம்**
   - **தொடக்கம்: மே** 2025
   - இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் (MNRE) தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது.
   - இந்தியாவை பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கான உலகளாவிய மையமாக நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

3. **சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பணமில்லா சிகிச்சை திட்டம்**, 2025
   - **தொடக்கம்: மே** 2025
   - நாடு முழுவதும் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவான மற்றும் தொந்தரவு இல்லாத மருத்துவ சேவையை உறுதி செய்யும் திட்டம்.
   - இந்தத் திட்டத்தின் கீழ் அதிகபட்ச நன்மை ரூ.1.5 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது மற்றும் விபத்து நடந்த நாளிலிருந்து ஏழு நாட்கள் வரை செல்லுபடியாகும்.

4. **தேசிய முக்கிய கனிமத் திட்டம்** (NCMM)
   - முக்கியமான கனிமங்களில் ஆராய்ச்சி, புதுமை மற்றும் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பங்களை விரைவுபடுத்துவதற்காக தேசிய முக்கிய கனிம இயக்கத்தின் (NCMM) கீழ் சிறப்பு மையங்களை (CoEs) நிறுவுவதற்கான வழிகாட்டுதல்களை சுரங்க அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
   - **அறிவிக்கப்பட்டது:** 2024-25 மத்திய பட்ஜெட்
   - **நோக்கம்:** உள்நாட்டு ஆய்வு, வெளிநாட்டு சொத்து கையகப்படுத்தல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மூலம் இந்தியாவின் முக்கியமான கனிமங்களுக்கான விநியோகச் சங்கிலியை வலுப்படுத்துதல்.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

## 5. துடிப்பான கிராமங்கள் திட்டம்-II (VVP-II)

- மூலோபாய எல்லைப் பகுதிகளில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக துடிப்பான கிராமங்கள் திட்டத்தின் (VVP) இரண்டாம் கட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் (ஏப்ரல் 2025) அளித்துள்ளது.

### துடிப்பான கிராமங்கள் திட்டம்-II (VVP-II) பற்றி

- 2028–29 நிதியாண்டு வரை பின்வரும் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூலோபாய கிராமங்களில் செயல்படுத்தப்படும்:
- அருணாச்சல பிரதேசம், அசாம், பீகார், குஜராத், ஜம்மு & காஷ்மீர் (UT), லடாக் (UT), மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, பஞ்சாப், ராஜஸ்தான், சிக்கிம், திரிபுரா, உத்தரகாண்ட், உத்தரபிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம்.

### துடிப்பான கிராமங்கள் திட்டம்

- 2022 ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட ஒரு மத்திய நிதியுதவி திட்டமான துடிப்பான கிராமங்கள் திட்டம் (VVP), வடக்கு எல்லையில் உள்ள எல்லை கிராமங்களை உள்ளடக்கும் வகையில் அமைந்துள்ளது.
- **தொடக்கம்:** ஏப்ரல் 10, 2023
- இந்த திட்டம் அருணாச்சலப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், சிக்கிம், உத்தரகண்ட் ஆகிய நான்கு மாநிலங்களில் வடக்கு எல்லையை ஒட்டியுள்ள 19 மாவட்டங்களில் 46 தொகுதிகளையும், லடாக் யூனியன் பிரதேசத்தையும் உள்ளடக்கியது.

## 6. பால்பன் கி கவிதா முயற்சி

- **தொடக்கம்:** மார்ச் 2025
- பால்பன் கி கவிதா - இளம் குழந்தைகளுக்கான பாரம்பரிய இந்திய பாடல்கள் (ரைம்கள்) மற்றும் கவிதைகளை மீட்டெடுப்பதற்காக கல்வி அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.

## 7. பிஎம்-யுவ 3.0

- மத்திய கல்வி அமைச்சகத்தின் உயர்கல்வித்துறை பிஎம்-யுவ 3.0-ஐ 2025 மார்ச் 11 அன்று தொடங்கியுள்ளது.
- இளம் எழுத்தாளர்களுக்கு வழிகாட்டும் இந்த திட்டம், 30 வயதுக்குட்பட்ட வளரும் எழுத்தாளர்களுக்கு படித்தல், எழுதுதல் மற்றும் புத்தக கலாச்சாரத்தை ஊக்கப்படுத்த வகை செய்கிறது.

## 8. ‘காசி-தமிழ் சங்கமம் 3.0’ தொடக்கம்

- உத்தர பிரதேச மாநிலம், வாரணாசியில் ‘காசி-தமிழ் சங்கமம் 3.0’ 2025 பிப்ரவரியில் தொடங்கியது.
- **தொடக்கம்:** 2022
- **நோக்கம்:** தமிழகத்துக்கும் காசிக்கும் இடையிலான பண்டைய கலாசார மற்றும் நாகரிகத் தொடர்புகளைக் கொண்டாடுதல்.

SMART LEADERS IAS ACADEMY

- **கருப்பொருள்:** சித்த மருத்துவ முறை (பாரதிய சிகிச்சை), பாரம்பரிய தமிழ் இலக்கியம் மற்றும் நாட்டின் கலாச்சார ஒற்றுமைக்கு அகத்தியர் ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை எடுத்துரைத்தல்.

## 9. 100 நாள் காசநோய் இல்லாத இந்தியா

- **தொடக்கம்:** 2024 டிசம்பர் 7
- **அமைச்சகம்:** மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்.
- **நோக்கம்:** காசநோய் தென்படும் 347 மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்படாத காசநோய் உள்ள நோயாளிகளைக் கண்டுபிடித்து சிகிச்சையளித்தல். இதன் மூலம் காசநோயால் ஏற்படும் இறப்புகளை கணிசமாகக் குறைத்தல்.

## 10. பரஸ்பர கடன் உத்தரவாதத் திட்டம்

- நிதியாண்டு 2024 - 2025 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSME) புதிய கடன் உத்தரவாதத் திட்டத்தை அறிமுகப்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- எம்.எஸ்.எம்.இ-களுக்கான பரஸ்பர கடன் உத்தரவாதத் திட்டம் (MCGS-MSME - Mutual Credit Guarantee Scheme for Micro, Small and Medium Enterprises) என்று அழைக்கப்படும் இந்தத் திட்டம், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை வாங்குவதற்கு தகுதியான எம்.எஸ்.எம்.இ-களுக்கு ரூ.100 கோடி வரை கடன் வசதிகளுக்கான கடன் உத்தரவாதக் காப்பீட்டை நீட்டிக்கும்.
- **நோக்கம்:** கருவிகள்/இயந்திரங்கள் வாங்குவதற்கு தகுதியான MSME களுக்கு ரூ. 100 கோடி வரை கடன் வசதிக்காக உறுப்பினர் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு (MLIs) தேசிய கடன் உத்தரவாத அறங்காவலர் நிறுவனம் (NCGTC) மூலம் 60 சதவீத உத்தரவாத பாதுகாப்பு வழங்குதல்.

## 11. பிரதமரின் பயிற்சித் திட்டம்

- 2024-25 பட்ஜெட்டின் போது, பிரதமர் (PM) இன்டர்ன்ஷிப் திட்டத்தை பிரதமர் அறிவித்தார்.
- இது இந்திய இளைஞர்களுக்கு மதிப்புமிக்க பயிற்சி வாய்ப்புகளை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.
- குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த 21-24 வயதுடைய இளைஞர்களுக்கு நாட்டின் சிறந்த 500 நிறுவனங்களில் 12 மாத இன்டர்ன்ஷிப் வாய்ப்புகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

## 12. ‘பிரதிபிம்ப்’ மென்பொருள்

- ‘பிரதிபிம்ப்’ என்பது மத்திய உள்துறை அமைச்சகத்தின் இந்திய சைபர் குற்ற ஒருங்கிணைப்பு மையத்தால் (I4C) தொடங்கப்பட்ட (2024) புவியியல் தகவல் அமைப்பு (GIS) அடிப்படையிலான மென்பொருளாகும்.
- **நோக்கம்:** மாநில காவல்துறை உள்ளிட்ட அமலாக்க நிறுவனங்கள், சைபர் குற்றவாளிகளை நிகழ்நேரத்தில் வரைபடமாக்கி, அவர்களின் வலையமைப்பை அழிக்க உதவுதல்.

## 13. பிரதமரின் சூரிய சக்தி மேற்கூரை வீடுகள் திட்டம்

- மத்திய புதிய, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் பிரதமரின் சூரிய சக்தி மேற்கூரை வீடுகள் திட்ட ஒருங்கிணைப்பு மாதிரிகளுக்கான 'கட்டண பாதுகாப்பு செயல்முறை' அம்சம், 'மத்திய நிதி உதவி' அம்சம் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கான திட்ட வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

### பிரதமரின் சூரிய சக்தி மேற்கூரை வீடுகள் திட்டம்

- **தொடக்கம்:** 2024 பிப்ரவரி
- **நோக்கம்:** இந்தியாவில் கூரை மேல் சூரிய மின்சக்தி அலகுகளை நிறுவ விரும்பும் ஒரு கோடி வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு மாதமும் வீடுகளுக்கு 300 யூனிட் மின்சாரம் இலவசம்.
- **அமலாக்க முகவர்:** தேசிய அளவில் தேசிய திட்ட அமலாக்க முகமை (NPIA), **மாநில அளவில்:** மாநில அமலாக்க முகமை (SIAs).

## 14. பசுமைக் கடன் திட்டம்

- **அமைச்சகம்:** சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC)
- **தொடக்கம்:** டிசம்பர் 1, 2023 (துபாயில் COP28 இல் பிரதமர் மோடி மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானால் தொடங்கப்பட்டது)
- **நோக்கம்:** வர்த்தகம் செய்யக்கூடிய "பசுமை கடன்கள்" மூலம் தன்னார்வ சுற்றுச்சூழல் சார்பு நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.
- இந்தத் திட்டம் நிலையான வாழ்க்கை முறைகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட திட்டமான மிஷன் லைஃப் (Mission LiFE - Lifestyle for Environment) (சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை) உடன் இணைக்கப்பட்டுள்ளது.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

### 15. நமஸ்தே திட்டம் (இயந்திரமயமாக்கப்பட்ட சுகாதார சூழலுக்கான தேசிய நடவடிக்கை)

- **திட்டக்காலம்:** நிதியாண்டு 2023-24 முதல் 2025-26 வரை (3 ஆண்டுகள்).
- **அமைச்சகம்:** சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் (MoSJE) & வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் (MoHUA).
- **நோக்கம்:**
- இயந்திரமயமாக்கப்பட்ட சுகாதாரத்தை ஊக்குவிப்பதன் மூலம் கையால் மலம் அள்ளும் தொழிலை ஒழித்தல்.
- கழிவுநீர் மற்றும் கழிவுநீர் தொட்டி தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை மேம்படுத்துதல்.
- பணியாளர்களை முறைப்படுத்துதல் மற்றும் திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்குதல்.

### 16. மிஷ்டி திட்டம் (MISHTI - Mangrove Initiative for Shoreline Habitats & Tangible Incomes)

- **தொடக்கம்:** உலக சுற்றுச்சூழல் தினமான ஜூன் 5, 2023 அன்று சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்டது.
- **நோக்கம்:** 2023-24 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் பரவியுள்ள சுமார் 540 சதுர கி.மீ பரப்பளவில் சதுப்புநில காடுகளை மீட்டெடுப்பது.

### 17. அம்ரித் பாரத் நிலையத் திட்டம் (ABSS)

- **தொடக்கம்:** பிப்ரவரி 2023
- **நோக்கம்:** இந்திய ரயில்வே வலையமைப்பு முழுவதும் ரயில் நிலையங்களை மேம்படுத்தி நவீனமயமாக்குதல்

### 18. பர்வத்மாலா திட்டம்

- 'பர்வத்மாலா பரியோஜனா' என்று அழைக்கப்படும் தேசிய ரோப்வே மேம்பாட்டுத் திட்டம், 2022-23 மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.
- மலைப்பாங்கான பகுதிகளில் பயணிகளுக்கான இணைப்பு மற்றும் வசதியை மேம்படுத்துவதையும், வழக்கமான போக்குவரத்து முறை நிறைவுற்றதாகவோ அல்லது சாத்தியமில்லாததாகவோ இருக்கும் நகர்ப்புறங்களில் நெரிசலைக் குறைப்பதையும் இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சுற்றுலாவை மேம்படுத்துவதோடு, பயணிகளுக்கான இணைப்பு மற்றும் வசதியை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

## 19. பிரதமர் ஸ்ரீ பள்ளிகள்

- தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020 உடன் இணைந்த ஒரு முதன்மை மாதிரிப் பள்ளித் திட்டம்.
- இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தால் 2022-23 இல் தொடங்கப்பட்டது.
- **நோக்கம்:** NEP 2020 கொள்கைகளை பிரதிபலிக்கும் வகையில், தரமான கல்வியின் முன்மாதிரியாக செயல்படும் 14,500 மாதிரிப் பள்ளிகளை உருவாக்குதல்.

## 20. குழந்தை வளர்ப்புத் திட்டம்

- 2022 ஆம் ஆண்டில், முந்தைய தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம் மறுசீரமைக்கப்பட்டு, 'மிஷன் சக்தி'யின் துணைத் திட்டமான 'சமர்த்யா'வின் கீழ் பால்னா திட்டம் என மறுபெயரிடப்பட்டது.
- **நோக்கம்:** குழந்தைகளுக்கு (6 மாதங்கள் முதல் 6 வயது வரை) பாதுகாப்பான சூழலில் தரமான குழந்தை காப்பக வசதி, ஊட்டச்சத்து ஆதரவு, குழந்தைகளின் சுகாதாரம், அறிவாற்றல் மேம்பாடு, வளர்ச்சி கண்காணிப்பு, நோய்த்தடுப்பு ஆகியவற்றை வழங்குவதாகும்.

## 21. பாஷினி திட்டம்

- பாஷினி திட்டத்தின் மூலம் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் e-Shram போர்ட்டல் 22 மொழிகளுடன் மேம்படுத்தப்பட்டது.

### டிஜிட்டல் இந்தியா பாஷினி

- டிஜிட்டல் இந்தியா பாஷினி என்பது இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு (AI) தலைமையிலான மொழி மொழிபெயர்ப்பு தளமாகும்.
- **தொடக்கம்: ஆகஸ்ட்** 2022
- **நோக்கம்:** இணையத்தில் இந்திய மொழிகளில் உள்ளடக்கத்தை கணிசமாக அதிகரிப்பது.

## 22. அமிர்த நீர்நிலைகள் இயக்கம்

- இந்திய சுதந்திரத்தின் அமிர்தப் பெருவிழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக மத்திய அரசு 2022 ஆம் ஆண்டில் (ஏப்ரல் 24 , 2022) அமிர்த நீர்நிலைகள் இயக்கத்தைத் தொடங்கியது.
- நாடு முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் 75 நீர்நிலைகளை நிர்மாணித்து புத்துயிர் அளிப்பதை இந்த இயக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 23. தேசிய தொழில்நுட்ப ஜவுளி மிஷன்

- ஜவுளித் துறை இந்திய அரசால் ஒரு சூரிய உதயத் துறையாக அடையாளம் காணப்பட்டு, இந்தியாவில் தொழில்நுட்ப ஜவுளித் துறையை மேம்படுத்துவதற்காக ஜவுளி அமைச்சகத்தால் 2020 ஆம் ஆண்டு தேசிய தொழில்நுட்ப ஜவுளி இயக்கம் தொடங்கப்பட்டது.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

## 24. ஜீனோம் இந்தியா திட்டம்

- பயோடெக்னாலஜி துறை அதன் 10,000 மனித மரபணு தரவுத்தொகுப்பைப் பகிர்வதற்கான புதிய தளம் மற்றும் கட்டமைப்பை சமீபத்தில் (ஜனவரி 2025) அறிவித்தது.

### ஜீனோம் இந்தியா திட்டம் பற்றி

- **தொடக்கம்:** 2020 ஜனவரி
- **நோக்கம்:** பெரிய அளவிலான மரபணு வரிசைமுறை மூலம் இந்தியாவின் மக்கள்தொகையின் மரபணு வேறுபாட்டை கண்டுபிடிப்பது.

## 25. SVAMITVA (Survey of Villages Abadi and Mapping with Improvised Technology in Village Areas.)

- ஸ்வாமித்வா திட்டம் ஏப்ரல் 24, 2020 அன்று தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தில் தொடங்கப்பட்டது.
- ட்ரோன்கள் மற்றும் மேப்பிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கிராமங்களில் வீடுகள் மற்றும் நிலங்களுக்கு சட்டப்பூர்வ உரிமை ஆவணங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 26. இ-ஷ்ரம் போர்ட்டல்

- இ-ஷ்ரம் போர்ட்டலில் 30 கோடியே 68 லட்சத்திற்கும் மேற்பட்ட அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.
- அமைப்புசாரா தொழிலாளர்களின் விரிவான தேசிய தரவுத்தளத்தை உருவாக்குவதற்காக இந்த போர்டல் 2021 இல் தொடங்கப்பட்டது.
- eSHRAM போர்ட்டலில் பதிவுசெய்யப்பட்ட ஒரு தொழிலாளி விபத்தில் சிக்கினால், அவர் இறப்பு அல்லது நிரந்தர ஊனத்திற்கு ரூ.2.0 லட்சமும், பகுதி ஊனத்திற்கு ரூ.1.0 லட்சமும் பெற தகுதியுடையவர்.

### நோக்கம்:

- கட்டுமானத் தொழிலாளர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் வீட்டு வேலை செய்பவர்கள் உள்ளிட்ட 38 கோடி அமைப்புசாரா தொழிலாளர்களைப் பதிவு செய்தல்.

## 27. பிரதம மந்திரி போஷன் திட்டம்

- செப்டம்பர் 2021 இல், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ரூ.1.31 டிரில்லியன் நிதி செலவில் சூடான சமைத்த உணவை வழங்குவதற்கான பிரதான் மந்திரி போஷன் சக்தி நிர்மான் அல்லது PM-POSHAN ஐ மத்திய அமைச்சரவை அங்கீகரித்தது.
- இது ஐந்து ஆண்டுகளுக்கு (2021-22 முதல் 2025-26

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

வரை) ஆரம்பக் காலத்திற்கு தொடங்கப்பட்டுள்ளது.

## 28. மிஷன் சக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0

- 2021 இல் தொடங்கப்பட்ட இத்திட்டம், துணை ஊட்டச்சத்து திட்டம் மற்றும் போஷான் அபியான் போன்ற ஒத்த நோக்கங்களைக் கொண்ட பல்வேறு திட்டங்களை ஒரே குடையின் கீழ் ஒருங்கிணைத்தது.
- யூனியன் மற்றும் மாநில/யூனியன் பிரதேச அரசாங்கங்களுக்கு இடையே 60:40.
- வடகிழக்கு (NER) & இமயமலை மாநிலங்களுக்கு: மத்திய அரசுகளுக்கு இடையே 90:10.

## 29. இளம் விஞ்ஞானி திட்டம் (யுவிகா)

- **தொடக்கம்:** 2019.
- **அமைப்பு:** இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ)
- **நோக்கம்:** பள்ளி மாணவர்களிடம் விண்வெளி அறிவியல் குறித்த ஆர்வத்தை ஏற்படுத்துதல்.
- **தகுதியானவர்கள்:** 9-ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்கள்
- நாடு முழுவதும் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஆண்டுதோறும் தலா 3 பேர் தேர்வு செய்யப்படுவர்.

## 30. பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி (PM-KISAN)

- **தொடக்கம்:** பிப்ரவரி 2019
- 100% நிதியுதவியுடன் கூடிய மத்தியத் துறைத் திட்டம்.
- **அமைச்சகம்:** வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்.
- மத்திய அரசு ஆண்டுக்கு ரூ.6,000 தொகையை மூன்று சம தவணைகளில், அனைத்து நில உரிமையாளர்களின் வங்கிக் கணக்குகளிலும், அவர்களின் நிலத்தின் அளவைப் பொருட்படுத்தாமல் நேரடியாக செலுத்துகிறது.

## 31. பிரதமரின் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் (Pradhan Mantri Shram Yogi Maandhan Yojana - PM-SYM)

- **தொடக்கம்:** பிப்ரவரி 2019
- **நோக்கம்:** அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்குதல்.
- அமைப்புசாரா துறையைச் சேர்ந்த மற்றும் ₹15,000 வரை மாத வருமானம் கொண்ட தொழிலாளர்களுக்கு 60 வயதிற்குப் பிறகு ₹3,000 குறைந்தபட்ச மாதாந்திர ஓய்வூதியத்தை உறுதி செய்கிறது.

## 32. சமக்ர சிக்ஷா திட்டம்

- சர்வ சிக்ஷா அபியான், ராஷ்ட்ரிய மத்யமிக் ஷிக்ஷா அபியான் மற்றும் ஆசிரியர் கல்வி ஆகிய

SMART LEADERS IAS ACADEMY

மூன்று திட்டங்களை இணைத்து 2018 இல் தொடங்கப்பட்டது.

- தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020- க்கு இணங்க, முன் தொடக்கக் கல்வி முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை முழுமையான பள்ளிக் கல்வியை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 33. போஷான் அபியான்

- **தொடக்கம்:** மார்ச் 8, 2018
- **குறிக்கோள்கள்:**
- 0-6 வயது குழந்தைகளில் வளர்ச்சிக் குறைபாட்டைத் தடுக்கவும் குறைத்தல்
- 0-6 வயது குழந்தைகளில் ஊட்டச்சத்து குறைபாடு (குறைவான எடை பரவல்) ஏற்படுவதைத் தடுத்து குறைத்தல்.
- பெண்கள் மற்றும் இளம் பருவப் பெண்கள் (15-49 வயது) மத்தியில் இரத்த சோகை பரவலைக் குறைத்தல்.

## 34. உதான் திட்டம்

- பிராந்திய இணைப்புத் திட்டம் (RCS) - UDAN ("உதே தேஷ் கா ஆம் நாக்ரிக்") 2016 இல் தொடங்கப்பட்டது.
- முதல் உதான் விமானம் 2017 ஆம் ஆண்டு சிம்லாவிற்கும் டெல்லிக்கும் இடையில் இயக்கப்பட்டது.
- **நோக்கம்:** மலிவு விலையில் பிராந்திய விமானப் பயணத்தை வழங்குதல், இரண்டு மற்றும் மூன்றாம் கட்ட நகரங்களில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்

## 35. பிரதமரின் பயிர்க்காப்பீட்டு திட்டம்

- **தொடக்கம்:** 18.02.2016
- **நோக்கம்:** எதிர்பாராத வகையிலான இயற்கை சீற்றங்களால் பயிர்களுக்கு ஏற்படும் இழப்பிலிருந்து பாதுகாப்பு அளித்தல்.
- புதிய பயிர் காப்பீட்டுத் திட்டம், ஒரே நாடு ஒரே திட்டத்தின் கருப்பொருளுக்கு ஏற்ப அமைந்துள்ளது.
- தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் (NAIS) மற்றும் மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் ஆகிய இரு திட்டங்களை ஒருங்கிணைத்து கொண்டுவரப்பட்டது.

## 36. பாரத் நெட்

- **தொடக்கம்:** 30.04.2016
- அனைத்து தொலைத் தொடர்பு சேவை வழங்குநர்களுக்கும் அகன்ற அலைவரிசை இணைப்புக்கான தடையற்ற அணுகலை வழங்குவதே முதன்மை நோக்கமாகும்.
- உலகின் மிகப்பெரிய கிராமப்புற தொலைத் தொடர்பு திட்டங்களில் ஒன்றாகும்.

## 37. ஸ்கில் இந்தியா

- தேசிய திறன் மேம்பாட்டு திட்டமான 'திறன்மிகு இந்தியா (ஸ்கில் இந்தியா)' திட்டம் அடுத்த ஆண்டு (2026)

SMART LEADERS IAS ACADEMY

இறுதிவரை தொடருவதற்காக ரூ.8,800 கோடியை ஒதுக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

- **தொடக்கம்:** 2015
- **நோக்கம்:** நாடு மக்களின் தொழில் திறன்களை சர்வதேச தரத்துக்கு உயர்த்தும் நோக்கில் கடந்த 2022-ம் ஆண்டுக்குள் சுமார் 40 கோடி பேருக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் இலக்குடன் திறன்மிகு இந்தியா திட்டம் மத்திய அரசால் கடந்த 2015-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

## 38. சாகர்மாலா திட்டம்

- மார்ச் 2015 இல் தொடங்கப்பட்ட சாகர்மாலா திட்டம், இந்தியாவின் கடல்சார் துறையில் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் முதன்மை முயற்சியாகும்.
- இது பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் நீலப் பொருளாதாரத்தில் இந்தியாவின் தலைமைத்துவத்தை ஊக்குவிக்கிறது.

## 39. மண் வள அட்டைகள் திட்டம்

- **தொடக்கம்:** பிப்ரவரி 19, 2015
- **அமைச்சகம்:** வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்
- இந்தத் திட்டம் நாட்டிலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் மண் வள அட்டைகளை வழங்க மாநில அரசுகளுக்கு உதவுகிறது.

## 40. 'மகள்களை காப்போம்; மகள்களை படிக்க வைப்போம்' இயக்கத்தின் வெற்றி

- 'மகள்களைக் காப்போம்; மகள்களைப் படிக்க வைப்போம்' (பேட்டி பச்சாவோ, பேட்டி பதாவோ) எனும் மத்திய அரசின் முயற்சி, பாலின சார்புகளை முறியடிப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளதாகவும், அனைத்து தரப்பு மக்களின் பங்களிப்பையும் ஈர்த்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.
- **தொடக்கம்:** 22 ஜனவரி 2015
- **அமைச்சகங்கள்:** பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் மற்றும் மனித வள மேம்பாட்டு அமைச்சகம்
- இந்தியாவில் 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி, இந்தியாவில் குழந்தை பாலின விகிதம் (0-6 ஆண்டுகள்) 1,000 ஆண்களுக்கு 927 பெண்களாக இருந்தது, 2011 இல் 1,000 ஆண்களுக்கு 918 பெண்களாக குறைந்துள்ளது.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

- **நோக்கம்:** பேட்டி பச்சாவோ, பேட்டி படாவோ பிரச்சாரம் என்பது, குறைந்து வரும் குழந்தை பாலின விகிதத்தின் (CSR) சிக்கலைத் தீர்த்தல்.

## 41. பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம்

- **தொடக்கம்:** 2008-09
- சிறுபான்மை விவகார அமைச்சகம், 2008-09 ஆம் ஆண்டு பல்துறை மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்தியது.
- இந்தத் திட்டம் மறுசீரமைக்கப்பட்டு, ஏப்ரல் 1, 2018 முதல் "பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் (PMJVK)" எனப் பெயர் மாற்றப்பட்டது.
- இது இந்தியா முழுவதும் அடையாளம் காணப்பட்ட 1300 பகுதிகளில் சமூக உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு மத்திய நிதியுதவி திட்டமாகும்.

## 42. ஏகலைவ்யா பள்ளிகள்

- 1997-98 ஆம் ஆண்டில் பழங்குடியினர் விவகார அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஏகலைவ்யா மாதிரி குடியிருப்புப் பள்ளிகள் (EMRS) என்பது தொலைதூர மற்றும் கிராமப்புறங்களில் உள்ள பட்டியல் பழங்குடி (ST) மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட அரசுப் பள்ளிகளின் வலையமைப்பாகும்.

## 43. கிசான் கிரெடிட் கார்டு

- 1998 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கிசான் கிரெடிட் கார்டு (KCC) திட்டம், விவசாயம் மற்றும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு விவசாயிகளுக்கு போதுமான மற்றும் சரியான நேரத்தில் கடன் அணுகலை வழங்குகிறது.
- 2004 ஆம் ஆண்டில், விவசாயிகளின் முதலீட்டு கடன் தேவைகளான, அதாவது வேளாண் சார்ந்த மற்றும் வேளாண்மை சாராத நடவடிக்கைகளுக்காக இந்தத் திட்டம் மேலும் நீட்டிக்கப்பட்டது.

## 44. நீலக் கொடி சான்றிதழ்

நீலக் கொடியானது கடற்கரைகள், மெரினாக்கள் மற்றும் நிலையான சுற்றுலாப் படகுகளுக்கான உலகின் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ விருதுகளில் ஒன்றாகும்.

- ஒடிசா - கோல்டன் கடற்கரை,
- குஜராத் - சிவராஜ்பூர் கடற்கரை,
- கேரளா - கப்பாடு கடற்கரை, சால் கடற்கரை
- டையு - கோக்லா கடற்கரை
- அந்தமான் - ராதா நகர் கடற்கரை,
- கர்நாடகா - காசர் கோடு, படுபித்ரி கடற்கரை,

SMART LEADERS IAS ACADEMY

- ஆந்திரா - ருசிகொண்டா கடற்கரை,
- புதுச்சேரி - ஈடன் கடற்கரை
- மினிகாய் துண்டி கடற்கரை – லட்சத்தீவுகள்
- கத்மத் கடற்கரை – லட்சத்தீவுகள் ஆகியவை இந்தியாவில் நீலக்கொடி சான்றிதழ் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.

## 45. கவாச் 5.0 சிஸ்டம்

- மும்பையின் புறநகர் ரயில் சேவைகளை மேம்படுத்துவதற்காக **கவாச்** 5.0 ஐ செயல்படுத்துவதாக ரயில்வே அமைச்சகம் அறிவித்தது.
- மனிதத் தவறுகளால் ஏற்படும் விபத்துகளைத் தடுக்கவும், ஆபத்தான நேரங்களில் சிக்னல் கடந்து செல்வதையும், அதிக வேகத்தில் செல்வதையும் தடுக்கவும், இந்திய ரயில்வே உள்நாட்டிலேயே 'கவாச்' (ரயில் மோதல் தவிர்ப்பு அமைப்பு) என மறுபெயரிடப்பட்ட ஒரு தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பை உருவாக்கியுள்ளது.

## 46. தேசிய சுகாதார இயக்கம்' 5 ஆண்டு நீட்டிப்பு

- தேசிய சுகாதார இயக்கத்தை மேலும் 5 ஆண்டுகள் தொடரவும், சணலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தவும் மத்திய அமைச்சரவை கூட்டம் ஒப்புதல் அளித்தது.

### தேசிய சுகாதார இயக்கம்

- தேசிய கிராமப்புற சுகாதார இயக்கம் (2005) மற்றும் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் (2013) ஆகிய இரண்டையும் ஒருங்கிணைத்து தேசிய சுகாதார இயக்கம் (NHM - National Health Mission) தொடங்கப்பட்டது.
- **நோக்கம்:** கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் - இனப்பெருக்க-தாய்- பிறந்த குழந்தை மற்றும் இளம்பருவ ஆரோக்கியம் (RMNCH+A), மற்றும் தொற்றக்கூடிய மற்றும் தொற்றாத நோய்களுக்கான சுகாதார அமைப்பை வலுப்படுத்துதல்.

SMART LEADERS IAS ACADEMY

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## 1. விண்வெளியில் 2 விண்கலன்கள் ஒருங்கிணைப்பு பணி வெற்றி

- ஸ்பேடெக்ஸ் திட்டத்தின்கீழ் விண்வெளியில் 2 விண்கலன்களை ஒருங்கிணைக்கும் செயல்முறை வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.
- இதன்மூலம் இந்த தொழில்நுட்பத்தை கொண்ட 4-வது நாடு என்ற சாதனையை இந்தியா படைத்துள்ளது.
- விண்ணில் 'பாரதிய அந்தரிக்ஷ ஸ்டேஷன்' (பிஏஎஸ்) எனும் ஆய்வு நிலையத்தை 2035-ம் ஆண்டுக்குள் நிறுவ இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம்(இஸ்ரோ) திட்டமிட்டுள்ளது.
- இதன் ஒருபகுதியாக, ஸ்பேடெக்ஸ் (SPADEX–Space Docking Experiment) எனும் திட்டத்தின் கீழ் விண்வெளியில் விண்கலன்களை ஒருங்கிணைக்கும் பரிசோதனையை மேற்கொள்ள இஸ்ரோ முடிவு செய்தது.
- இதற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஸ்பேடெக்ஸ்-ஏ, ஸ்பேடெக்ஸ்-பி ஆகிய 2 விண்கலன்களும் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து பிஎஸ்எல்வி-சி60 ராக்கெட் மூலம் கடந்த டிசம்பர் 30-ம்தேதி விண்ணில் செலுத்தப்பட்டு, வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டன.
- தற்போது இந்த இரண்டு விண்கலங்களும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

## 2. உலகின் கடல்சார் சக்தி இந்தியா

- ஐஎன்எஸ் சூரத், ஐஎன்எஸ் நீலகிரி, ஐஎன்எஸ் வக்ஷீர் ஆகிய 3 கடற்படை போர்க் கப்பல்களை மும்பையில் உள்ள கடற்படை கப்பல் கட்டும் தளத்தில் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- இந்த 3 கப்பல்களும் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை என்பது பெருமைக்குரியதாகும்.
- ஐஎன்எஸ் நீலகிரி: சோழ வம்சத்தின் கடல்சார் வலிமையை வெளிப்படுத்தும் வகையில் அர்ப்பணிக்கப்பட்டது.
- ஐஎன்எஸ் சூரத்: குஜராத்தின் துறைமுகங்கள் இந்தியாவை மேற்கு ஆசியாவுடன் இணைத்ததை நினைவூட்டும் வகையில் இணைக்கப்பட்டது. இந்தியாவின் முதல் செயற்கை

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

நுண்ணறிவு தொழில்நுட்பத்தை கொண்ட போர்க்கப்பல்.

- கல்வாரி என்ற முதல் நீர்மூழ்கிக் கப்பல் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து, பி75 வகைப்பாட்டில் ஆறாவது வக்ஷீர் நீர்மூழ்கிக் கப்பல் இயக்கப்பட்டது.

## 3. மிஷன் மௌசம்

- டெல்லி பாரத மண்டபத்தில் ஜன. 14, 2025 அன்று இந்திய வானிலை ஆய்வுத் துறையின் 150-வது நிறுவன தின கொண்டாட்டம் நடைபெற்றது.
- இந்த விழாவில் பங்கேற்ற இந்தியப் பிரதமர் 'மிஷன் மௌசம்' எனப்படும் வானிலை இயக்கம் என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- 'மிஷன் மௌசம்' என்பது அதிநவீன வானிலை கண்காணிப்புத் தொழில்நுட்பங்கள் மற்றும் அமைப்புகளை உருவாக்குவதற்கான இயக்கம் ஆகும்.
- உயர் தெளிவுத்திறன் கொண்ட வளிமண்டலக் கணிப்புகள், அடுத்த தலைமுறை ரேடார்கள், செயற்கைக்கோள்கள், உயர் செயல்திறன் கணினிகள் ஆகியவற்றை செயல்படுத்தும் குறிக்கோள்களை அடைய இயக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன்மூலம் வானிலை, பருவநிலை செயல்முறைகள் பற்றிய புரிதலை மேம்படுத்தும்.

## 4. அணுசக்தி ஆணையம் (AEC)

- கேபினட் செயலாளராக டி.வி.சோமநாதன் மற்றும் செலவினச் செயலாளராக மனோஜ் கோவில் ஆகியோரை உள்ளடக்கி அணுசக்தி ஆணையத்தை (AEC) மத்திய அரசு மீண்டும் அமைத்துள்ளது.
- மறுசீரமைக்கப்பட்ட AEC இன் தலைவராக அணுசக்தி துறையின் செயலாளர் அஜித் குமார் மொஹந்தி உள்ளார்.

### அணுசக்தி ஆணையம் பற்றி

- டாக்டர் ஹோமி ஜே. பாபா தலைமையில் 1948 இல் நிறுவப்பட்டது.
- அணுசக்தி ஆணையம் (AEC - Atomic Energy Commission) என்பது அணுசக்தித் துறையைக் (DAE - The Department of Atomic Energy) கட்டுப்படுத்தும் அமைப்பாகும்.
- இந்தியப் பிரதமர் AEC இன் அதிகாரபூர்வ தலைவர்.

## 5. நாக் எம்கே 2 பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை

- உள்நாட்டில் உருவாக்கப்பட்ட நாக் எம்கே 2, மூன்றாம் தலைமுறை பீரங்கி எதிர்ப்பு 'ஃபயர் அண்ட்-ஃபர்கெட் வழிகாட்டும் ஏவுகணையின் கள மதிப்பீட்டு சோதனைகள் சமீபத்தில் இந்திய ராணுவத்தின் மூத்த அதிகாரிகள் முன்னிலையில் பொக்ரான் களத் தொடரில் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

- நாக் எம்கே-2 ஏவுகணை 7 முதல் 10 கிலோமீட்டர் தூரம் வரை பாயும் என மதிப்பிடப்பட்டுள்ளது , இது 4-கிலோமீட்டர் தூரம் கொண்ட நாக் மார்க் 1 ஐ விட அதிகபட்ச தூரம் ஆகும்.
- நாக் மார்க் 2 ஏவுகணை ரூ.300 கோடி செலவில் டிஆர்டிஓவால் (DRDO) உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த ஏவுகணையானது 'ஃபயர் அண்ட்-ஃபர்கெட்' (fire-and-forget) தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டது.

## 6. விண்வெளியில் முளைத்த காராமணி விதை

- விண்வெளியில் தாவர வளர்ப்பு செய்யும் முயற்சியில் இஸ்ரோ இறங்கியுள்ளது, அதில் முதற்கட்ட வெற்றியை பெற்றுள்ளது.
- இஸ்ரோ பி.எஸ்.எல்.வி-சி60 POEM-4 பயணத்தில் அனுப்பபட்ட தாவரங்கள் முளைக்க தொடங்கி உள்ளன என தெரிவித்துள்ளது.
- சுற்றுப்பாதை தாவர ஆய்வுகளுக்கான காம்பாக்ட் ரிசர்ச் மாட்யூலை (CROPS) பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட சோதனையானது, விண்வெளியில் தாவர வளர்ச்சியைப் புரிந்துகொள்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.
- விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தால் (VSSC) உருவாக்கப்பட்ட CROPS பேலோட், நுண் புவியீர்ப்பு விசையின் கீழ் தாவர வளர்ப்பு மற்றும் தாவர வாழ்வாதாரத்தைப் படிக்க வடிவமைக்கப்பட்ட ஒரு தானியங்கு அமைப்பாகும்.

## 7. சிபிஐ 'பாரத்போல்' தளம் அறிமுகம்

- இந்தியாவில் முதல்முறையாக மத்திய புலனாய்வுப் பிரிவால்(சிபிஐ) 'பாரத்போல்' தளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- சிபிஐ-இன் இணையதளத்தில் இடம் பெற்றுள்ள 'பாரத்போல்' தளத்தில், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலுள்ள விசாரணை முகமைகளால், தேடப்படும் குற்றவாளிகள் உள்பட அனைத்து குற்றவாளிகளின் விபரங்களை சிபிஐ வடிவமைத்துள்ள 'பாரத்போல்' தளத்தில் எளிதாக அறிந்துகொள்ள முடியும்.
- சர்வதேச காவல்துறையான 'இண்டர்போல்' மூலம் தேவையான உதவியையும் ஒத்துழைப்பையும் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

**8. ஆளில்லா விண்கலனை அனுப்பும் சோதனை: திரவ உந்துவிசை அமைப்புடன் கூடிய விண்கலம்**

- ககன்யான் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆளில்லா விண்கலனை விண்ணுக்கு அனுப்பும் திட்டத்துக்காக திரவ உந்துவிசை அமைப்புடன் கூடிய க்ரூ மாட்யூல் (வீரர்கள் தங்கும் அறை) தயார் நிலையில் உள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.
- ககன்யான் திட்டத்தை மூன்று கட்டங்களாக பிரித்து செயல்படுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. அதன்படி, 2 கட்டமான முதல் ஆளில்லா விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பி சோதனை நடத்துவதற்கான ஆராய்ச்சிகளை இஸ்ரோ தீவிரமாக மேற்கொண்டுள்ளது.
- இந்த நிலையில், இந்த 2-ம் கட்ட திட்டத்துக்கான க்ரூ மாட்யூலில் திரவ உந்துவிசை அமைப்புகளின் ஒருங்கிணைப்பை இஸ்ரோவின் திரவ உந்துவிசை அமைப்பு மையம் (LPSC) வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

**9. "சஞ்சய் – போர்க்கள கண்காணிப்பு அமைப்பு"**

- பாதுகாப்பு அமைச்சர் 2025 ஜனவரி 24-ல் புதுதில்லியின் சௌத் பிளாக்கில் 'சஞ்சய் - போர்க்கள கண்காணிப்பு அமைப்பு (BSS - The Battlefield Surveillance System)'-ஐ கொடியசைத்து தொடங்கி வைத்தார்.
- சஞ்சய் என்பது ஒரு தானியங்கி அமைப்பாகும். இது அனைத்து தரை, வான்வழி போர்க்கள சென்சார்களிலிருந்து உள்ளீடுகளை பெற்று அவற்றை ஒருங்கிணைக்கிறது.
- பாதுகாப்பான ராணுவ தரவு கட்டமைப்பு, செயற்கைக்கோள் தகவல் தொடர்பு கட்டமைப்பு ஆகியவற்றின் மூலம் போர்க்களத்தின் பொதுவான கண்காணிப்பு படத்தை உருவாக்க அவற்றை இணைக்கிறது.
- இந்திய ராணுவம் மற்றும் பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) இணைந்து சஞ்சய் உள்நாட்டு தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்டது.

**10. சர்வதேச விண்வெளி மையம் செல்லும் இந்திய வீரர்!**

- அமெரிக்காவின் நாசாவுடன் இணைந்து சர்வதேச விண்வெளி மையம் செல்வதற்காக இஸ்ரோவால் தேர்ந்தெடுக்கப்பட்ட குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லாவை அந்த திட்டத்தின் விமானியாக நாசா அறிவித்துள்ளது.
- 2025 ஜூன் மாதத்துக்குள் ‘ஆக்ஸியம் திட்டம் 4’ க்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 4 வீரர்களும் சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்பப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

- ககன்யான் திட்டத்தின் கீழ் இந்தாண்டு மனிதர்களை விண்வெளிக்கு அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
- இதற்கு முன்னொட்டமாக, ககன்யான் திட்டத்தில் உள்ள ஒரு இந்திய விண்வெளி வீரரை சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்புவதற்காக நாசாவுடன் இஸ்ரோ ஒப்பந்தம் செய்திருந்தது.

## 11. சிலிக்கான் கார்பைடு

- IIT-Madras இன் ஆராய்ச்சியாளர்கள் (உருவகப்படுத்தப்பட்ட) நிலவில் இருந்து சிலிக்கான் கார்பைடை பிரித்தெடுப்பதில் வெற்றி பெற்றுள்ளனர்.
- இது நிலவின் வாழ்விடங்களை உருவாக்க சிலிக்கான் கார்பைடு அடிப்படையிலான கலவைகளை உருவாக்க வழிவகுக்கும்.
- சந்திரன் இரண்டு தனித்துவமான நிலப்பரப்புகளைக் கொண்டுள்ளது – சமவெளி (மரியா - மேர் என்பதன் பன்மை) மற்றும் மலைப்பகுதிகள் என்று அழைக்கப்படுகிறது.

## 12. விண்ணில் பாய்ந்தது இஸ்ரோவின் 100 ஆவது ராக்கெட்!

- இஸ்ரோவின் 100 ஆவது பயணத்தில் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வழிகாட்டி செயற்கைக்கோளுடன் ஜிஎஸ்எல்வி எஃப் 15 (GSLV F15) ராக்கெட், ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து விண்ணில் பாய்ந்தது.
- சமீபத்தில் பதவியேற்ற விண்வெளி நிறுவன தலைவர் வி. நாராயணனுக்கும் இந்தப் பணி முதல் பயணமாகும். இது இந்த ஆண்டு இஸ்ரோவின் முதல் முயற்சியாகும்.
- என்விஎஸ் செயற்கைக்கோள் 2,250 கிலோ எடை உடையது. இதன் ஆயுட்காலம் 10 ஆண்டுகள்.
- இது பிற செயற்கைக்கோள்களுடன் இணைந்து செயற்கைக்கோள்களுக்கான சுற்றுப்பாதை நிர்ணயம், தரை, கடல் மேலாண்மை, மொபைல் சாதனங்களில் இருப்பிட அடிப்படையிலான சேவைகள், வான்வெளி போக்குவரத்தை கண்காணிக்கும்.
- பேரிடர் காலங்களில் துல்லிய தகவல்களை தெரிவிக்கும் என்று இஸ்ரோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

## 13. சர்வதேச விண்வெளி நிலைய பயணம்

- சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு (ஐஎஸ்எஸ்) உலகின் முதல் மாற்றுத்திறனாளி விண்வெளி வீரராகச் செல்வதற்கு ஜான் மெக்ஃபாலுக்கு (43) ஐரோப்பிய விண்வெளி முகமை அனுமதி அளித்துள்ளது.

SMART LEADERS IAS ACADEMY

- கடந்த 2022-ஆம் ஆண்டு உலகின் முதல் மாற்றுத்திறனாளி விண்வெளி வீரராக ஜான் மெக்ஃபாலை ஐரோப்பிய விண்வெளி முகமை தேர்வு செய்தது.
- இதைத் தொடர்ந்து அவர் சர்வதேச விண்வெளி நிலையத்தில் 6 மாதங்கள் வரை தங்கிப் பணியாற்ற உள்ளார்.

## 14. உலகின் மிகப்பெரிய உந்துசக்தி கலவை இயந்திரம்: இஸ்ரோ உருவாக்கி சாதனை

- விண்வெளித்துறையில தற்சார்பு நிலையை அடையும் வகையில், 10டன் எடையில் உலகின் மிகப் பெரிய செங்குத்து உந்துசக்தி கலவை இயந்திரத்தை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.
- இந்த புதிய சாதனம் பெங்களூருவில் உள்ள மத்திய தயாரிப்பு தொழில்நுட்ப மையம் (Central Manufacturing Technology Institute, CMTI)ஆகியவற்றுடன் இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

## 15. நாட்டின் முதல் ஹைபர்லூப் பரிசோதனை வழித்தடம் தயார்

- ரயில்வே அமைச்சகத்துடன் இணைந்து, சென்னை ஐஐடி உருவாக்கிய நாட்டின் முதல் ஹைபர் லூப் பரிசோதனை வழித்தடம் தயார் நிலையில் உள்ளது.
- நீண்ட தூர பயணத்துக்கான அதிவேக ரயில் போக்குவரத்து ஹைபர்லூப் என அழைக்கப்படுகிறது.
- இதில் வெற்றிட இரும்புக் குழாய்கள் வழியாக, ரயில்கள் எலக்ட்ரோ மேக்னடிக் தொழில் நுட்பத்தில் காற்றின் உராய்வு இன்றி, மேக் 1 வேகத்தில், அதாவது மணிக்கு 761 மைல் வேகத்தில் செல்லும்.
- குறைந்த எரிசக்தியில் விமானத்தைவிட இரண்டு மடங்கு வேகத்தில் ரயில்கள் பயணிக்க முடியும்.
- இந்த புதுமையான ரயில் போக்குவரத்துக்கான 422 மீட்டர் நீள பரிசோதனை வழித்தடத்தை ரயில்வே அமைச்சகம் மற்றும் ஸ்டார்ட் அப் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து சென்னை ஐஐடி, அதன் தையூர் டிஸ்கவரி வளாகத்தில் உருவாக்கியுள்ளது.

## 16. SPHEREx தொலைநோக்கி

- SPHEREx (Spectro-Photometer for the History of the Universe, Epoch of Reionization and Ices Explorer) விண்வெளி தொலைநோக்கி மூலம், முழு வானத்தையும் முன்னெப்போதும் இல்லாத வகையில் விரிவாக வரைபடமாக்க நாசா திட்டமிட்டுள்ளது.
- SPHEREx என்பது ஜேம்ஸ் வெப் (JSWT) போன்ற குறிப்பிட்ட அண்டப் பொருட்களை குறிவைக்கும் பிற தொலைநோக்கிகளைப்

SMART LEADERS IAS ACADEMY

போலல்லாமல், இது ஒரு வானம் முழுவதும் ஆய்வு செய்யும் பணியாக இருக்கும்.

- இந்த தொலைநோக்கி 102 அகச்சிவப்பு வண்ணங்களில் புகைப்படங்களை வழங்கும் திறன் கொண்டது.
- விண்மீன் திரள்கள் எவ்வாறு உருவாகின்றன முதல் நமது பால்வீதி விண்மீன் மண்டலத்தில் உயிர்களின் கட்டுமானத் தொகுதிகள் வரை அனைத்து அம்சங்களுடனும் தொடர்புடைய விலைமதிப்பற்ற தரவை இந்த பரந்த கண்காணிப்புத் தளம் வழங்கும்.

## 17. AI கோஷா

- மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY), இந்தியா AI மிஷனின் கீழ் GPU அணுகல் போர்ட்டலுடன் இணைந்து, தனிநபர் அல்லாத தரவுத்தொகுப்பு தளமான AI கோஷாவை அறிமுகப்படுத்தியுள்ளது.
- AI Kosha தரவுத்தொகுப்புகள், கருவிகள் மற்றும் AI மாதிரிகளுக்கான ஒருங்கிணைந்த களஞ்சியமாக செயல்பட வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது பல்வேறு மூலங்களிலிருந்து தரவுத்தொகுப்புகள் மற்றும் மாதிரிகளுக்கான அணுகலை மேம்படுத்துவதையும், AI கண்டுபிடிப்புகளை அதிகரிப்பதையும், பகிரப்பட்ட கருவித்தொகுப்புகளுடன் AI தீர்வு மேம்பாட்டை ஆதரிப்பதையும், புதிய பயன்பாடுகளை ஊக்குவிக்க பயன்பாட்டு நிகழ்வுகளைக் காண்பிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 18. மரபணு வங்கி

- நாட்டின் மரபணு வளங்களைப் பாதுகாக்க மரபணு வங்கி விரிவுப்படுத்தப்படும் என்று பிரதமர் அறிவித்தார்.
- எதிர்கால சந்ததியினருக்கு மரபியல் வளங்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- மரபணு வங்கி என்பது பல்வேறு தாவர இனங்களிலிருந்து சேகரிக்கப்படும் விதைகள், மகரந்தம் போன்ற மரபுப் பொருட்களைச் சேமித்து வைக்கும் களஞ்சியமாகும்.
- இது எதிர்கால சந்ததியினருக்கு முக்கிய தாவர வகைகளைப் பாதுகாத்து வைக்க உதவுகிறது.
- இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தேசிய தாவர மரபணு வளங்கள் பணியகம் (Indian Council of Agricultural Research-National Bureau of Plant Genetic Resources - ICAR-NBPGR)) சார்பில் இந்தியாவின் முதல் மரபணு வங்கி 1996 ஆம் ஆண்டில் புது தில்லியில் அமைக்கப்பட்டது.

SMART LEADERS IAS ACADEMY

- இந்தியாவின் வேளாண் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாக்க 2025-26 பட்ஜெட்டில் இரண்டாவது தேசிய மரபணு வங்கி நிறுவப்படுவதாக நிதி அமைச்சகம் அறிவித்துள்ளது.

## 19. இ-ஷ்ரம் போர்ட்டல்

- அமைப்புசாரா தொழிலாளர்களின் விரிவான தேசிய தரவுத்தளத்தை உருவாக்குவதற்காக இந்த போர்டல் 2021 இல் தொடங்கப்பட்டது.
- இந்த போர்ட்டலில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு 12 இலக்க தனித்துவமான எண்ணைக் கொண்ட இ-ஷ்ரம் அட்டை வழங்கப்படும்.
- eSHRAM போர்ட்டலில் பதிவுசெய்யப்பட்ட ஒரு தொழிலாளி விபத்தில் சிக்கினால், அவர் இறப்பு அல்லது நிரந்தர ஊனத்திற்கு ரூ.2.0 லட்சமும், பகுதி ஊனத்திற்கு ரூ.1.0 லட்சமும் பெற தகுதியுடையவர்.
- **நோக்கம்:** கட்டுமானத் தொழிலாளர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் வீட்டு வேலை செய்பவர்கள் உள்ளிட்ட 38 கோடி அமைப்புசாரா தொழிலாளர்களைப் பதிவு செய்தல்.

## 20. கள்ளநோட்டைத் தடுக்க மை

- நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் பாபா அணு ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஸ்ட்ரோண்டியம் பிஸ்மத் ஃப்ளோரைடு (Sr2BiF7) நானோ துகள்களைப் பயன்படுத்தி ஒரு புதிய பாதுகாப்பு மையை உருவாக்கியுள்ளனர்.
- தற்போது கிடைக்கும் ஃப்ளோரசன்ட் மைகள் புற ஊதா ஒளி அல்லது அகச்சிவப்பு ஒளியின் கீழ் மட்டுமே தெரியும், ஆனால் இரண்டிலும் தெரியாது.
- தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய மை தனித்துவமானது, ஏனெனில் இது நிறமாலையின் புற ஊதா மற்றும் அருகிலுள்ள அகச்சிவப்பு பகுதிகள் இரண்டிலும் ஒளிரும்.

## 21. 'பிரதிபிம்ப்' மென்பொருள்

- 'பிரதிபிம்ப்' என்பது மத்திய உள்துறை அமைச்சகத்தின் இந்திய சைபர் குற்ற ஒருங்கிணைப்பு மையத்தால் (I4C) தொடங்கப்பட்ட (2024) புவியியல் தகவல் அமைப்பு (GIS) அடிப்படையிலான மென்பொருளாகும்.
- நோக்கம்: மாநில காவல்துறை உள்ளிட்ட அமலாக்க நிறுவனங்கள், சைபர் குற்றவாளிகளை நிகழ்நேரத்தில் வரைபடமாக்கி, அவர்களின் வலையமைப்பை அழிக்க உதவுதல்.

SMART LEADERS IAS ACADEMY

- இணைய குற்றவாளிகள் குறித்த தரவுகளைப் பகிரவும், பகுப்பாய்வு செய்ய வசதியாக காவல்துறை உள்ளிட்ட சட்ட அமலாக்க முகமைகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் வகையில் 'சமன்வயா' என்ற மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**22. விண்வெளியை கண்காணிக்கும் உலகின் முதல் வர்த்தக செயற்கைகோள் 'ஸ்காட்-1' செயல்பாடு தொடக்கம்**

- இந்திய ஸ்டார்ட் அப் நிறுவனம் உருவாக்கிய விண்வெளியை கண்காணிக்கும் உலகின் முதல் வர்த்தக செயற்கைகோள் 'ஸ்காட்-1' தென் அமெரிக்காவை படம் பிடித்து அனுப்பி தனது செயல்பாட்டை தொடங்கியுள்ளது.
- இந்த ஸ்காட் செயற்கைகோள் விண்வெளியில் பூமியை சுற்றிக் கொண்டிருக்கம் 5 செ.மீ அளவுள்ள சிறிய பொருட்களை கூட கண்காணிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

**23. நிலவின் துருவப் பகுதிகளுக்கு வெளியேயும் நீர்-பனிக்கட்டி**

- சந்திரயான்-3 இல் உள்ள கருவிகளில் ஒன்றிலிருந்து பெறப்பட்ட தரவுகளின் புதிய பகுப்பாய்வு, சந்திரனின் துருவப் பகுதிகளுக்கு வெளியே உள்ள இடங்களில் நீர்-பனிக்கட்டி இருந்ததற்கான நல்ல நிகழ்தகவு இருப்பதாகக் கூறுகிறது.

**24. நில ஆவணங்களை ஒருங்கிணைக்கும் "அக்ரி ஸ்டேக்'!**

- விவசாயிகளின் நில ஆவணங்கள் அனைத்தையும் "அக்ரி ஸ்டேக்' வலைதளம் மூலம் ஒருங்கிணைக்கும் பணிகள் தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகின்றன.
- இந்தப் பணிகள் உழவர் நலத் துறை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.
- ஆதார் அட்டை, ஆதாருடன் இணைக்கப்பட்ட கைப்பேசி எண், நிலத்தின் பட்டா, சிட்டா ஆகியவற்றின் மூலம் இந்த வலைதளத்தில் விவசாயிகளின் விவரங்கள் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

**25. சந்திரயான்-5 திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதி**

- ஜப்பானுடன் இணைந்து செயல்பட உள்ள சந்திரயான்-5 திட்டத்துக்கான அனுமதியை மத்திய அரசு வழங்கியுள்ளது.
- சந்திரயான்-5 திட்டம் நிலவை முழுமையாக ஆராய்ச்சி செய்யும் நோக்கம் கொண்டது. எனவே, சந்திரயான் 3 -ல் பயன்படுத்தப்பட்டது போன்று சிறிய வகை ரோவர் இதில் இடம்பெறாது. அதற்கு பதிலாக 250 கிலோ எடையுள்ள பெரிய ரோவரை அனுப்பி சந்திரனின் மேற்பரப்பை விரிவாக ஆய்வு செய்ய உள்ளது.
- சந்திரயான்-4 திட்டத்தை 2027-க்குள் நிறைவேற்ற இஸ்ரோ இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த

SMART LEADERS IAS ACADEMY

திட்டத்தின் மூலம் நிலவின் மேற்பரப்பில் உள்ள மாதிரிகளை சேகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- சந்திரயான் -5 மற்றும் 6-வது திட்டங்களை அடுத்த பத்தாண்டுகளுக்குள் நிறைவேற்ற இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

## 26. பூமிக்கு திரும்பினார் சுனிதா வில்லியம்ஸ்

- சர்வதேச விண்வெளி மையத்தில் 286 நாட்கள் தங்கிய பிறகு விண்வெளி வீரர்கள் சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் ஆகியோர் மேலும் 2 விண்வெளி வீரர்களுடன் இணைந்து டிராகன்-9 விண்கலம் மூலம் பாதுகாப்பாக பூமிக்கு திரும்பினர்.

## 27. எம்ஆர்ஐ தொழில்நுட்பம்

- இந்தியா தனது முதல் உள்நாட்டு எம்ஆர்ஐ இயந்திரத்தை உருவாக்கியுள்ளது.
- இது அக்டோபர் மாதத்திற்குள் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சோதனைகளுக்காக நிறுவப்படும்.
- இறக்குமதியைச் சார்ந்திருப்பதை 80-85% குறைக்கிறது.
- மருத்துவ தொழில்நுட்பத்தில் தன்னிறைவை அடைவதை நோக்கமாகக் கொண்ட இந்த தொழில்நுட்ப முன்னேற்றத்தை மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் முன்னெடுத்து வருகிறது.

## 28. ரேபிஸ், பாம்புக்கடிக்கான தடுப்பூசிகள் இருப்பை கண்காணிக்க 'ஜூவின்' வலைதளம்: மத்திய அரசு அறிமுகம்

- நாடு முழுவதும் ரேபிஸ் எதிர்ப்பு தடுப்பூசிகள் (ARV) மற்றும் பாம்பு விஷ எதிர்ப்பு (ASV) ஆகியவற்றின் நிகழ்நேர கிடைக்கும் தன்மையைக் கண்காணித்து நிர்வகிக்க வடிவமைக்கப்பட்ட ZooWIN என்ற டிஜிட்டல் தளத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- கரோனா தடுப்பூசி திட்டத்துக்காக அறிமுகம் செய்யப்பட்ட 'கோ-வின்', கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் திட்டத்துக்காக அறிமுகம் செய்யப்பட்ட 'யு-வின்' வலைதளங்களைப் போன்று 'ஜூவின்' வலைதளம் செயல்படும்.
- இந்த போர்ட்டலை ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டத்தின் (UNDP) தொழில்நுட்ப ஆதரவுடன் தேசிய நோய் கட்டுப்பாட்டு மையம் (NCDC) உருவாக்கியுள்ளது.

## 29. கவாச் 5.0 சிஸ்டம்

- மும்பையின் புறநகர் ரயில் சேவைகளை மேம்படுத்துவதற்காக **கவாச்** 5.0

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

ஐ செயல்படுத்துவதாக ரயில்வே அமைச்சகம் அறிவித்தது.

- மனிதத் தவறுகளால் ஏற்படும் விபத்துகளைத் தடுக்கவும், ஆபத்தான நேரங்களில் சிக்னல் கடந்து செல்வதையும், அதிக வேகத்தில் செல்வதையும் தடுக்கவும், இந்திய ரயில்வே உள்நாட்டிலேயே 'கவாச்' (ரயில் மோதல் தவிர்ப்பு அமைப்பு) என மறுபெயரிடப்பட்ட ஒரு தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பை உருவாக்கியுள்ளது.

## 30. செமக்ளுடைடு

- சமீபத்திய ஆய்வில், வாய்வழி செமக்ளுடைடு (ரைபெல்சஸ்) மாரடைப்பு, பக்கவாதம் மற்றும் இருதய இறப்பு அபாயத்தை 14% குறைக்கிறது என்று கண்டறியப்பட்டுள்ளது.
- செமக்ளுடைடு என்பது ஒரு GLP-1 ஏற்பி அகோனிஸ்ட் (GLP-1RA), இது இருதய ஆபத்தில் குறிப்பிடத்தக்க குறைப்பை அடைவதற்காக 2021 இல் உடல் பருமன் மற்றும் வகை 2 நீரிழிவு போன்ற நிலைமைகள் உள்ளவர்களுக்கு எடை மேலாண்மைக்காக அங்கீகரிக்கப்பட்டது.
- இந்த சோதனை, வகை 2 நீரிழிவு நோய், இருதய நோய் (CVD) மற்றும் நாள்பட்ட சிறுநீரக நோய் (CKD) உள்ளவர்களுக்கு ஏற்படும் முக்கிய பாதகமான இருதய நிகழ்வுகளை (MACE) குறைப்பதில் கவனம் செலுத்தியது.
- மருந்துப்போலியுடன் ஒப்பிடும்போது வாய்வழி செமக்ளுடைடு MACE ஐ கணிசமாகக் குறைப்பதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

## 31. ஜீனோம் இந்தியா திட்டம்

- இது இந்தியாவின் மக்கள்தொகையின் மரபணு வேறுபாட்டை வரைபடமாக்க 2020 ஜனவரியில் தொடங்கப்பட்ட ஒரு தேசிய முயற்சியாகும்.
- இது இந்திய அரசாங்கத்தின் உயிரித் தொழில்நுட்பத் துறையால் ஆதரிக்கப்பட்டு நிதியளிக்கப்பட்ட பல நிறுவனக் கூட்டமைப்புத் திட்டமாகும்.
- பெரிய அளவிலான மரபணு வரிசைமுறை மூலம் இந்தியாவின் மக்கள்தொகையின் மரபணு வேறுபாட்டை கண்டுபிடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 32. நீண்ட தூர கிளைடு குண்டு சோதனை

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) 2025 ஏப்ரல் 08-ம் தொடங்கி 10-ம் தேதிக்கு இடையில் SU-30 MKI விமானத்திலிருந்து, கௌரவ்'

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

எனப்படும் சோதனைகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

- எதிரி வான் பாதுகாப்பு அமைப்புகளின் எட்டாத தூரத்திலிருந்து தரை இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 33. நாசாவின் கியூரியாசிட்டி ரோவர்

- சமீபத்தில், நாசாவின் கியூரியாசிட்டி ரோவர் செவ்வாய் கிரகத்தில் கார்பன் தாங்கும் கனிமங்களைக் கண்டுபிடித்தது.
- இது சிவப்பு கிரகத்தில் கார்பன் சுழற்சிக்கான முதல் உறுதியான சான்றாகும்.
- செவ்வாய் கிரகப் பாறைகளின் சல்பேட் நிறைந்த அடுக்குகளில், கார்பன் மற்றும் ஆக்ஸிஜனைக் கொண்ட சைடரைட் எனப்படும் கார்பனேட் கனிமத்தை கியூரியாசிட்டி ரோவர் அடையாளம் கண்டுள்ளது.
- செவ்வாய் கிரகத்தில் இந்த கனிமம் கண்டுபிடிக்கப்படுவது இதுவே முதல் முறை.

## 34. ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி (JWST)

- சமீபத்தில், விஞ்ஞானிகள் பூமியிலிருந்து 124 ஒளி ஆண்டுகள் தொலைவில் சிம்ம விண்மீன் கூட்டப் பகுதியில் அமைந்துள்ள K2-18b என்ற தொலைதூர எக்ஸோப்ளானெட்டில் வேற்று கிரக வாழ்க்கை இருப்பதற்கான தற்காலிக ஆனால் வலுவான ஆதாரங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழு, கிரகத்தின் வளிமண்டலத்தை ஆய்வு செய்து, டைமெத்தில் சல்பைடு (DMS) மற்றும் டைமெத்தில் டைசல்பைடு (DMDS) போன்ற வாயுக்களின் வேதியியல் அடையாளங்களைக் கண்டறிந்தது.

## 35. பெரோவ்ஸ்கைட் சூரிய மின்கலங்கள்

- பெரோவ்ஸ்கைட் சூரிய மின்கலங்கள் (PSCs) என்பது சூரிய ஒளியை மின்சாரமாக மாற்ற பெரோவ்ஸ்கைட்டுகள் எனப்படும் படிக அமைப்புகளைப் பயன்படுத்தும் ஒரு வகை ஒளிமின்னழுத்த (PV) தொழில்நுட்பமாகும்.
- இந்தப் படிகங்கள் கால்சியம் டைட்டானியம் ஆக்சைடு ($CaTiO_3$) கனிமத்தின் அமைப்பைப் பகிர்ந்து கொள்கின்றன, மேலும் அவை பரந்த அளவிலான ஒளியியல், மின் மற்றும் குறைக்கடத்தி பண்புகளைக் கொண்டதாக வடிவமைக்கப்படலாம்.

## 36. புல்ஸ்ஐ கேலக்ஸி: ஒன்பது வளையங்களைக் கொண்ட கேலக்ஸி

- ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியைப் பயன்படுத்தி ஆராய்ச்சியாளர்கள் குழு சமீபத்தில் புல்ஸ்ஐ

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

கேலக்ஸியை (LEDA 1313424) கண்டுபிடித்துள்ளனர்.

- இது பால்வீதியை விட கிட்டத்தட்ட 2.5 மடங்கு பெரியது மற்றும் எதிர்காலத்தில் ஒரு பெரிய குறைந்த மேற்பரப்பு பிரகாசம் (GLSB) விண்மீனாக பரிணமிக்கக்கூடும்.
- இது ஒன்பது வளையங்களைக் கொண்டுள்ளது.

## 37. இந்தியாவின் முதல் முழு-நிலை குவாண்டம் கணினி 'சிந்து'

- உலக குவாண்டம் தினத்தன்று (ஏப்ரல் 14 ), பெங்களூருவை தளமாகக் கொண்ட QpiAI, இந்தியாவின் முதல் முழு-அடுக்கு குவாண்டம் கணினியான QpiAI-சிந்துவை அறிமுகப்படுத்தியது.
- இது முழுவதுமாக இந்தியாவில் கட்டமைக்கப்பட்ட முதல் முழுமையான குவாண்டம் கணினி அமைப்பு ஆகும்.
- இது வன்பொருள் மற்றும் மென்பொருள் இரண்டையும் உள்ளடக்கியது, குவாண்டம் செயலி முதல் குவாண்டம் பயன்பாடுகளை திறம்பட இயக்க AI- இயக்கப்படும் பயன்பாட்டு கருவிகள் வரை அனைத்தையும் உள்ளடக்கியது.
- **பயன்பாடுகள்:** இது உயிர் அறிவியல் (மருந்து கண்டுபிடிப்பு, மரபியல்), பொருள் அறிவியல் (புதிய பொருட்களை வடிவமைத்தல்), இயக்கம் மற்றும் தளவாடங்கள் (பாதை மற்றும் விநியோகச் சங்கிலி உகப்பாக்கம்) ஆகியவற்றில் சாத்தியமான பயன்பாடுகளைக் கொண்டுள்ளது.

## 38. ஆபரேஷன் ஹாக் 2025

- சர்வதேச தொடர்புகளுடன் கூடிய ஆன்லைன் குழந்தை பாலியல் சுரண்டலை உள்ளடக்கிய சைபர் குற்ற வலையமைப்புகளை வெற்றிகரமாக அகற்ற மத்திய புலனாய்வுப் பிரிவு (சிபிஐ) ஆபரேஷன் ஹாக்கைத் தொடங்கியது.
- முன்னதாக, சர்வதேச தொடர்புகளுடன் கூடிய ஆன்லைன் குழந்தை பாலியல் சுரண்டல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கண்டறிய, சிபிஐ 2021 இல் ஆபரேஷன் கார்பன் மற்றும் 2022 இல் ஆபரேஷன் மேக் சக்ராவைத் தொடங்கியது.

## 39. ECINET: ECI இன் ஒரே இடத்தில் தேர்தல் தொழில்நுட்ப தளம்

- வாக்காளர்கள் மற்றும் தேர்தல் அதிகாரிகள், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகம் போன்ற பிற பங்குதாரர்களுக்காக ஒற்றை-புள்ளி செயலியான ECINET-ஐ இந்திய தேர்தல் ஆணையம் (ECI) அறிவித்துள்ளது.
- தரவு முடிந்தவரை துல்லியமாக இருப்பதை உறுதிசெய்ய, ECINET தரவு அங்கீகரிக்கப்பட்ட EC

SMART LEADERS IAS ACADEMY

அதிகாரிகளால் மட்டுமே உள்ளிடப்படும்.

- இந்தப் புதிய முயற்சி கிட்டத்தட்ட 100 கோடி வாக்காளர்களுக்கும் முழு தேர்தல் நிர்வாகத்திற்கும் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 40. அடுக்கு மண்டல வான்வழித் தளம்

- மத்தியப் பிரதேசத்தின் ஷியோபூரில் அடுக்கு மண்டல வான்வழித் தளத்தின் முதல் விமானச் சோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) வெற்றிகரமாக நடத்தியது.
- அடுக்கு மண்டல வான்வழித் தளம் (HAPS) ஆக்ராவில் உள்ள DRDOவின் வான்வழி விநியோக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.

## 41. மரபணு திருத்தப்பட்ட அரிசி வகைகள்

- வெளிநாட்டு டிஎன்ஏவை அறிமுகப்படுத்தாமல் மகசூல், காலநிலை மீள்தன்மை மற்றும் வள செயல்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட 'டிஆர்ஆர் தன் 100 (கமலா)' மற்றும் 'பூசா டிஎஸ்டி ரைஸ் 1' ஆகிய முதல் மரபணு திருத்தப்பட்ட அரிசி வகைகளை இந்தியா வெளியிட்டுள்ளது.
- மேம்பட்ட CRISPR-Cas9 மரபணு-திருத்தும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ICAR ஆல் இவை உருவாக்கப்பட்டுள்ளன.

### தள-இயக்கப்பட்ட நியூக்ளியேஸ் (Site-Directed Nuclease - SDN) தொழில்நுட்பம்

- இது நியூக்ளியேஸ்கள் எனப்படும் நொதிகளைப் பயன்படுத்தி டிஎன்ஏவில் துல்லியமான மாற்றங்களை அறிமுகப்படுத்தும் ஒரு மரபணு-திருத்தும் நுட்பமாகும்.

## 42. EOS-09

- EOS-09 என்பது ஒரு பூமி கண்காணிப்பு செயற்கைக்கோள் (EOS) ஆகும், இது இந்தியாவின் கண்காணிப்பு மற்றும் இமேஜிங் திறன்களை மேம்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது.
- EOS-09 ஒரு C-band Synthetic Aperture Radar (SAR) உடன் பொருத்தப்பட்டுள்ளது.
- வானிலை அல்லது நாளின் நேரத்தைப் பொருட்படுத்தாமல், பூமியின் மேற்பரப்பின் உயர் தெளிவுத்திறன் கொண்ட படங்களைப் பிடிக்க SAR தொழில்நுட்பம் செயற்கைக்கோளை அனுமதிக்கிறது.

## 43. பிரம்மோஸ்

- இந்தியாவின் ஏவுகணை உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில், லக்னோவில் பிரம்மோஸ் ஒருங்கிணைப்பு மற்றும் சோதனை வசதியை

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

பாதுகாப்பு அமைச்சர் மெய்நிகர் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

**பிரம்மோஸ் ஏவுகணை**

- DRDO (இந்தியா) மற்றும் NPO Mashinostroyeniya (ரஷ்யா) ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டது.
- **பெயர்:** பிரம்மபுத்திரா (இந்தியா) மற்றும் மோஸ்க்வா (ரஷ்யா) நதிகளின் கலவை.
- **இந்திய படைகளில் இணைப்பு:** கடற்படை (2005), ராணுவம் (2007) மற்றும் IAF (2017).

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

# சுற்றுச்சூழல்

## 1. மதுரை அருகே டங்ஸ்டன் சுரங்கம்

- மத்திய சுரங்க அமைச்சகம் சமீபத்தில் நவம்பர் 7, 2024 அன்று ஏலம் மூலம் ஹிந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு டங்ஸ்டன் சுரங்க உரிமைகளை வழங்கியது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட தளங்களில் ஒன்று தமிழ்நாட்டின் மதுரையில் உள்ள பல்லுயிர் தன்மை நிறைந்த மேலூர்.
- 2,015.51 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நாயக்கர்பட்டி டங்ஸ்டன் தொகுதி, முதன்மை டங்ஸ்டன் தாதுவான ஸ்கீலைட் படிவுகளுக்கு பெயர் பெற்றது.
- பெரியார் கால்வாய் சுரங்க நடவடிக்கைகளுக்கான நீர் ஆதாரமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- இந்த தளம் அரிட்டாபட்டி மற்றும் மீனாட்சிபுரம் கிராமங்களில் உள்ள பல்லுயிர் பாரம்பரிய பகுதிகளுடன் ஒன்றுடன் ஒன்று இணைகிறது, அவை சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்டன.

### டங்ஸ்டன்

- அனைத்து உலோகங்களிலும் மிக அதிக உருகுநிலை (3,422°C) கொண்ட ஒரு அரிய, கனமான மற்றும் அடர்த்தியான உலோகம்
- கடினத்தன்மை மற்றும் வெப்பம், அரிப்பு மற்றும் தேய்மானத்திற்கு எதிரான தன்மைக்காக அறியப்படுகிறது.
- உள்நாட்டு உற்பத்தி குறைவாக இருப்பதால் இந்தியா அதன் டங்ஸ்டன் தேவைகளில் குறிப்பிடத்தக்க பகுதியை இறக்குமதி செய்கிறது.

## 2. இந்தியாவின் உமிழ்வு பட்டியல்

- இந்தியா சமீபத்தில் (2025 ஜனவரி) தனது பசுமை இல்ல வாயு வெளியேற்ற பட்டியல் (GHG) மற்றும் உமிழ்வை கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகளை விவரிக்கும் சமீபத்திய அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.
- 2005 மற்றும் 2020-க்கு இடையில், இந்தியாவின் மொத்த GDP உமிழ்வு செறிவு 36% குறைந்துள்ளது.

## 3. வனச்சூழலை பசுமை ஜிடிபியுடன் இணைத்த முதல் மாநிலம் சத்தீஸ்கர்

- இந்தியாவில் முதன்முறையாக, சத்தீஸ்கர் மாநிலம் தனது காடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளை பசுமை மொத்த உள்நாட்டு உற்பத்தி (பசுமை ஜிடிபி) கணக்கீட்டில் ஒருங்கிணைக்கும் புதுமையான

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

கட்டமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.

- பசுமை GDP என்பது பொருளாதார வளர்ச்சியை மதிப்பிடுவதற்கான மாற்று அளவீடு ஆகும்.
- இதில் பொருளாதார நடவடிக்கைகளின் சுற்றுச்சூழல் செலவுகள் அடங்கும்.

### 4. மியவாக்கி தொழில்நுட்பம்

- மஹாகும்பமேளா 2025-க்கு தயாராகும் வகையில், பிரயாக்ராஜ் முழுவதும் மியாவாக்கி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பல்வேறு இடங்களில் சுமார் 56,000 சதுர மீட்டர் அடர்ந்த காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- 1970-களில் புகழ்பெற்ற ஜப்பானிய தாவரவியலாளர் அகிரா மியாவாக்கி உருவாக்கிய மியாவாக்கி நுட்பம், வரையறுக்கப்பட்ட இடங்களில் அடர்ந்த காடுகளை உருவாக்குவதற்கான ஒரு புரட்சிகரமான முறையாகும்.
- 'பானை தோட்ட முறை' என்று குறிப்பிடப்படுகிறது.
- மரங்கள் மற்றும் புதர்களை அவற்றின் வளர்ச்சியை துரிதப்படுத்த ஒன்றுக்கு ஒன்று நெருக்கமாக நடவு செய்வதை உள்ளடக்குகிறது.

### 5. 2024 அதிக வெப்பமான ஆண்டு

- 1901ஆம் ஆண்டுக்குப் பிறகு 2024ஆம் ஆண்டுதான் அதிக வெப்பமான ஆண்டாக பதிவாகியுள்ளதாக ஐஎம்டி (IMD) தெரிவித்துள்ளது.
- காலநிலையின் வரலாற்றுப் போக்குகள் குறித்த அதிகாரப்பூர்வ ஆதாரமான கோபர்நிகஸ் காலநிலை மாற்ற சேவை (C3S) மூலம் வெப்பநிலை-தரவு ஜனவரி 10, 2024-ல் வெளியிடப்பட்டது.

### 6. தமிழகத்தில் 'ராம்சர்' தளங்களின் எண்ணிக்கை 20-ஆக உயர்வு

- தமிழகத்தில் 'ராம்சார்' தளங்களின் எண்ணிக்கை 20-ஆக உயர்ந்துள்ளது. அதிகபட்சமாக ராமநாதபுரம் மாவட்டதில் 5 தளங்கள் உள்ளன.
- உலக ஈர தினத்தையொட்டி, ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சக்கரக்கோட்டை பறவைகள் சரணாலயம், தேர்த்தங்கல் பறவைகள் சரணாலயம், ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள உத்வா ஏரி, சிக்கிம் மாநிலத்தில் உள்ள ஹேச்ரோ பள்ளி சதுப்பு நிலப்பகுதி ஆகிய 4 இடங்கள் 'ராம்சார்' தளங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- இதன்மூலம் 'ராம்சார்' தளங்களின் எண்ணிக்கை நாடு முழுவதும் 89-ஆகவும், தமிழகத்தில் 20-ஆகவும் உயர்ந்துள்ளன.
- இவற்றில் 19 இடங்கள் 2021-இல் தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம் தொடங்கியதற்குப் பிறகு ராம்சார் பகுதிகளாக

SMART LEADERS IAS ACADEMY

அறிவிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

- நாட்டிலேயே 'ராம்சார்' தளங்களின் எண்ணிக்கை தமிழகத்தில்தான் அதிகம். குறிப்பாக, ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 5 தளங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.
- முன்னதாக ராமநாதபுரம் மாவட்டத்தில் மன்னார் வளைகுடா கடல்சார் உயிர்க்கோளக் காப்பகம், சித்திரங்குடி பறவைகள் சரணாலயம், காஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம் ஆகிய 3 தளங்கள் இருந்தன.
- 1971 பிப்ரவரி 2-ம் தேதி ஈரான் நாட்டின் ராம்சர் நகரில் நடைபெற்ற ஈர நிலங்கள் பாதுகாப்பு மாநாட்டில் 'ராம்சார் ஒப்பந்தம்' மேற்கொள்ளப்பட்டது.

## 7. மன்னார் வளைகுடாவில் ஹைட்ரோகார்பன் ஆய்வு

- இந்திய அரசாங்கம் தமிழ்நாட்டின் மன்னார் வளைகுடாவின் (GoM) சுமார் 10,000 சதுர கி.மீ ஆழமற்ற கடல் பகுதியை அதன் சமீபத்திய ஹைட்ரோகார்பன் ஆய்வு டெண்டரில் சேர்த்துள்ளது.
- மன்னார் வளைகுடா இந்தியப் பெருங்கடலில் உள்ள லட்சத்தீவு கடலின் ஒரு பகுதியாகும்.
- இதில் 21 தீவுகள் இது இலங்கையின் வடமேற்கு கடற்கரைக்கும் இந்தியாவின் தென்கிழக்கு கடற்கரைக்கும் இடையில் பரவியுள்ளன.
- தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் முதல் கடல் உயிர்க்கோளக் காப்பகமான மன்னார் வளைகுடா கடல் தேசியப் பூங்காவின் தாயகமாகும்.

## 8. பெட்ரோலில் எத்தனால் கலப்பு 20%-க்கு மேல் அதிகரிக்க முடிவு

- பெட்ரோலில் எத்தனால் கலப்பதை 20 சதவீதத்துக்கு மேல் அதிகரிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- பெட்ரோலில் 19.6 சதவீதம் எத்தனால் கலப்பது என்ற இலக்கு ஏற்கெனவே எட்டப்பட்டுவிட்டது.
- எத்தனால் உள்ளூர் கரும்பு ஆலைகளில் இருந்து பெருமளவில் கிடைக்கிறது.

## 9. நாட்டில் புலிகள் காப்பகம் 58-ஆக உயர்வு!

- மத்திய பிரதேசத்தில் புதிதாக அறிவிக்கப்பட்ட மாதவ் புலிகள் காப்பகத்துடன், நாட்டில் புலிகள் காப்பகங்களின் எண்ணிக்கை 58-ஆக உயர்ந்துள்ளது.
- இது, மத்திய பிரதேசத்தின் 9-ஆவது புலிகள் காப்பகமாகும்.
- வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம் – 1972
- "புராஜெக்ட் டைகர்" – 1973

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

**தமிழ் நாட்டின் புலிகள் காப்பகங்கள்:**

- களக்காடு-முண்டந்துறை புலிகள் காப்பகம்
- ஆனைமலை புலிகள் காப்பகம்
- முதுமலை புலிகள் காப்பகம்
- சத்தியமங்கலம் புலிகள் காப்பகம்
- ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம்

## 10. இந்தியாவின் மின் உற்பத்தியில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

- நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கு 22.49 சதவீதத்தை எட்டியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இந்தியாவின் சோலார் மின் உற்பத்தி திறன் 2014-ல் 2.82 ஜிகாவாட்டாக மட்டுமே இருந்த நிலையில் 2025-ல் 100 ஜிகாவாட்டாக மாபெரும் எழுச்சி கண்டுள்ளது.
- கடந்த 2021-ம் ஆண்டு கிளாஸ்கோவில் நடைபெற்ற 26-வது பருவநிலை மாற்ற மாநாட்டில் இந்தியா வாக்குறுதி அளித்தபடி, வரும் 2030-க்குள் 500 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்திக்கான கட்டமைப்புகளை நிறுவ வேண்டும் என்பதை நோக்கி இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது.

## 11. உலகில் மிகவும் மோசமாக காற்று மாசுபட்ட 20 நகரங்கள்

- சுவிட்சர்லாந்தின் காற்று தர தொழில்நுட்ப நிறுவனமான ஐக்யூ ஏர் (IQAir), உலக காற்று தர அறிக்கையை (2024) வெளியிட்டுள்ளது.
- உலகில் மிகவும் மோசமாக காற்று மாசுபட்ட 20 நகரங்கள் பட்டியலில் 13 இந்திய நகரங்கள் இடம்பிடித்துள்ளன.
- உலக அளவில் மிகவும் மாசடைந்த தலைநகரங்களில் டெல்லி முதலிடத்தில் உள்ளது.
- இதுபோல உலக அளவில் மிகவும் மோசமாக காற்று மாசடைந்த நாடுகள் பட்டியலில், கடந்த 2023-ல் 3-ம் இடத்தில் இருந்த இந்தியா, 2024-ல் 4-வது இடத்துக்கு முன்னேறி உள்ளது.

## 12. அகத்தியமலை நிலப்பரப்பு

- வனவியல் அல்லாத நடவடிக்கைகள் மற்றும் ஆக்கிரமிப்புகளை அடையாளம் காண, அகத்தியமலை நிலப்பரப்பு முழுவதையும் ஆய்வு செய்யுமாறு மத்திய அதிகாரமளிக்கப்பட்ட குழுவிற்கு (CEC) உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- இந்தத் தீர்ப்பு, அழகிய வனப்பகுதிகளை மீட்டெடுப்பதையும், புலிகளின் வாழ்விடங்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்களைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அகத்தியமலை உயிர்க்கோளக் காப்பகம் தென்னிந்தியாவின் தெற்கு மேற்குத் தொடர்ச்சி மலையில், கேரள-தமிழ்நாடு எல்லையில் அமைந்துள்ளது.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

- 2016 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் உலக உயிர்க்கோள இருப்பு வலையமைப்பில் சேர்க்கப்பட்டது.

## 13. இந்தியாவின் முதல் காலநிலை மாற்ற நிலையம்

- உலகளாவிய காலநிலை அறிவியலில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கும் வகையில், ஜம்மு & காஷ்மீரின் நாதடோப்பில் இமயமலை உயர் உயர வளிமண்டல மற்றும் காலநிலை ஆராய்ச்சி மையத்தை இந்தியா திறந்து வைத்துள்ளது.
- இந்த மையம் கடல் மட்டத்திலிருந்து 2,250 மீட்டர் உயரத்தில் நாதடோப்பில் அமைந்துள்ளது.
- இங்கு சுத்தமான காற்று மற்றும் குறைந்தபட்ச மாசுபாடு நிலவுவதால் உயர் துல்லிய வளிமண்டல மற்றும் காலநிலை அளவீடுகளுக்கு சிறப்பான அமைவிடம் ஆகும்.

## 14. உலகளாவிய காற்று அறிக்கை 2025

- உலகளாவிய காற்றாலை ஆற்றல் கவுன்சிலின் (GWEC) உலகளாவிய காற்று அறிக்கை 2025, திட்டமிடப்பட்ட காற்றாலை திறன் 2030 இலக்குகளில் 77% மட்டுமே பூர்த்தி செய்யும் என்று எச்சரிக்கிறது.
- 2024 ஆம் ஆண்டில், உலகளவில் 117 GW புதிய காற்றாலை மின் உற்பத்தி சேர்க்கப்பட்டது, இது 2023 இல் 116.6 GW ஆக இருந்தது.
- 2024 ஆம் ஆண்டில் புதிய திறனில் 70% பங்களித்து உலகளாவிய காற்றாலை சந்தையை சீனா வழிநடத்தியது.
- அதைத் தொடர்ந்து அமெரிக்கா, பிரேசில், இந்தியா மற்றும் ஜெர்மனி ஆகியவை பிற சிறந்த சந்தைகளாக உள்ளன.

### இந்தியாவில் காற்றாலை ஆற்றலின் நிலை

- மார்ச் 31, 2025 நிலவரப்படி, இந்தியா 50.04 ஜிகாவாட் ஒட்டுமொத்த நிறுவப்பட்ட காற்றாலை மின் உற்பத்தித் திறனை அடைந்துள்ளது.
- 2024–25 நிதியாண்டில், இந்தியா காற்றாலை மின் உற்பத்தியை 4.15 ஜிகாவாட்டாக அதிகரித்தது, இது 2023–24 நிதியாண்டில் 3.25 ஜிகாவாட்டாக இருந்தது.
- குஜராத்தில் 36 ஜிகாவாட் மற்றும் தமிழ்நாட்டில் சுமார் 35 ஜிகாவாட் கடல் காற்று ஆற்றல் திறன் இருப்பதாக தேசிய காற்றாலை ஆற்றல் நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

## 15. தாஜ்மஹாலில் தொழில்துறை தாக்கத்தை ஆய்வு செய்ய NEERI

- யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமான தாஜ்மஹாலில் கண்ணாடித் தொழில்களின் தாக்கத்தை ஆய்வு செய்ய உச்ச நீதிமன்றம் தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

நிறுவனத்தை (NEERI) பணித்தது.

- தாஜ்மஹால் என்பது இந்தியாவின் ஆக்ராவில் அமைந்துள்ள தந்தம்-வெள்ளை பளிங்கு கல்லறை ஆகும்.
- 1632 ஆம் ஆண்டு முகலாயப் பேரரசர் ஷாஜஹானால் (1628–1658 ஆட்சி) கட்டப்பட்டது.
- 1983 ஆம் ஆண்டு யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டது.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

# இந்திய அரசியலமைப்பு

## 1. மாநிலம் - ஆளுநர் மோதல்

- அரசியலமைப்பின் பிரிவு 200-ன் படி மாநில மசோதா மீது ஆளுநருக்கு பின்வரும் 4 பின்வரும் நான்கு அதிகாரங்கள் உள்ளன:
  - மசோதாவுக்கு ஒப்புதல் அளித்தல்
  - ஒப்புதலை நிறுத்தி வைத்தல்
  - மசோதாவை ஜனாதிபதியின் பரிசீலனைக்கு ஒதுக்குதல்
  - மறுபரிசீலனை செய்ய திருப்பி அனுப்புதல்
- அரசியலமைப்பின் பிரிவு 201-ன் படி மாநில மசோதா மீது குடியரசுத் தலைவருக்கு பின்வரும் அதிகாரங்கள் உள்ளன:
  - மசோதாவுக்கு ஒப்புதல் அளித்தல்
  - ஒப்புதலை நிறுத்தி வைத்தல்
  - மறுபரிசீலனை செய்ய திருப்பி அனுப்புதல்
- மறுபரிசீலனை மசோதா மீண்டும் மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டால், அது ஜனாதிபதிக்கே திருப்பி அனுப்பப்பட வேண்டும்.

### உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- நவம்பர் 2023 இல், "மாநில சட்டமன்றங்களின் வழக்கமான சட்டமியற்றும் போக்கைத் தடுக்க" ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## 2. உச்ச நீதிமன்றம் மாநில அரசின் ஒப்புதலுக்கு CBI குறித்த தீர்ப்பு

- ஒரு மத்திய சட்டத்தின் கீழ், அந்த மாநிலத்தில் பணியாற்றும் மத்திய அரசின் ஊழியருக்கு எதிராக வழக்கு பதிவு செய்ய மத்திய விசாரணை அமைப்புக்கு (CBI) மாநில அரசின் அனுமதி தேவையில்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- CBI விசாரணைக்கான வழக்குக்கேற்ப ஒப்புதலுக்காக சம்பந்தப்பட்ட மாநில அரசின் அனுமதி பெற வேண்டும்.

## 3. பல்கலைக்கழக மானிய ஆணைய (UGC) வரைவு விதிமுறைகள் 2025

- தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020 உடன் இணைக்கப்பட்ட துணைவேந்தர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்விப் பணிகளுக்கான தகுதி அளவுகோல்களை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட வரைவு விதிமுறைகளை UGC அறிவித்துள்ளது.
- துணைவேந்தர் பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களுக்கு, குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் மூத்த நிலை அனுபவம் மற்றும்

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

குறிப்பிடத்தக்க கல்விப் பங்களிப்புகள் தேவை.

- வேந்தர் (தலைவர்), UGC மற்றும் பல்கலைக்கழகத்தின் உச்ச அமைப்பிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட நபர் ஆகியோர் அடங்கிய குழுவின் மூலம் துணைவேந்தர் தேர்வு செயாபடுவர்.
- பொறியியல் அல்லது தொழில்நுட்ப முதுகலை பட்டம் (55% மதிப்பெண்கள்) பெற்ற தேர்வர்கள் UGC தேசிய தகுதித் தேர்வில் (NET) தேர்ச்சி பெறாமல் உதவிப் பேராசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

## 4. பெண்களின் உடல் வடிவத்தை வர்ணிப்பதும் பாலியல் துன்புறுத்தலே- கேரள உயர்நீதிமன்றம்

- 'பெண்களின் உடல் வடிவம் குறித்து பாலியல் ரீதியில் வர்ணிப்பதும் பாலியல் துன்புறுத்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும்' என்று கேரள உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- **பிரிவுகள்:** இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 354ஏ மற்றும் 509

## 5. 'கிரீமிலேயர்' பிரிவினரை இடஒதுக்கீட்டில் இருந்து நீக்குவது குறித்து மத்திய, மாநில அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தல்

- இடஒதுக்கீடு பயன்களை ஏற்கெனவே பெற்று முன்னேறிய 'கிரீமி லேயர்' பிரிவினரை இட ஒதுக்கீடு சலுகையில் இருந்து நீக்கலாமா வேண்டாமா என்ற முடிவை அரசு நிர்வாகம் மற்றும் சட்டமன்றம்தான் எடுக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
- ''சமூக ரீதியாக, கல்வி ரீதியாக மிகவும் பின்தங்கியிருப்பவர்களின் மேம்பாட்டுக்காக, பட்டியலினத்தவருக்குள் உட்பிரிவுகளை வகைப்படுத்தும் அதிகாரம் மாநிலங்களுக்கு உள்ளது'' என தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றம் இவ்வாறு கூறியுள்ளது.

## 6. மணிப்பூர், மேகாலயா மற்றும் திரிபுரா மாநில தினம்

- ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 21 அன்று, வடகிழக்கு மாநிலங்களான மணிப்பூர், மேகாலயா மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்கள் 1971 ஆம் ஆண்டின் வடகிழக்கு பிராந்திய (மறுசீரமைப்பு) சட்டத்தின் கீழ் மாநில அந்தஸ்து பெற்ற வரலாற்று தருணத்தைக் குறிக்கும் வகையில், தங்கள் மாநில தினத்தை கொண்டாடுகின்றன.
- வடகிழக்கு மாநிலங்கள் ஏழு சகோதரிகள் எனப்படும் ஏழு மாநிலங்களை உள்ளடக்கியது.
- **அவை:** அருணாச்சல பிரதேசம், அசாம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து மற்றும் திரிபுரா.

SMART LEADERS IAS ACADEMY

### 7. உத்தரகண்டில் அமலாகிறது பொது சிவில் சட்டம்!

- சுதந்திர இந்தியாவில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தும் முதல் மாநிலம் உத்தரகண்ட் (2025 ஜனவரி).
- கடந்த 2022, மே 27-இல் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் நிபுணர் குழு அமைக்கப்பட்டது.
- உத்தரகண்டில் பழங்குடியினர் தவிர்த்து பிற மக்கள் அனைவருக்கும் பொது சிவில் சட்டம் பொருந்தும்.

### 8. அடுத்த தலைமை தேர்தல் ஆணையர்: தெரிவு செய்ய தேடல் குழு அமைப்பு

- அடுத்த தலைமை தேர்தல் ஆணையரைத் தெரிவு செய்வதற்கு மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தலைமையில் மூன்று பேர் கொண்ட தேடல் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.
- மத்திய நிதித் துறை செயலர் மற்றும் மத்திய பணியாளர் மற்றும் பயிற்சித் துறை செயலர் ஆகியோர் தேடல் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

#### உச்சநீதிமன்ற வழக்கு

- கடந்த 2023-ஆம் ஆண்டு மார்ச் 2-ஆம் தேதி, தலைமை தேர்தல் ஆணையர், 2 தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பாக பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய ஒரு குழுவை அமைத்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.
- இந்த உத்தரவுக்கு எதிராக புதிய சட்டத்தை கொண்டுவந்த மத்திய அரசு, பிரதமர் தலைமையிலான தேர்தல் ஆணையர்கள் தேர்வுக் குழுவில் ஒரு மத்திய அமைச்சர் மற்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் உறுப்பினர்களாக இடம்பெறும் வகையில் மாற்றியமைத்ததுடன், காலியாக இருந்த 2 தேர்தல் ஆணையர் பணியிடங்களையும் நிரப்பியது.
- மத்திய அரசு கொண்டுவந்த புதிய சட்டத்தின்படி, முதன் முறையாக அடுத்த தலைமைத் தேர்தல் ஆணையர் நியமிக்கப்படவிருக்கிறார்.
- அதற்காக மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தலைமையில் மூன்று பேர் கொண்ட தேடல் குழுவை மத்திய அரசு 2025 ஜனவரி 17-ஆம் தேதி அமைத்துள்ளது.

### 9. தகவல் பெறும் உரிமைச் சட்டம்

- தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ், விண்ணப்பம் மற்றும் அதுகுறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை கோப்புகளை 5 ஆண்டுகள் வரை பராமரிக்க வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

SMART LEADERS IAS ACADEMY

## 10. வழிபாட்டுத் தலங்கள் சட்ட வழக்கு

- கடந்த 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் தேதி இருந்த அனைத்து வழிபாட்டுத் தளங்களின் தன்மையில் எந்த மாற்றமும் இல்லாமல், அதே நிலையில் பராமரிக்கப்பட வேண்டும் என்று 1991-ஆம் ஆண்டின் வழிபாட்டுத் தளங்கள் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- அந்த வழிபாட்டுத் தளங்களை வேறு மதத்தின் வழிபாட்டுத் தளமாக மாற்றவும் அச்சட்டம் தடை விதிக்கிறது.
- அத்துடன் அந்த வழிபாட்டுத் தளங்களை வேறு மதத்தின் வழிபாட்டுத் தளங்களாக மாற்றுவது தொடர்பாக எந்தவொரு நீதிமன்றத்திலும் புதிதாக வழக்கு தொடுக்கவும் அச்சட்டம் தடை விதிக்கிறது.

## 11. இந்தியாவில் பன்மொழி

- 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு தரவுகளின் ஆய்வு, 26.02% இந்தியர்கள் மட்டுமே இருமொழி பேசுபவர்கள் மற்றும் 7.1% பேர் மும்மொழி பேசுபவர்கள் என்பதைக் காட்டுகிறது.
- கோவா - 77.21% இருமொழி பேசுபவர்கள் , 50.82% மும்மொழி பேசுபவர்கள் (மும்மொழி 50% ஐ விட அதிகமாக உள்ள ஒரே மாநிலம்).
- பிற உயர் தரவரிசை மாநிலங்கள்: அருணாச்சலப் பிரதேசம் (64.03%), சிக்கிம் (63.71%), நாகாலாந்து (62.15%), மகாராஷ்டிரா (51.1%).
- 43.63% இந்தியர்கள் இந்தி மொழியை தங்கள் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர்.
- தமிழ்நாடு மற்றும் கேரளா உட்பட 5 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் 1% க்கும் குறைவான மக்கள் இந்தி பேசுகிறார்கள்.
- தென்னிந்தியாவில் ஆந்திரப் பிரதேசம் (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில் தெலுங்கானா உட்பட) 3.69% என்ற இந்தி பேசும் விகிதத்தை அதிகமாகக் கொண்டிருந்தது.

## 12. சட்டவிதி 136

- அரசமைப்புச் சட்ட விதி 136-ஐ குறிப்பிட்ட சமயத்தில் மட்டுமே உச்சநீதிமன்றம் பயன்படுத்த வேண்டும். ஆனால், தற்போது அதன் பயன்பாடு அதிகரித்து வருவது ஏற்புடையதல்ல என குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் தெரிவித்தார்.
- அரசமைப்புச் சட்ட விதி 136-இன்கீழ் உச்சநீதிமன்றத்துக்கு சிறப்பு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பெயர் சிறப்பு அனுமதி மனு (எஸ்எல்பி) என்பதாகும்.
- **விதி** 136: உச்ச நீதிமன்றம், அதன் விருப்பப்படி, இந்தியாவின் பிரதேசத்தில் உள்ள எந்தவொரு நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தால் நிறைவேற்றப்பட்ட அல்லது

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

செய்யப்பட்ட எந்தவொரு காரணம் அல்லது விஷயத்திலும் எந்தவொரு தீர்ப்பு, ஆணை, தீர்மானம், தண்டனை அல்லது உத்தரவிலிருந்து மேல்முறையீடு செய்ய சிறப்பு அனுமதி வழங்கலாம்.

- உயர்நீதிமன்றங்கள் உள்பட (ராணுவ நீதிமன்றங்கள் தவிர்த்து) தீர்ப்பாயங்கள் என நாட்டில் உள்ள எந்தவொரு நீதிமன்றத்தின் தீர்ப்புகளை எதிர்த்தும் அரசமைப்புச் சட்ட விதி 136-இன் கீழ் சம்பந்தப்பட்ட நபர் மனு தாக்கல் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- இதை ஏற்பதும் நிராகரிப்பதும் உச்சநீதிமன்றத்தின் தனிப்பட்ட அதிகாரமாக உள்ளது.

## 13. பார்வை குறைபாடு உடையவர்கள் நீதிபதியாக தகுதியானவர்கள்

- பார்வை குறைபாடு உடையவர்கள் நீதிபதியாக தகுதியானவர்கள்தான் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது.
- அனைத்து குடிமக்களுக்கும் அடிப்படை சம உரிமை கிடைப்பதை உறுதி செய்ய, மாற்றுத் திறனாளிகளை விலக்கி வைக்க வகை செய்யும் எந்த ஒரு பாகுபாட்டையும் தடை செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- மேலும் அரசியலமைப்பு விதிகள் 14, 15, 16, 21 ஆகியவற்றிற்கு எதிரானது என்றும் கூறியுள்ளது.
- தமிழ்நாடு மற்றும் ராஜஸ்தானில் பார்வைக் குறைபாடு உடையவர்கள் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- கடந்த 2009-ம் ஆண்டு தமிழ்நாட்டில் முதல் நபராக டி.சக்கரவர்த்தி நீதித் துறை அதிகாரியாக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 14. சரக்கு போக்குவரத்து மசோதா

- நாட்டின் வளர்ந்து வரும் கப்பல் துறையை ஆதரிக்கும் முயற்சியாக, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் ஸ்ரீ சர்பானந்த சோனோவால், கப்பல் போக்குவரத்து ஆவணங்களுக்கான சட்ட கட்டமைப்பை புதுப்பித்து எளிமைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட 2025 ஆம் ஆண்டு சரக்கு போக்குவரத்து மசோதாவை அறிமுகப்படுத்தினார்.
- காலனித்துவ கால இந்திய சரக்கு போக்குவரத்து மசோதாக்கள், 1856 ஐ மாற்றும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 15. ரயில்வே திருத்த மசோதா

- ரயில்வே வாரியத்தின் சுதந்திரமான செயல்பாட்டை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் மத்திய அரசு கொண்டுவந்த ‘ரயில்வே சட்டத் திருத்த மசோதா-2024’ மசோதாவுக்கு

SMART LEADERS IAS ACADEMY

மாநிலங்களவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

- கடந்த ஆண்டு டிசம்பரில் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.
- 1905 ரயில்வே வாரிய சட்டத்தை ரத்து செய்து, ரயில்வே வாரியத்தை ரயில்வே சட்டத்தின் (1989) கீழ் கொண்டு வருவதன் மூலம், வாரியத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் நியமனம், அவர்களுக்கான கல்வித் தகுதி, பதவிக் காலம் மற்றும் நிபந்தனைகளை வகுக்கும் பொறுப்பை மத்திய அரசு வசம் ஒப்படைக்க இந்த மசோதா வகை செய்கிறது.

## 16. எண்ணெய் வயல்கள் திருத்த மசோதா

- எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வு மற்றும் உற்பத்தியை நிர்வகிக்கும் தற்போதைய சட்டத்தை திருத்துவதற்கும், பெட்ரோலிய செயல்பாடுகளை சுரங்க நடவடிக்கைகளிலிருந்து பிரிப்பதற்கும் முயலும் மசோதா மார்ச் 12, 2025 அன்று மக்களவையால் நிறைவேற்றப்பட்டது.
- எண்ணெய் வயல்கள் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) திருத்த மசோதா, 2024 , எண்ணெய் வயல்கள் துறையில் முதலீட்டை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 17. பேரவை தலைவருக்கு எதிரான தீர்மானம் தோல்வி

- தமிழ்நாடு சட்டப்பேரவையில் நடந்த வாக்கெடுப்பில் பேரவை தலைவர் அப்பாவு மீதான எதிர்க்கட்சியின் நம்பிக்கை இல்லா தீர்மானம் தோல்வி அடைந்தது.

### விதி 179 சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் பதவி விலகல், பதவிநீக்கம், காலியிடம்

- சட்டமன்ற உறுப்பினராக இல்லாத பட்சத்தில் தனது பதவியை விட்டுக்கொடுக்க வேண்டும்.
- எந்த நேரத்திலும், சபாநாயகர், துணை சபாநாயகருக்கும், துணை சபாநாயகர், சபாநாயகருக்கும் தனது கையொப்பமிட்ட கடிதம் மூலம் தனது பதவியை ராஜினாமா செய்யலாம்.
- சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட்ட சட்டமன்றத் தீர்மானத்தின் மூலம் அவரது பதவியில் இருந்து நீக்கப்படலாம்.

## 18. புதிய குடியுரிமை மசோதா

- இந்தியாவில் சட்டவிரோத வருகையைக் கட்டுப்படுத்தும் வகையில், மக்களவையில் குடியுரிமை மற்றும் வெளிநாட்டினர் மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- இந்தியாவில் போலி பாஸ்போர்ட், போலி விசா பயன் படுத்தி நுழைந்தாலோ, தங்கியிருந்தாலோ, இந்தியாவை

SMART LEADERS IAS ACADEMY

விட்டு வெளியேறியது கண்டு பிடிக்கப்பட்டாலோ, அதிகபட் சம் 7 ஆண்டு சிறை தண்டனை, ரூ.10 லட்சம் அபராதம் விதிக்கப்படும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

## 19. விரைவு சிறப்பு நீதிமன்றங்கள்

- பாலியல் வன்கொடுமை மற்றும் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (POCSO) 2012 இன் கீழ் உள்ள குற்றங்களில் விரைவான மற்றும் காலக்கெடுவுடன் கூடிய நீதியை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு, விரைவு சிறப்பு நீதிமன்றங்கள் (FTSCs) திட்டத்தை மார்ச் 2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில், உச்ச நீதிமன்றம் POCSO வழக்குகளை விரைவாக முடிக்க உத்தரவிட்டது, இதன் விளைவாக 2019 அக்டோபர் 2 ஆம் தேதி FTSC திட்டம் தொடங்கப்பட்டது.

## 20. உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம்

- தமிழகத்தில் அனைத்து வகை உள்ளாட்சி அமைப்புகளிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு நியமன முறையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கிடும் வகையில், நடப்பு சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் தக்க சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் ஏற்கனவே 73-வது சட்டத் திருத்தத்தின்படி பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.
- 1996-ம் ஆண்டு பெண்களுக்கு முதன் முதலாக உள்ளாட்சிகளில் 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது, பின்னர் 2016-ம் ஆண்டு 50%-ஆக அதிகரிக்கப்பட்டது.
- 1989-ல் இந்தியாவிலேயே முதல் முறையாக அரசுப் பணிகளில், வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டது.
- 1990-ல் இந்தியாவிலேயே முதல்முறையாக பெண்களுக்குச் சம சொத்துரிமை வழங்கி, தனிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

## 21. எம்.பி.க்களுக்கான சம்பள உயர்வு

- ஏப்ரல் 1, 2025 முதல் எம்.பி.க்களின் சம்பளத்தில் 24% உயர்வை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- ஒரு மக்களவை அல்லது மாநிலங்களவை உறுப்பினர் மாதத்திற்கு ₹1.24 லட்சம் பெறுவார், இது முன்னதாக அவர்கள் பெற்ற ₹1 லட்சத்திலிருந்து அதிகமாகும்.

SMART LEADERS IAS ACADEMY

- தினக்கூலி ₹2,000-லிருந்து ₹2,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- முன்னாள் எம்.பி.க்களுக்கான ஓய்வூதியம் மாதம் ₹25,000 லிருந்து ₹31,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- எம்.பி.க்களின் பதவிக் காலத்தில், அவர்களுக்கு புதுதில்லியில் வாடகை இல்லாத வீடு வழங்கப்படுகிறது.

## 22. கொதிகலன் சட்ட மசோதா

- 100 ஆண்டுகள் பழைமை வாய்ந்த சட்டத்துக்கு மாற்றாக கொண்டு வரப்பட்ட புதிய கொதிகலன் சட்ட மசோதா-2024 மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- கொதிகலன்களை ஒழுங்குபடுத்துதல், நீராவி கொதிகலன்களின் வெடிப்பு அபாயத்திலிருந்து மக்களின் உயிர் மற்றும் சொத்துக்களைப் பாதுகாத்தல், கொதிகலன் பதிவு நடைமுறையில் சீரானதன்மை ஆகியவற்றுக்கு வழிவகுக்கும் வகையில் நூற்றாண்டு பழைமையான 1923-ஆம் ஆண்டு கொதிகலன் சட்டத்துக்கு மாற்றாக இந்தப் புதிய சட்ட மசோதா கொண்டு வரப்பட்டது.

## 23. பேரிடர் மேலாண்மை திருத்த மசோதா 2024 நிறைவேற்றம்

- பேரிடர் மேலாண்மை திருத்த மசோதா 2024 குரல் வாக்கெடுப்பு மூலம் மாநிலங்களவையில் (மார்ச் 25) நிறைவேற்றப்பட்டது.
- பேரிடர் காலங்களில் மாநிலங்களின் திறமையான மீட்புப் பணிகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இச்சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.
- பேரிடர் மேலாண்மை சட்டம் 2005 -ன் படி பேரிடர்களைக் கையாள்வதில் மாநில அரசுகள் சிரமங்களைச் சந்திப்பதாகவும், இதில் உள்ள சவால்கள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய பரிந்துரைகளை மாநில அரசுகளிடமிருந்து பெற்று இந்தச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது.

## 24. மத்திய அரசு ஊழியர்களுக்கு 2 சதவீத அகவிலைப்படி உயர்வு

- மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படியை 2 சதவீதம் அதிகரிக்க அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.
- இதனால் அகவிலைப்படி 53% இலிருந்து 55% ஆக அதிகரிக்கும்.

## 25. கன்னித்தன்மை பரிசோதனைக்கு கட்டாயப்படுத்துவது சட்டவிரோதம்: சத்தீஸ்கர் உயர்நீதிமன்றம்

- கன்னித்தன்மை பரிசோதனை மேற்கொள்ள பெண்களைக் கட்டாயப்படுத்துவது அரசமைப்புச் சட்டப் பிரிவு 21-ஐ மீறுவதாகும் என்று சத்தீஸ்கர்

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

- அரசமைப்புச் சட்டத்தின் 21-ஆவது பிரிவு வாழ்வுரிமை, தனிப்பட்ட சுதந்திரம் மட்டுமின்றி கண்ணியமாக வாழ்வதற்கான உரிமையையும் வழங்குகிறது.
- இந்த உரிமை பெண்களுக்கு மிகவும் முக்கியம். அடிப்படை உரிமைகளின் மிக முக்கிய அங்கமாக அந்தச் சட்டப் பிரிவு உள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

## 26. வக்ஃப் (திருத்த) மசோதா, 2024

- மத்திய அரசு வக்ஃப் (திருத்த) மசோதா, 2024 ஐ நாடாளுமன்றத்தில் மீண்டும் அறிமுகப்படுத்தியது.
- இந்த மசோதா "பயன்பாட்டின் அடிப்படையில் வக்ஃப்" என்ற கருத்தை நீக்குகிறது, அதாவது வக்ஃப் (மசூதிகள் போன்றவை) என தொடர்ந்து பயன்படுத்தப்படும் சொத்துக்கள் வக்ஃப் என அங்கீகரிக்க அதிகாரப்பூர்வ ஆவணங்கள் (வக்ஃப்நாமா) தேவைப்படும்.
- வக்ஃப் சொத்துக்களின் கணக்கெடுப்பை மேற்பார்வையிட, சர்வே ஆணையருக்குப் பதிலாக மாவட்ட ஆட்சியர் அல்லது பிற மூத்த அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்று மசோதா கூறுகிறது.
- மாநில அளவிலான வக்ஃப் வாரியங்களில் முஸ்லிம் அல்லாத தலைமை நிர்வாக அதிகாரிகள் மற்றும் உறுப்பினர்களை நியமிக்க அனுமதிப்பதை இந்த மசோதா முன்மொழிகிறது.
- இந்த மசோதா 1995 சட்டத்தின் பிரிவு 107 ஐ நீக்கி, வரம்புச் சட்டத்தை (1963) வக்ஃப் சொத்துக்களுக்குப் பொருந்தும் வகையில் மாற்றுகிறது.
- இந்த மாற்றம், 12 ஆண்டுகளுக்கும் மேலாக வக்ஃப் சொத்தை சட்டவிரோதமாக வைத்திருந்த ஒருவர், அதை பாதகமான உடைமை மூலம் உரிமை கோர அனுமதிக்கிறது.

## 27. மணிப்பூரில் ஜனாதிபதி ஆட்சி

- மணிப்பூரில் ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டதை உறுதிப்படுத்தும் சட்டப்பூர்வ தீர்மானத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- பிரிவு 356: ஒரு மாநில அரசு அரசியலமைப்பின் படி செயல்பட முடியாவிட்டால், மத்திய அரசு, அரசு இயந்திரத்தின் நேரடி கட்டுப்பாட்டை எடுக்கலாம்.
- ஆறு மாதங்களுக்கு செல்லுபடியாகும் & படிப்படியாக மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம்.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

- பாராளுமன்ற ஒப்புதல் இல்லாமல் எந்த நேரத்திலும் ஜனாதிபதியால் ரத்து செய்யப்படலாம்.
- பிரிவு 365: ஒரு மாநிலம் ஒன்றியத்தால் வழங்கப்பட்ட உத்தரவுகளைப் பின்பற்றத் தவறினால், ஜனாதிபதி ஆட்சியைப் பிரகடனப்படுத்தலாம்.
- இது முதன்முறையாக PEPSU (பாட்டியாலா மற்றும் கிழக்கு பஞ்சாப் மாநில ஒன்றியம்) மாநிலத்திலும் (1954) பின்னர் கேரளாவிலும் (1959) விதிக்கப்பட்டது.

## 28. ஒடிசா தினம், 1 ஏப்ரல் 2025

- 1936 ஆம் ஆண்டு ஒடிசா ஒரு சுதந்திர மாநிலமாக உருவானதை நினைவுகூரும் வகையில், ஒடிசா நிறுவன தினம் என்றும் அழைக்கப்படும் **உத்கல் திவாஸ், ஏப்ரல்** 1 அன்று கொண்டாடப்படுகிறது.
- 1936 ஆம் ஆண்டு மாநில அந்தஸ்து பெறுவதற்கு முன்பு, பீகார் மற்றும் ஜார்க்கண்டுடன் சேர்ந்து, ஒடிசா வங்காள மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்தது.
- ஏப்ரல் 1, 1936 அன்று, பிரிட்டிஷ் அரசாங்கம் பீகார் மற்றும் ஒரிசா மாகாணத்திலிருந்து ஒடிசாவை அதிகாரப்பூர்வமாகப் பிரித்து, அதற்கு சுதந்திரமான நிர்வாக அந்தஸ்தை வழங்கியது.
- மொழியியல் அடிப்படையில் உருவாக்கப்பட்ட முதல் இந்திய மாநிலம் ஒடிசா (விடுதலைக்கு முன்னர்).

## 29. மசோதாக்களுக்கு உச்சநீதிமன்றம் ஒப்புதல்

- தமிழக அரசின் 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் அவற்றை ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்தது சட்டவிரோதம் என அறிவித்துள்ள உச்ச நீதிமன்ற நீதிபதிகள், அந்த 10 மசோதாக்களும் சட்டமாகி அமலுக்கு வந்துவிட்டதாக அறிவித்துள்ளனர்.

### உச்சநீதிமன்ற தீர்ப்பு

- அரசியல் சாசன பிரிவு 200-ன் படி ஆளுநர் தனக்குரிய அதிகாரத்தை தாண்டி வேறு முடிவுகளை எடுக்க முடியாது.
- ஆளுநருக்கென முழுமையான வீட்டோ அதிகாரமோ, அல்லது தன்னிச்சையான பாக்கெட் வீட்டோ அதிகாரமோ கிடையாது.
- அவர் அமைச்சரவையின் ஆலோசனைப்படியே நடக்க கடமைப்பட்டவர்.
- முதல்முறையாக அனுப்பி வைக்கப்படும் மசோதாவை ஆளுநர் நிறுத்தினால் அவர் அரசியல் சாசன பிரிவு 200-ன் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.
- ஒரு மசோதாவுக்கு ஒப்புதல் வழங்க மறுப்பதாக வெறுமனே அறிவிக்க முடியாது. ஒரு

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

மசோதா மறுநிறைவேற்றம் செய்து அனுப்பி வைக்கப்பட்டால் அதை குடியரசுத் தலைவரின் முடிவுக்கு அனுப்பி வைக்க முடியாது.

- அதேநேரம் இரண்டாவது முறையாக அனுப்பி வைக்கப்பட்ட மசோதா, முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட மசோதாவில் இருந்து வேறுபட்டால் மட்டுமே அதை விதிவிலக்காக கருதி குடியரசுத் தலைவருக்கு அனுப்ப முடியும்.
- சட்டப்பேரவை நிறைவேற்றிய ஒரு மசோதாவை நிறுத்திவைத்து குடியரசுத் தலைவருக்கு அனுப்ப ஆளுநர் முடிவு செய்தால் அது தொடர்பாக அமைச்சரவை ஆலோசனைப்படி ஒரு மாத காலத்துக்குள் ஆளுநர் முடிவு எடுக்க வேண்டும்.
- அமைச்சரவையின் ஆலோசனைக்கு புறம்பாக அந்த மசோதாக்களை நிறுத்திவைப்பதாக இருந்தால், ஆளுநர் அதிகபட்சமாக 3 மாதங்களுக்குள் அவற்றை திருப்பி அனுப்ப வேண்டும்.
- அதேவேளை அந்த மசோதாக்கள் மாநில சட்டப்பேரவையில் மறுநிறைவேற்றம் செய்யப்பட்டு மீண்டும் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டால் அந்த மசோதாக்கள் மீது ஒரு மாதத்துக்குள் ஒப்புதல் அளிக்க வேண்டும்.
- ஆளுநரின் இந்த முடிவு சட்டரீதியாக நீதிமன்றத்தின் ஆய்வுக்கு உட்பட்டதே.
- ஆளுநர் இந்த மசோதாக்களை ஆண்டு கணக்கில் கிடப்பில் போட்டு தாமதப்படுத்தியதை கருத்தில் கொண்டு, 10 மசோதாக்களும் ஆளுநருக்கு அனுப்பப்பட்டபோதே அவை சட்டமாகி நடைமுறைக்கு வந்துவிட்டன என உச்ச நீதிமன்றத்தின் தனிப்பட்ட அதிகாரத்தை (விதி 142) பயன்படுத்தி அறிவிக்கிறோம்.

## 30. கடலோர கப்பல் போக்குவரத்து மசோதா, 2024

- கடலோர கப்பல் போக்குவரத்து துறையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கடலோர கப்பல் போக்குவரத்து மசோதா, 2024 - ஐ மக்களவை நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதா, வணிகக் கப்பல் சட்டம், 1958 இன் கீழ் காலாவதியான கப்பல் மையப்படுத்தப்பட்ட விதிகளை, இந்திய நிலைமைகளுக்கு ஏற்ப எதிர்கால நோக்குடைய, தனித்த சட்டத்துடன் மாற்றுகிறது.
- MoEFCC (2021) கூற்றுப்படி, இந்தியாவின் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தில் போக்குவரத்து 10–11% பங்களிக்கிறது, இதில் சாலைகள் 90%, ரயில் 3% மற்றும் நீர்வழிகள் 1% க்கும் குறைவாக உள்ளன.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

31. **விமானப் பொருட்களின் நலன் பாதுகாப்பு மசோதா 2025**

- விமானப் போக்குவரத்துத் துறையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட விமானப் பொருட்களில் நலன் பாதுகாப்பு மசோதா, 2025 ஐ மக்களவை நிறைவேற்றியுள்ளது.
- இது சர்வதேச மரபுகளுடன் இந்திய சட்டங்களை சீரமைப்பதன் மூலம் இந்தியாவில் விமான நிதியாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களுக்கான சட்டப் பாதுகாப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

32. PMLA **இன் கீழ் ஆன்லைன் விளையாட்டு**

- 2002 ஆம் ஆண்டின் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் (PMLA) கீழ், ஆன்லைன் ரியல்-பண விளையாட்டு நிறுவனங்களை "அறிக்கையிடும் நிறுவனங்கள்" என வகைப்படுத்த மத்திய அரசு முன்மொழிந்துள்ளது.
- முன்னதாக, 2023 ஆம் ஆண்டில் உண்மையான பண கேமிங் தளங்களில் பயனர்கள் செய்யும் முழு வைப்புத்தொகைக்கும் அரசாங்கம் 28% சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) விதித்தது.

33. **மாநில உரிமைகள் மீட்டெடுக்க உயர்நிலைக் குழு: முதல்வர் அறிவிப்பு!**

- மத்திய, மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்தவும், மாநில உரிமைகளை மீட்டெடுக்கவும் தேவையான ஆலோசனைகள், பரிந்துரைகளை வழங்க உயர்நிலைக் குழு அமைத்து முதல்வர் அறிவிப்பு வெளியிட்டார்.
- உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இதன் உறுப்பினர்களாக இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரியுமான அசோக் வரதன் ஷெட்டி, தமிழ்நாடு மாநில திட்டக் குழுவின் முன்னாள் துணைத் தலைவர் மு.நாகநாதன் ஆகியோர் இருப்பர்.
- 1969 -இல் அமைக்கப்பட்ட ராஜமன்னார் குழு மற்றும் ஒன்றிய- மாநில உறவுகள் குறித்த ஏனைய ஆணையங்களின் பரிந்துரைகளையும், 1971 முதல் நாட்டில் நிலவும் பல்வேறு அரசியல், சமூகம், பொருளாதார மற்றும் சட்டம் சார்ந்தவற்றில் இருக்கக்கூடிய வளர்ச்சியை உயர்நிலைக் குழு கருத்தில்கொண்டு ஆராய்ந்து அறிக்கைகளை வழங்கும்.
- நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படுத்தாத வகையில், நிர்வாகத் துறைகளிலும்,

SMART LEADERS IAS ACADEMY

பேரவைகளிலும், நீதிமன்றக் கிளைகளிலும் மாநிலங்கள் அதிகபட்ச தன்னாட்சி உரிமை பெற உரிய நடவடிக்கைகளை குழு பரிந்துரை செய்யும்.

## 34. எஸ்.சி. உள்ஒதுக்கீடு: முதல் மாநிலமாக அமல்படுத்தியது தெலங்கானா

- பட்டியலின சமூகத்தினருக்கு (எஸ்.சி.) வழங்கப்படும் இடஒதுக்கீட்டை மூன்றாகப் பிரிக்கும் வகைப்பாட்டை அமல்படுத்துவதற்கான அரசாணையை தெலங்கானா மாநிலம் வெளியிட்டது.
- இதன்மூலம் எஸ்.சி. பிரிவினருக்கான இடஒதுக்கீட்டில் உள்ஒதுக்கீடு வழங்க மாநிலங்களுக்கு அதிகாரம் உண்டு என கடந்த ஆண்டு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்குப் பிறகு நாட்டில் எஸ்.சி. வகைப்பாட்டை பிரித்து அமல்படுத்திய முதல் மாநிலம் என்ற பெருமையை தெலங்கானா பெற்றுள்ளது.

## 35. பிரிவு 355

- பகுதி XVIII (அவசரகால ஏற்பாடுகள்) இன் ஒரு பகுதி.
- பிரிவு 355, "ஒவ்வொரு மாநிலத்தையும் வெளிப்புற ஆக்கிரமிப்பு மற்றும் உள் குழப்பங்களிலிருந்து பாதுகாப்பதும், ஒவ்வொரு மாநிலத்தின் அரசாங்கமும் இந்த அரசியலமைப்பின் விதிகளின்படி மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதும் ஒன்றியத்தின் கடமை" என்று கட்டளையிடுகிறது.

## 36. அரசமைப்புச் சட்டப் பிரிவு 142-ஐ உயர்நீதிமன்றங்கள் பயன்படுத்த முடியாது: உச்சநீதிமன்றம்

- ‘அரசமைப்புச் சட்டத்தின் 142-ஆவது பிரிவு வழங்கும் சிறப்பு அதிகாரத்தை உயர்நீதிமன்றங்கள் பயன்படுத்த அனுமதிக்க முடியாது’ என்று உச்சநீதிமன்றம் திட்டவட்டமாக தெரிவித்தது.
- அதற்காக அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அதற்கு நாடாளுமன்றத்திற்குத் தான் அதிகாரம் உள்ளது எனவும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

## 37. சிந்து நதி நீர் ஒப்பந்தம்

- சமீபத்தில், காஷ்மீரின் பஹல்காமில் 26 பொதுமக்கள் கொல்லப்பட்ட ஒரு கொடிய தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து, சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை (IWT) இந்தியா இடைநிறுத்தியது.
- இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் சிந்து நதி நீர் ஒப்பந்தம் செப்டம்பர் 19, 1960 அன்று கையெழுத்தானது, உலக வங்கி ஒரு மத்தியஸ்தராகச் செயல்பட்டது.

SMART LEADERS IAS ACADEMY

- இந்த ஒப்பந்தம் மூன்று மேற்கு நதிகளான சிந்து, ஜீலம் மற்றும் செனாப் ஆகியவற்றை பாகிஸ்தானுக்கு கட்டுப்பாடற்ற பயன்பாட்டிற்காக ஒதுக்கியது, அதே நேரத்தில் இந்தியா மூன்று கிழக்கு நதிகளான ரவி, பியாஸ் மற்றும் சட்லெஜ் ஆகியவற்றை அதன் பிரத்தியேக பயன்பாட்டிற்காக தக்க வைத்துக் கொண்டது.

## 38. சிம்லா ஒப்பந்தம் இடைநிறுத்தம்

- ஜம்மு காஷ்மீரில் பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு இந்தியாவின் பதிலடியைத் தொடர்ந்து, 1972 ஆம் ஆண்டு சிம்லா ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாக பாகிஸ்தான் அறிவித்தது.
- சிம்லா ஒப்பந்தம் என்பது 1972 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் தேதி இமாச்சலப் பிரதேசத்தின் சிம்லாவில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கும் பாகிஸ்தான் அதிபர் சுல்பிகர் அலி பூட்டோவுக்கும் இடையே கையெழுத்தான இருதரப்பு ஒப்பந்தமாகும்.
- இது 1971 ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போருக்குப் பின்னர் கையெழுத்தானது.
- இது வங்காளதேசம் (முன்னர் கிழக்கு பாகிஸ்தான்) உருவாக்கத்திற்கும், ஒரு தீர்க்கமான இந்திய இராணுவ வெற்றிக்கும் வழிவகுத்தது.

## 39. பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு

- பிரதமர் தலைமையிலான CCS, பாதுகாப்புக் கொள்கை, செலவினம் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான விஷயங்கள் குறித்த முக்கியமான விவாதங்கள் மற்றும் முடிவுகளுக்கு பொறுப்பாகும்.
- தேசிய பாதுகாப்பு அமைப்புகளில் அதிகாரிகளை நியமிக்கும் உச்ச அமைப்பாகவும் இது உள்ளது.
- முதன்முதலில் சுதந்திர இந்தியாவில் 1947 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேருவால் உருவாக்கப்பட்டது.
- பிரதமரை அதன் தலைவராகக் கொண்ட இந்தக் குழுவில் பொதுவாக உள்துறை அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், நிதி அமைச்சர் மற்றும் வெளியுறவு அமைச்சர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர்.

## 40. மக்களவை துணை சபாநாயகர்

- மக்களவையின் செயல்பாட்டில் பாரபட்சமற்ற தன்மை மற்றும் தொடர்ச்சியை உறுதி செய்வதற்கு அரசியலமைப்பு ரீதியாக கருதப்பட்ட பதவியாக இருந்தபோதிலும், மக்களவையின் துணை சபாநாயகர் பதவி 17 வது மக்களவை முழுவதும் காலியாகவே இருந்தது, மேலும் 18 வது மக்களவையிலும்

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

தொடர்ந்து நிரப்பப்படாமல் உள்ளது.

- அரசியலமைப்புச் சட்டம் நியமனத்திற்கு எந்த நிலையான காலக்கெடுவையும் நிர்ணயிக்கவில்லை என்றாலும், பிரிவுகள் 93 மற்றும் 178 இல் "வேண்டும்" மற்றும் "விரைவில்" என்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவது தேர்தலை கட்டாயமாக்குகிறது.
- **பிரிவு** 93: மக்களவை, கூடிய விரைவில் , சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகராக 2 உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.
- **பிரிவு** 178: இது மாநில சட்டமன்றங்களின் சபாநாயகர்கள் மற்றும் துணை சபாநாயகர்களுக்கான தொடர்புடைய விதியைக் கொண்டுள்ளது.
- துணை சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேதியை சபாநாயகர் நிர்ணயிக்கிறார்.
- எதிர்க்கட்சி பல சந்தர்ப்பங்களில் மக்களவை துணை சபாநாயகர் பதவியை வகித்துள்ளது.
- **உதாரணம்:** UPA-I (2004–09), UPA-II (2009–14), மற்றும் பிரதமர்கள் வாஜ்பாய் (1999–2004), PV நரசிம்ம ராவ் (1991–96), மற்றும் சந்திர சேகர் (1990–91) ஆகியோரின் ஆட்சிக் காலத்தில்.

## 41. வாழ்க்கை மற்றும் சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமையின் ஒரு பகுதியாக டிஜிட்டல் அணுகல்

- அமர் ஜெயின் எதிர் இந்திய ஒன்றியம் & பிறர், 2025 வழக்கில், மின்-ஆளுமை மற்றும் நலன்புரி அமைப்புகளுக்கான உள்ளடக்கிய டிஜிட்டல் அணுகல் வாழ்க்கை மற்றும் சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமையின் ஒருங்கிணைந்த பகுதியாகும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் (SC) தீர்ப்பளித்தது.
- மேலும் மாற்றுத்திறனாளிகள் (PwDs) டிஜிட்டல் உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (KYC) செயல்முறையை மேலும் அணுகக்கூடியதாக மாற்றுவதற்கான வழிமுறைகளை வழங்கியது.
- பிரிவுகள் 21 (கண்ணியமான வாழ்க்கைக்கான உரிமை), 14 (சமத்துவம்), 15 (பாகுபாட்டிற்கு எதிரான பாதுகாப்பு) மற்றும் 38 (மாநிலக் கொள்கையின் வழிகாட்டுதல் கோட்பாடுகள்) ஆகியவற்றின் கீழ், பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு உலகளாவிய டிஜிட்டல் அணுகலை உறுதி செய்வது ஒரு அரசியலமைப்பு கடமையாகும்.

## 42. மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநில உதய தினம்

- 1960 ஆம் ஆண்டு மொழியியல் அடிப்படையில் பம்பாய் மாநிலத்தின் வரலாற்று

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

மறுசீரமைப்பை நினைவுகூரும் வகையில் 2025 ஆம் ஆண்டு மே 1 ஆம் தேதி, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டதன் 65-ம் ஆண்டு நிறைவைக் கொண்டாடின.

- சம்யுக்த மகாராஷ்டிரா இயக்கம் (1956) மும்பை மற்றும் விதர்பாவை உள்ளடக்கிய மராத்தி மொழி பேசும் மாநிலத்தைக் கோரியது.
- மகாகுஜராத் இயக்கம் (1928-1950கள்) சௌராஷ்டிரா மற்றும் கட்ச் ஆகியவற்றை உள்ளடக்கிய குஜராத்தி பேசும் மாநிலத்திற்கு அழைப்பு விடுத்தது.

## 43. தனிநபர் உறுப்பினர் மசோதாக்கள்

- இந்திய துணைக் குடியரசுத் தலைவர் சமீபத்தில் தனியார் உறுப்பினர் மசோதாக்களை (PMBs) "தொலைநோக்கு பார்வை கொண்டவை, எதிர்காலத்தை நோக்கமாகக் கொண்டவை மற்றும் இந்தியாவின் ஜனநாயகத்திற்கான தங்கச் சுரங்கம்" என்று வர்ணித்தார்.
- PMBகள் என்பது அமைச்சர்கள் அல்லாத (அதாவது அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இல்லாத) நாடாளுமன்ற உறுப்பினர்களால் (MPகள்) அறிமுகப்படுத்தப்படும் சட்டமன்ற முன்மொழிவுகளாகும்.
- சுதந்திரத்திற்குப் பிறகு, 14 PMB-கள் மட்டுமே இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெற்றுள்ளன. 1970 முதல் எந்த PMB-யும் இரு அவைகளிலும் நிறைவேற்றப்படவில்லை.
- நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட முதல் தனியார் உறுப்பினர் மசோதா, 1952 ஆம் ஆண்டு முஸ்லிம் வக்ஃப் மசோதா ஆகும், இது வக்ஃப் சொத்துக்களின் நிர்வாகம் மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- இது 1954 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டம் இயற்றப்படுவதற்கு வழிவகுத்தது, பின்னர் இது வக்ஃப் (திருத்தம்) சட்டம், 2025 என திருத்தப்பட்டது.
- 'திருநங்கைகளின் உரிமைகள்' மசோதா (2014) ராஜ்யசபாவில் 40 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட முதல் PMB ஆகும்.
- அது திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019 க்கு வழி வகுத்தது.

## 44. இந்தியாவில் சாதி கணக்கெடுப்பு

- இந்திய அரசாங்கம் 2021 ஆம் ஆண்டு தாமதமான மக்கள் தொகை கணக்கெடுப்பில் சாதி கணக்கெடுப்பைச் சேர்க்க ஒப்புதல் அளித்துள்ளது.
- சாதி கணக்கெடுப்பு என்பது நாடு தழுவிய மக்கள் தொகை

SMART LEADERS IAS ACADEMY

கணக்கெடுப்பின் போது தனிநபர்களின் சாதி அடையாளங்கள் குறித்த தரவுகளின் முறையான சேகரிப்பாகும்.

- "சாதி" என்ற சொல் ஸ்பானிஷ் வார்த்தையான 'காஸ்டா' என்பதிலிருந்து வந்தது.
- இதன் பொருள் 'இனம்' அல்லது 'பரம்பரை குழு'. போர்த்துகீசியர்கள் இதை இந்தியாவில் 'ஜாதி'யைக் குறிக்கப் பயன்படுத்தினர்.

**சாதி கணக்கெடுப்பின் வரலாற்று சூழல்**

- 1881 முதல் 1931 வரையிலான பிரிட்டிஷ் ஆட்சியின் போது மக்கள் தொகை கணக்கெடுப்பு பயிற்சிகளில் சாதி கணக்கெடுப்பு ஒரு வழக்கமான அம்சமாக இருந்தது.
- 1941 மக்கள் தொகை கணக்கெடுப்பிலும் சாதித் தகவல்கள் சேகரிக்கப்பட்டன, ஆனால் இரண்டாம் உலகப் போர் தொடங்கியதால் அதை வெளியிடவில்லை.
- 1951 மக்கள் தொகை கணக்கெடுப்பிலிருந்து, பட்டியல் சாதியினர் (SCs) மற்றும் பட்டியல் பழங்குடியினர் (STs) தவிர மற்ற அனைவருக்கும் சாதி கணக்கெடுப்பு நிறுத்தப்பட்டது, இதனால் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBCs) மற்றும் பிற சாதிக் குழுக்கள் குறித்த நம்பகமான தேசிய தரவு எதுவும் இல்லை.

பீகார், கர்நாடகா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் சமீபத்தில் தங்களுக்கென சாதி கணக்கெடுப்புகளை நடத்தின.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

# வரலாறு மற்றும் இந்திய தேசிய இயக்கம்

## தமிழ்நாடு

### 1. தொல்லியல் ஆய்வு கண்டறியப்பட்டு ஒரு நூற்றாண்டு நிறைவு

- சிந்துவெளி நாகரிகம் முதன்முதலில் 1924ம் ஆண்டு செப்டம்பர் 20ம் தேதி உலகுக்கு அறிவிக்கப்பட்டது.
- 'தி இல்லஸ்டிரேட்டட் லண்டன் நியூஸ்' என்ற இதழில் இந்திய தொல்லியல் துறை டைரக்டர் ஜெனரல் சர் ஜான் மார்ஷல் அதை அறிவித்தார்.
- ஆரியமும் சமஸ்கிருதமும்தான் இந்தியாவின் மூலம் என்று கற்பனையை வரலாறு என்று அதற்கு முன்னர் பலரும் சொல்லிக்கொண்டு வந்தார்கள், அதை மாற்றியது ஜான் மார்ஷலின் ஆய்வுகள்தான்.
- சிந்துவெளிப் புதிருக்கான உரிய விடையை கண்டுபிடித்து, சிந்துவெளி எழுத்து முறையை தெளிவாக புரிந்துகொள்ள உதவும் வழிவகையை தொல்லியல் அறிஞர்கள் ஏற்கும்படி வெளிக்கொணரும் நபர்கள் அல்லது அமைப்புக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.8.5 கோடி) பரிசாக வழங்கப்படும் என தமிழ்நாடு முதல்வர் அறிவித்தார்.
- "சிந்துவெளி வரிவடிவங்களும்; தமிழ்நாட்டு குறியீடுகளும்" எனும் ஆய்வு நூல் முதல்வர் வெளியிடப்பட்டது.
- ரூ.50 லட்சத்தில் அமைக்கப்பட உள்ள சர் ஜான் மார்ஷல் சிலைக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

### 2. தமிழ் நிலத்தில்தான் இரும்புக் காலம் தொடக்கம்: ஆதாரங்களுடன் முதல்வர் அறிவிப்பு

- 5,300 ஆண்டுகளுக்கு முன்பே உருக்கு இரும்புத் தொழில்நுட்பம் தமிழ் நிலத்தில் அறிமுகமாகிவிட்டதாக ஆதாரங்களுடன் முதல்வர் அறிவிப்பு வெளியிட்டார்.
- 'இரும்பின் தொன்மை' எனும் தலைப்பிலான நூலை முதல்வர் வெளியிட்டார்.
- கங்கைகொண்ட சோழபுரம், கீழடி திறந்தவெளி அருங்காட்சியகங்களை அமைக்க அடிக்கல் நாட்டினார்.
- அகழாய்வுத் தளங்கள்
- மாங்காடு (சேலம்), கீழ்நமண்டி (திருவண்ணாமலை), மயிலாடும்பாறை (கிருஷ்ணகிரி), ஆதிச்சநல்லூர், சிவகளை (தூத்துக்குடி)
- கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறையில் அகழாய்வுக் குழிகளில் இருந்து இரும்புப் பொருள்கள்

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

கிடைத்தன. இவை, கி. மு. 2172-இல் தமிழ்நாட்டில் இரும்பு பயன்படுத்தப்பட்டதாக உறுதிப்படுத்தின.

- தூத்துக்குடி மாவட்டம், ஆதிச்சநல்லூர் ஈமத்தளத்தில் இரும்பினாலான வாள்கள், கத்திகள், ஈட்டிகள், அம்பு முனைகள், மூன்று முனை ஈட்டி முதலான பொருள்கள் கிடைத்துள்ளன.
- இந்தப் பொருள்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில், தமிழ்நாட்டில் இரும்புப் பயன்பாட்டின் காலத்தை கி.மு. 3,000 ஆண்டின் இடைப் பகுதிக்குக் கொண்டு சென்றது.

## 3. மணப்பாறை முறுக்கு

- புவிசார் குறியீடு பெற்ற மணப்பாறை முறுக்குக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் அஞ்சல்துறை சார்பில் சிறப்பு அஞ்சல்தலை (ஜனவரி 2025) வெளியிடப்பட்டுள்ளது.

## 4. வெம்பக்கோட்டை அகழாய்வில் சுடுமண் கிண்ணம்

- விருதுநகர் மாவட்டம், வெம்பகோட்டை அருகே விஜயகரிசல்குளம் பகுதியில் 3-ஆம் கட்ட அகழாய்வு கடந்த ஆண்டு ஜூன் 18-ஆம் தேதி முதல் நடைபெற்று வருகிறது.
- 3-ஆம் கட்ட அகழாய்வில் இதுவரை தங்க நாணயம், செப்புக் காசுகள், சுடுமண் உருவப் பொம்மை, சதுரங்க ஆட்டக் காய்கள், கண்ணாடி மணிகள், வட்டச் சில்லுகள், சங்கு வளையல்கள் உள்ளிட்ட 3,400-க்கும் மேற்பட்ட தொல் பொருள்கள் கண்டறியப்பட்டன.
- மேலும், முதல்முறையாக 102 சென்டிமீட்டர் ஆழத்தில் ஈயம் கிடைத்துள்ளது.
- 2.04 மீட்டர் ஆழத்தில் 'தங்கத்தால் செய்யப்பட்ட மணி' ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த மணி, 6 மி.மீ சுற்றளவும், 4.7 மி.மீ கனமும், 22 மி.கிராம் எடையும் கொண்டதாக உள்ளது.
- இதுவரை வெம்பக்கோட்டை அகழாய்வில் தங்கத்தால் செய்யப்பட்ட 7 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 5. "இந்தியாவின் மருத்துவத் தலைநகராக திகழும் தமிழகம்!"

- தமிழகம் இன்றைக்கு இந்தியாவின் மருத்துவத் தலைநகராக இருக்கிறது.
- மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள், நகரங்கள் தோறும் அரசு மருத்துவமனைகள், கிராமங்கள் தோறும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், பெரிய நகரங்களில் பன்னோக்கு மருத்துவமனைகள், உயிர்காக்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 108 ஆம்புலன்ஸ் சேவை என்று உருவாக்கிய கட்டமைப்புதான்

SMART LEADERS IAS ACADEMY

மருத்துவ சேவையில் தமிழகத்தை இந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறது.

- மக்களைத் தேடி மருத்துவத் திட்டம் தமிழகத்தில் இருக்கக்கூடிய கோடிக்கணக்கான மக்களின் நலனில் அக்கறை செலுத்தி, அவர்களின் வாழ்நாளை நீட்டித்து இருக்கிறது.
- "இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48" பல உயிர்களைக் காப்பாற்றி, அவர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் நிம்மதியாக வாழ வைத்துக்கொண்டு இருக்கிறது.

6. **லண்டனில் சிம்பொனி அரங்கேற்றி இளையராஜா சாதனை**

- ஆசிய கண்டத்தில் இருந்து சிம் பொனியை எழுதி, அரங்கேற் றிய முதல் இசையமைப்பாளர் எனும் சாதனையை இளைய ராஜா படைத்துள்ளார்.
- இசை ஜாம்பவான்கள் மொஸார்ட், பீத்தோவன், சாய் கோவ்ஸ்கி ஆகிய சிம்பொனி இசைக் கலைஞர்கள் வரிசையில் இளையராஜாவும் இணைந்துள் ளார்.
- ஒரே நேரத்தில் பல்வேறு இசைக்கருவிகளை ஒன் றிணைத்து தரும் இசைதான் சிம் பொனி.

7. **தட்டச்சு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு 'தமிழ் 99' கீ போர்டை பயன்படுத்தி பயிற்சி**

- தகவல் தொழில்நுட்பத்துறை வெளியிட்ட அரசாணையின்படியும், தமிழ் இணைக்கல்விக் கழக இயக்குநரின் உத்தரவின்படியும், தமிழ் 99 விசைப்பலகை (கீ போர்டு) மட்டுமே தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ் தட்டச்சு விசைப்பலகை ஆகும். எனவே, தமிழ் 99 விசைப்பலகை மூலமாக தொழில்நுட்ப பயிலகங்கள் தமிழ் தட்டச்சு பயிற்சி அளிக்க வேண்டும்.
- மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட இன்ஸ்கிரிப்ட் விசைப்பலகை பெங்காலி, தேவநாகரி, குஜராத்தி, கன்னடம், மலையாளம், தமிழ், ஒடியா, தெலுங்கு உட்பட 12 மொழிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட விசைப்பலகையாக உள்ளது.
- இதை சரிசெய்ய மறைந்த முதல்வர் கருணாநிதி, தமிழறிஞர்களைக் கூட்டி, 99-ம் ஆண்டு மாநாடு (உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு அல்லது தமிழ் இணையம் 99 (TamilNet 99)) நடத்தி, விசைப்பலகை பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் உருவாக்கப்பட்டது தான் 'தமிழ் 99' விசைப்பலகை.

**தமிழ் இணைய மாநாடு**

- முதல் உலகத்தமிழ் இணைய மாநாடு 1997 ஆம் ஆண்டு மே, 17, 18 ஆம் நாளில் சிங்கப்பூரில் நடந்தேறியது. சிங்கப்பூரில் உள்ள நாங்யாங் பல்கலைக்

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

கழகப் பேராசிரியர் நா. கோவிந்தசாமியின் ஒட்டு மொத்தமான முயற்சியால் ‘தமிழ் இணையம் 97’ என்ற பெயரில் இந்நிகழ்வு நடைபெற்றுள்ளது.

- இரண்டாம் தமிழ் இணைய மாநாடு சென்னையில் நடத்தப்பட்டது. 1999ம் ஆண்டு பிப்ரவரி 7, 8 ஆம் நாட்களில் அன்றைய தமிழக முதல்வர் மு.கருணாநிதியின் முன்னிலையில் இம்மாநாடு நடைபெற்றது. இதற்கு உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு அல்லது தமிழ் இணையம் 99 (TamilNet 99) என்று பெயர் சூட்டப்பட்டது.
- இருபத்தோராவது தமிழ் இணைய மாநாடு - 2022 தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-ல் நடைபெற்றது.

**கணித்தமிழ் மாநாடு**

- வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் தமிழ்மொழியின் நிலையைக் குறித்து ஆராயவும் விவாதிக்கவும், புதிய சிந்தனைகளை உருவாக்கிக் கொள்ளவும், இளம் திறமையாளர்களை அடையாளம் காணவும், ‘பன்னாட்டு கணித்தமிழ் - 24’ என்கிற மாநாடு தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் இணையக் கல்விக் கழகம் சார்பில் 2024 பிப்ரவரி 8,9,10 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்றது.

8. **லோகோ விவகாரம்**

- தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை இலச்சினையில் ரூபாய் குறியீட்டிற்குப் பதிலாக 'ரூ' என மாற்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- ரூபாய் என்ற வார்த்தை 'வெள்ளியால் செய்யப்பட்ட' அல்லது 'வேலைப்பாடு நிறைந்த வெள்ளி நாணயம்' என்று பொருள்படும் 'ருப்யா' என்ற சமஸ்கிருத வார்த்தையில் தொடர்பு கொண்டுள்ளது.
- இந்தச் சொல் பல நூற்றாண்டுகளாக தமிழ் வர்த்தகம் மற்றும் இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளது, இன்றும் கூட, 'ரூபாய்' என்பது தமிழ்நாடு மற்றும் இலங்கையில் நாணயப் பெயராகவே உள்ளது.
- ரூபாய் சின்னம் '₹' என்பது சர்வதேச அளவில் நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உலகளாவிய நிதிப் பரிவர்த்தனைகளில் இந்தியாவின் அடையாளமாக செயல்படுகிறது.
- இந்திய ரூபாய்க்கென தனிக் குறியீடு கடந்த 2010-ம் ஆண்டு முதல் பயன்பாட்டுக்கு வந்தது.
- இதனை வடிவமைத்தவர் தமிழரான உதயகுமார் ஆவார்.

9. **‘தமிழர் நிதி நிர்வாகம்: தொன்மையும் தொடர்ச்சியும்’ ஆவண நூல் வெளியீடு**

- சங்ககாலம் முதல் சமூக நீதிக் காலம் வரையிலான தமிழர்களின் நிதி நிர்வாகச்

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

சிறப்புகளின் பெருந்தொகுப்பாகவும் வரலாற்று ஆவணமாகவும் 'தமிழர் நிதி நிர்வாகம்: தொன்மையும் தொடர்ச்சியும்' நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

- இதில் பண்டைய வணிகம், வரிவிதிப்பு முறைகள், காலனிய கால நிதிநிர்வாக நடைமுறைகள், நவீன தமிழகத்தின் நிதிநிலை அறிக்கைகள் ஆராயப்பட்டுள்ளன.

## 10. சிந்துவெளி நாகரிகத்தை வெளிப்படுத்திய ஜான் ஹுபர்ட் மார்ஷலுக்கு சிலை

- சிந்துவெளி நாகரிகத்தை வெளிப்படுத்திய சர் ஜான் ஹுபர்ட் மார்ஷல் சிலையை முதல்வர் திறந்து வைத்தார்.
- ஜான் ஹுபர்ட் மார்ஷல் 1902-ஆம் ஆண்டு தனது 26 வயதில் இந்தியத் தொல்லியல் கழகத்தின் தலைமை இயக்குநராகப் பொறுப்பேற்றார்.
- 1924-ஆம் செப்டம்பர் 20-ஆம் தேதியன்று வரலாற்றுச் சிறப்பு மிகுந்த சிந்துவெளிப் பண்பாட்டின் கண்டுபிடிப்பை உலகுக்கு அறிவித்தார்.
- சர் ஜான் ஹுபர்ட் மார்ஷல், இந்தியத் தொல்லியல் கழகத்தின் தலைமைப் பொறுப்பு வகித்த காலத்திலேயே இங்கிலாந்து நாட்டின் தொல்லியல் அறிஞர் அலெக்ஸாண்டர் ரீ மூலம் ஆதிச்சநல்லூர் அகழாய்வுகள் நடைபெற்றன.

## 11. தமிழ்-இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதி நூல்கள்

- கடந்த 2022-2023-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் "தமிழ்மொழியின் தொன்மையையும் செம்மையையும் நிலைநாட்டிட, பிற உலக மொழிகளுடன் தமிழின் மொழியியல் உறவு குறித்து அறிவியல் பூர்வமான ஆய்வுகளை மேற்கொள்வது அவசியமாகும்.
- தமிழ் மொழிக்கும் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்துக்கும் இடையிலான உறவை வெளிக்கொணரும் வகையில், தமிழ் வேர்ச்சொல் வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, தமிழ்-இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டம் செயல்படுத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது.
- அதன்படி, தமிழுக்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையிலான வேர்ச்சொல் உறவை ஆய்வுசெய்யும் இத்திட்டம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேற்பார்வையில் முதன்மைப் பதிப்பாசிரியர் கு. அரசேந்திரன் தலைமையில் ஜூலை 2022-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் முதன்மைப்

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

பதிப்பாசிரியர் உள்பட 20 அறிஞர்கள் பணிசெய்து வருகின்றனர். இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- அதனடிப்படையில் தமிழ்-இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டத்தின் பொது முன்னுரை நூலையும், முதல் தொகுதி நூலையும் சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் வெளியிட்டார்.

## 12. பாம்பன் கால்வாயை தூர்வார மண் பரிசோதனை தொடக்கம்

- பாம்பன் கால்வாயை தூர்வாருவதற்காக தமிழக அரசின் சிறு துறைமுகங்கள் துறை சார்பாக ஐஐடி நிபுணர்கள் குழு கடலுக்கு அடியில் மண்ணின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டு வருகிறது.
- நாட்டில் மிகப் பழமையான துறைமுகங்களில் பாம்பன் துறைமுகமும் ஒன்று. 15-ம் நூற்றாண்டில் ராமேசுவரத்தைச் சுற்றி கடல் இருந்தாலும் பாம்பனுக்கும் மண்டபத்துக்கும் இடையே குதிரையில்கூட பயணம் செய்யும் விதத்தில்தான் பாம்பன் கால்வாய் அமைந்திருந்தது.
- கி.பி.1480-ம் ஆண்டில் ஏற்பட்ட மிகப்பெரிய புயலால் இயற்கையாகவே மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரிணை இடையே பாம்பன் கால்வாய் பெரிதாக உருவானது.
- மேலும் கால்வாய் மூலம் பாம்பனும், மண்டபமும் துண்டிக்கப்பட்டு தனித் தீவாக ராமேசுவரம் உருவானது.
- ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1854-ம் ஆண்டில் முதன்முறையாக 4,400 அடி நீளத்துக்கு பாம்பன் கால்வாய் முதன் முதலாக தூர்வாரப்பட்டது.

## 13. மதுரை மரிக்கொழுந்து, விளாச்சேரி களிமண் பொம்மைகளுக்கு புவிசார் குறியீடு

- ஒரு குறிப்பிட்ட இடத்தை சேர்ந்த தனித்தன்மை வாய்ந்த பொருட்களுக்கு மத்திய அரசால் புவிசார் குறியீடு வழங்கப்படுகிறது.
- மதுரை மரிக்கொழுந்து மற்றும் விளாச்சேரி களிமண் பொம்மைகளுக்கு மத்திய அரசின் தொழில்துறை மற்றும் உற்பத்தி மேம்பாட்டு துறை புவிசார் குறியீடு வழங்கியுள்ளது.

**மரிக்கொழுந்து**

- மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளில், மரிக்கொழுந்து அதிகம் விளைகிறது.
- 16ம் நூற்றாண்டில் நடந்த மதுரை மீனாட்சி அம்மன் கோவில் திருக்கல்யாண விழாவில் மரிக்கொழுந்து பயன்படுத்தப்பட்டதற்கான பதிவுகள் உள்ளன.

**விளாச்சேரி களிமண்**

- மதுரை அருகே விளாச்சேரியில் தொழிலாளர்கள் தயாரிக்கும்

SMART LEADERS IAS ACADEMY

களிமண் பொம்மைகள், அப்பகுதியில் கிடைக்கும் இயற்கை மண்ணின் தனித்துவத்தால் பிரபலமானவை.

- விளாச்சேரி கீழக்குயில்குடி கருப்பசாமி கோவிலின் மூலவர் சிலை நூறு ஆண்டுகளுக்கும் முன்பு களிமண்ணால் உருவாக்கப்பட்டது என்பது இதன் வரலாற்றுச் சிறப்பை விளக்குகிறது.

**கும்பகோணம் வெற்றிலை**

- தற்போது கும்பகோணம் வெற்றிலைக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- பாரதியார் தனது கவிதையில், 'கங்கை நதிப்புறத்து கோதுமை பண்டம், காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்' என பாடியுள்ளார்.
- காவிரி ஆற்றின் தண்ணீர், மண்வளம் தான் கும்பகோணம் வெற்றிலைக்கு சிறப்பு சேர்க்கிறது.

**தோவாளை மாணிக்க மாலை**

- கன்னியாகுமரி மாவட்டத்தின் புவியியல் குறியீடு (GI) தயாரிப்புகளின் பட்டியலில், தோவாளையின் 'மாணிக்க மாலை', ஒரு தனித்துவமான மலர் கைவினைப் பொருளாகும், இது இப்போது மதிப்புமிக்க அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.
- இந்த மாலை பாரம்பரியமாக சிவப்பு மற்றும் வெள்ளை அரளி பூக்கள் மற்றும் சம்பா நார் ஆகியவற்றைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகிறது, இது நீர்நிலைகளில் காணப்படும் ஒரு பொதுவான நீண்ட புல் வகையாகும்.
- இந்த மாலை 140 ஆண்டு வரலாறு கொண்டது.

**செட்டிக்குளம் சின்ன வெங்காயம்**

- செட்டிக்குளம் பகுதியில் விளையும் சின்ன வெங்காயத்துக்கு மத்திய அரசு புவிசார் குறியீடு வழங்கியுள்ளதால் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
- தமிழகத்தின் பெரம்பலூர் மாவட்டத்தில் ஆண்டுக்கு 70 ஆயிரம் டன் சின்ன வெங்காயம் உற்பத்தியாகிறது.
- 15-18 அடுக்கு உலர்ந்த வெளிப்புற செதில்களைக் கொண்டுள்ள இந்த சின்ன வெங்காயத்தை ஓராண்டு வரை சேமித்து வைக்க முடியும்.

## 14. கச்சத்தீவு

- கச்சத்தீவு யாருக்குச் சொந்தம் என்ற பிரச்னை 1921 ஆம் ஆண்டு மெட்ராஸ் மற்றும் சிலோன் பிரிட்டிஷ் காலனித்துவ அரசாங்கங்களுக்கு இடையே தொடங்கியது.
- 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் இந்தியாவும் இலங்கையும் கையெழுத்திட்ட இரண்டு இருதரப்பு ஒப்பந்தங்கள் மூலம் தீர்க்கப்பட்டது.
- இந்த ஒப்பந்தங்கள் கச்சத்தீவு இலங்கைக்குச் சொந்தமானது என்பதை நிறுவியது மற்றும்

SMART LEADERS IAS ACADEMY

அவற்றின் பிரத்தியேக பொருளாதார மண்டலங்கள் (EEZs) உட்பட இரு நாடுகளுக்கும் இடையிலான கடல் எல்லைகளை வரையறுத்தது.

- இந்த ஒப்பந்தம் இந்திய மீனவர்கள் வருடாந்திர புனித அந்தோணியார் திருவிழாவிற்கு கச்சத்தீவுக்குச் செல்ல அனுமதித்தது, ஆனால் இலங்கைக் கடல் பகுதியில் மீன்பிடி நடவடிக்கைகளைத் தடை செய்தது.

## 15. பாம்பன் பாலம்

- கடலின் குறுக்கே பரந்து விரிந்து கிடக்கும் பாம்பன் பாலம், ராமேஸ்வரத்தை இந்தியாவின் பிரதான நிலப்பகுதியுடன் இணைக்கிறது.
- இது முதலில் 1914 ஆம் ஆண்டு கட்டப்பட்டு இந்தியாவின் முதல் கடல் பாலமாக செயல்பட்டது.
- தற்போது பழைய கட்டமைப்பின் வரம்புகளைக் கடந்து, நீடித்து உழைக்கும் தன்மை, மேம்பட்ட கடல்சார் வழிசெலுத்தல் மற்றும் எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் திறன் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் புதிய பாலம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- புதிய பாம்பன் பாலம், ரயில்வே அமைச்சகத்தின் கீழ் உள்ள நவரத்னா பொதுத்துறை நிறுவனமான ரயில் விகாஸ் நிகாம் லிமிடெட் (RVNL) நிறுவனத்தால் கட்டப்பட்டது.
- இது 72.5 மீட்டர் லிஃப்ட் ஸ்பான் கொண்டுள்ளது, இது கப்பல்கள் கடந்து செல்ல 17 மீட்டர் உயரத்தை உயர்த்த முடியும்.
- இது பழைய பாலத்தை விட 3 மீட்டர் உயரமானது மற்றும் கனரக சரக்கு ரயில்கள் மற்றும் வந்தே பாரத் போன்ற மேம்பட்ட அரை-அதிவேக ரயில்கள் இரண்டையும் பொருத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது இந்தியாவின் முதல் செங்குத்து லிஃப்ட் ரயில்வே கடல் பாலமாகும்.

## 16. குமரி அனந்தன் மறைவு

- இலக்கியச் செல்வர் என அழைக்கப்படும் குமரி அனந்தன், கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்து, காமராஜரின் அடியொற்றி காங்கிரஸ் இயக்கத்துக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.
- கடந்த 1980-84, 1985-88, 1989-91, 1991-96-ஆகிய ஆண்டுகளில் பேரவை உறுப்பினராகவும், 1977-80-ஆம்ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் சிறப்பாக பணியாற்றியுள்ளார்.
- நாடாளுமன்றத்தில் தமிழில் பேசும் உரிமையை குமரி அனந்தன் நிலைநாட்டியதை குறிப்பிட்ட முன்னாள் முதல்வர்

SMART LEADERS IAS ACADEMY

கருணாநிதி, தனிமரம் தோப்பாகாது என்ற பழமொழியை மாற்றி விட்டதாக புகழாரம் சூட்டியிருக்கிறார்.

- தமிழ்நாட்டுக்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்காகவும் பங்காற்றியதைப் பாராட்டி 2024-ஆம் ஆண்டு மாநில அரசின் சார்பில் தகைசால் தமிழர் விருது குமரி அனந்தனுக்கு வழங்கப்பட்டது.

17. **அரசாணைகளை தமிழில் மட்டுமே வெளியிட வேண்டும்: தமிழ் வளர்ச்சித் துறை செயலர் உத்தரவு**

- தமிழ் ஆட்சிமொழி சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும் அரசு அலுவலகங்களில் அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்மொழியை பயன்படுத்தவும், அரசாணைகள் தமிழில் மட்டுமே வெளியிடப்பட வேண்டும் என்று அரசுத்துறை செயலாளர்களுக்கு **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலர்** உத்தரவிட்டுள்ளார்.

## தேசியம்

1. **1,000 கிமீ மெட்ரோ உலகில் 3ஆவது பெரிய நாடு**

- உலகின் மூன்றாவது பெரிய மெட்ரோ நெட்வொர்க்கின் தாயகமாக இந்தியா மாறியுள்ளது.
- இந்தியா மெட்ரோ நெட்வொர்க் தளத்தில் இந்தியா உலகளவில் மூன்றாவது இடத்திலும், 2வது பெரிய மெட்ரோ நெட்வொர்க்காக மாறுவதற்கான நிலையில் உள்ளது.
- முதல் இரு இடங்களில் முறையே சீனா மற்றும் அமெரிக்கா நாடுகள் உள்ளன

**இந்தியாவில் மெட்ரோ வரலாறு:**

- 1984: இந்தியாவின் முதல் மெட்ரோ பாதை கொல்கத்தாவில் திறக்கப்பட்டது.
- 1995: டெல்லி மெட்ரோ
- 2002: டிஎம்ஆர்சி - முதல் மெட்ரோ நடைபாதையை டெல்லி
- 2011: பெங்களூரு மெட்ரோ
- 2017: சென்னை மெட்ரோ (கோயம்பேடு முதல் நேரு பூங்கா வரை)
- 2020: கொச்சி மெட்ரோ

2. **நக்சலிசம்**

- மேற்கு வங்காளத்தின் நக்சல்பாரியில் நிலப்பிரச்சனை தொடர்பாக நில உரிமையாளர்களுக்கு எதிரான கிளர்ச்சியாக நக்சலிசம் உருவானது.
- பின்னர் கிழக்கு இந்தியா முழுவதும் பரவியது.
- 2022 ஆம் ஆண்டில், நக்சலிசத்தால் ஏற்படும் வன்முறை மற்றும் இறப்புகள் 2010 உடன் ஒப்பிடும்போது முறையே 77% மற்றும் 90% குறைந்துள்ளன.

**பாதிக்கப்பட்ட மாநிலங்கள்:**

SMART LEADERS IAS ACADEMY

- சத்தீஸ்கர், ஜார்கண்ட், ஒடிசா, பீகார், மேற்கு வங்கம், ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம் மற்றும் கேரளா.

### 3. பல்கலைக்கழக மானிய ஆணைய (UGC) வரைவு விதிமுறைகள் 2025

- தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020 உடன் இணைக்கப்பட்ட துணைவேந்தர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்விப் பணிகளுக்கான தகுதி அளவுகோல்களை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட வரைவு விதிமுறைகளை UGC அறிவித்துள்ளது.

**துணைவேந்தர் ஆட்சேர்ப்பில் மாற்றங்கள்:**

- பொது நிர்வாகம், தொழில் மற்றும் பொதுக் கொள்கை போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் இப்போது துணைவேந்தர் பதவிகளுக்குத் தகுதியுடையவர்கள், குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் மூத்த நிலை அனுபவம் மற்றும் குறிப்பிடத்தக்க கல்விப் பங்களிப்புகள் தேவை.

**தேர்வுக் குழு அமைப்பு:**

- **மூன்று உறுப்பினர்கள் குழு:** வேந்தர் (தலைவர்), UGC மற்றும் பல்கலைக்கழகத்தின் உச்ச அமைப்பிலிருந்து பரிந்துரைக்கப்பட்டவர்கள்.

**தளர்வான NET தேர்வு:**

- பொறியியல் அல்லது தொழில்நுட்ப முதுகலை பட்டம் (55% மதிப்பெண்கள்) பெற்ற தேர்வர்கள் UGC தேசிய தகுதித் தேர்வில் (NET) தேர்ச்சி பெறாமல் உதவிப் பேராசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**பல்கலைக்கழக மானிய ஆணையம் (UGC)**

- பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் (UGC) கருத்து 1944 ஆம் ஆண்டின் சார்ஜென்ட் அறிக்கையிலிருந்து உருவானது, இது இந்தியாவில் தேசிய கல்வி முறையை முன்மொழிந்தது.
- இது 1945 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியக் குழுவை உருவாக்க வழிவகுத்தது. இது பல்கலைக்கழகங்களை மேற்பார்வையிடும் பணியைக் கொண்டிருந்தது.
- இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் தலைமையிலான பல்கலைக்கழக கல்வி ஆணையம் (1948), ஐக்கிய இராச்சியத்தின் UGC மாதிரியின் அடிப்படையில் குழுவை மறுசீரமைக்க பரிந்துரைத்தது.
- இதன் விளைவாக, UGC 1953 இல் முறையாக நிறுவப்பட்டது மற்றும் 1956 இல் UGC சட்டத்தின் கீழ் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக மாறியது.

SMART LEADERS IAS ACADEMY

4. **மராத்தி மொழிக்கு அதிகாரப்பூர்வமாக செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டது**
    - சமீபத்தில் (அக்டோபர் 03, 2024), மத்திய அமைச்சரவை மராத்தி, பாலி, பிராகிருதம், அஸ்ஸாமி மற்றும் பெங்காலி ஆகிய மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்தை வழங்கி, செம்மொழிகளை பதினொன்றாக உயர்த்தியது.
    - இந்தியாவில் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஒடியா ஆகிய ஆறு செம்மொழிகள் இருந்தன.
    - தமிழ் 2004 இல் செம்மொழியாகவும், 2005 இல் சமஸ்கிருதம், 2008 இல் கன்னடம், 2008 இல் தெலுங்கு, 2013 இல் மலையாளம், 2014 இல் ஒடியா மொழியும் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.
    - அனைத்து செம்மொழிகளும் அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

5. **குடியரசு தின விழா சிறப்பு விருந்தினராக இந்தோனேசிய அதிபர் சுபியாந்தோ பங்கேற்பு**
    - இந்தியாவின் 76-வது குடியரசு தின விழாவில் இந்தோனேசிய அதிபர் பிரபோவோ சுபியாந்தோ சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.
    - கடந்த ஆண்டு (2024) குடியரசு தின விழாவில் பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.
    - 1995 - தென்னாப்பிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா
    - 2023-ஆம் ஆண்டு எகிப்து அதிபர் அப்தெல் ஃபத்தா எல்-சிசி, 2020-இல் பிரேசிலின் அப்போதைய அதிபர் ஜெய்ர் போல்சனாரோ மற்றும் 2015-இல் அமெரிக்காவின் அப்போதைய அதிபர் பராக் ஒபாமா ஆகியோர் குறிப்பிடத்தக்க பங்கேற்பாளர்களில் அடங்குவர்.

SMART LEADERS IAS ACADEMY

6. **ஜனவரியை தமிழ் மொழி, பாரம்பரிய மாதமாக அறிவிக்க தீர்மானம்**
    - ஜனவரியை தமிழ் மொழி மற்றும் பாரம்பரிய மாதமாக அறிவிக்கக் கோரி, அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

7. **பாங்சாவ் பாஸ் விழா (PPIF) 2025**
    - அருணாச்சலப் பிரதேசத்தில் நடைபெற்ற பாங்சாவ் பாஸ் சர்வதேச விழா (PPIF) 2025, இரண்டாம் உலகப் போரின் போது பிராந்தியத்தின் கலாச்சார பாரம்பரியத்தையும் அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் கொண்டாடுகிறது.
    - அருணாச்சலப் பிரதேசத்தின் நம்போங்கில் 2007 முதல் ஆண்டுதோறும் ஜனவரி 3வது வாரத்தில் நடத்தப்படுகிறது.


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

- வடகிழக்கு இந்தியா மற்றும் மியான்மர் இடையே கலாச்சார பரிமாற்றத்தை ஊக்குவிக்கிறது.
- டாங்சா நாகா பழங்குடியினர் மற்றும் பிற உள்ளூர் சமூகங்களின் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் நாட்டுப்புற நடனங்கள் (பிஹு, மூங்கில் நடனம், டாங்சா ரோங்ராண்ட் போர் நடனம்), கலைகள், கைவினைப்பொருட்கள், இன உணவுகள் மற்றும் பாரம்பரிய விளையாட்டுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

## 8. இந்தியாவின் முதல் தொல்லியல் அனுபவ அருங்காட்சியகம்

- மத்திய கலாச்சார அமைச்சகம், மாநில தொல்லியல் மற்றும் அருங்காட்சியக இயக்குநரகத்துடன் இணைந்து, அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட கலைப்பொருட்கள் மூலம் வாட்நகரின் (குஜராத்) பல அடுக்கு கலாச்சார வரலாற்றை வழங்க அருங்காட்சியகத்தை உருவாக்கியது.
- இந்த அருங்காட்சியகம் ஆடியோ-விஷுவல் படங்கள் மற்றும் ஊடாடும் காட்சிகளுடன் ஒரு அதிவேக அனுபவத்தை வழங்குகிறது.

## 9. சுபாஷ் சந்திர போஸ் ஆப்த பிரபந்தன் புரஸ்கார் (சுபாஷ் சந்திரபோஸ் பேரிடர் மேலாண்மை விருது)-2025

- பெருங்கடல் தகவல் சேவைகளுக்கான இந்திய தேசிய மையம் (INCOIS - Indian National Centre for Ocean Information Services) பேரிடர் மேலாண்மையில் சிறப்பாகப் பணியாற்றியதற்காக நிறுவனப் பிரிவில் சுபாஷ் சந்திரபோஸ் பேரிடர் மேலாண்மை விருது-2025க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்த விருது ஒவ்வொரு ஆண்டும் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பிறந்த நாளான ஜனவரி 23 அன்று அறிவிக்கப்படுகிறது.
- கடல் தகவல் சேவைகளுக்கான இந்திய தேசிய மையம் (INCOIS) 1999 இல் ஹைதராபாத், தெலுங்கானாவில் நிறுவப்பட்டது.
- INCOIS ஆனது 2024 ஆம் ஆண்டில் கடல்சார் சேவைகளில் புவிசார் உலக சிறப்பு விருதையும், 2021 இல் பேரிடர் அபாயக் குறைப்பு சிறப்பு விருதையும் பெற்றது.
- சுபாஷ் சந்திரபோஸ் பேரிடர் மேலாண்மை விருது 2022 முதல் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## 10. விஜய் துர்க்

- ஆயுதப் படைகளுக்குள் காலனித்துவ நடைமுறைகள் மற்றும் மனநிலைகளை நீக்குவதற்கான சமீபத்திய படியாக, கிழக்கு இராணுவக் கட்டளையின் தலைமையகமான கொல்கத்தாவில் உள்ள

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

வில்லியம் கோட்டை, விஜய் துர்க் என மறுபெயரிடப்பட்டுள்ளது.

- கூடுதலாக, வில்லியம் கோட்டைக்குள் இருக்கும் கிச்சனர் ஹவுஸ், மானேக்சா ஹவுஸ் என்றும், முன்னர் செயிண்ட் ஜார்ஜ் கேட் என்று அழைக்கப்பட்ட தெற்கு கேட், இப்போது சிவாஜி கேட் என்றும் பெயர் மாற்றப்பட்டுள்ளது.
- கோட்டை உள்ளே இருக்கும் ரசல் பிளாக், சுதந்திர போராட்ட வீரர் ஜதிர்ந்திரநாத் முகர்ஜியின் நினைவாக 'ஜதின் பிளாக்' என, மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- இங்கிலாந்தின் மன்னர் மூன்றாம் வில்லியமின் பெயரிடப்பட்ட வில்லியம் கோட்டை, 1781 ஆம் ஆண்டு கிழக்கு இந்திய கம்பெனி ஆட்சிக் காலத்தில் ஹூக்ளி நதிக்கரையில் கட்டப்பட்டது.
- 1758 ஆம் ஆண்டு ராபர்ட் கிளைவ் வில்லியம் கோட்டையின் கட்டுமானத்தைத் தொடங்கினார், 1781 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.
- விஜய் துர்க் என்பது மகாராஷ்டிராவின் சிந்துதுர்க் கடற்கரையில் உள்ள மிகப் பழமையான கோட்டையின் பெயர் ஆகும்.

## 11. ரயில் கோட்டங்கள் எல்லைமாற்றம்

- ஆந்திரத்தின் விசாகப்பட்டினத்தை தலைமையிடமாகக் கொண்டு தெற்கு கடலோர ரயில்வே எனும் புதிய மண்டலத்தை உருவாக்க மத்திய அமைச்சரவை கடந்த 2019-ஆம் ஆண்டு முன்மொழிந்தது.
- இதையொட்டி, கிழக்கு கடலோர ரயில்வேயின் வால்டேர் கோட்டம் 2 கோட்டங்களாக பிரிக்கப்படுகின்றன.
- ஒரு கோட்டம் விசாகப்பட்டினத்தை தலைமையிடமாகக் கொண்டு தெற்கு கடலோர ரயில்வே வரம்பிலும் மற்றொரு கோட்டம் ஒடிஸாவின் ராயகடாவைத் தலைமையிடமாகக் கொண்டு கிழக்கு கடலோர ரயில்வே வரம்பிலும் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**ரயில்வே மண்டலங்கள்**

- இந்திய ரயில்வேயின் முதல் பயணிகள் ரயில் பம்பாயிலிருந்து தானே வரை 1853 ஆம் ஆண்டு தனது இயக்கத்தைத் தொடங்கியது. இந்த அமைப்பு 1951 ஆம் ஆண்டு தேசியமயமாக்கப்பட்டது.
- இந்திய ரயில்வேயில் 70 கோட்டங்களும், கொல்கத்தா மெட்ரோ ரயில்வே உட்பட 19 மண்டலங்களும் உள்ளன.
- தென் கடற்கரை ரயில்வே மண்டலம் இந்திய ரயில்வேயின் 18வது ரயில்வே மண்டலமாகும்.

SMART LEADERS IAS ACADEMY

## 12. 'ஆதி மஹோத்சவ' விழா

- குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பிப்ரவரி 16, 2025 அன்று புதுதில்லியில் தேசிய பழங்குடியினர் திருவிழாவான 'ஆதி மஹோத்சவ' விழாவைத் தொடங்கி வைத்தார்.
- இந்த விழா நமது நாட்டின் பழங்குடியின சமூகங்களின் வளமான பாரம்பரிய கலாச்சாரத்தை எடுத்துரைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த விழா கடந்த 2023-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

## 13. அதிக எண்ணிக்கையிலான கழுகு

- நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான கழுகுகளைக் கொண்ட மாநிலமாக மத்தியப் பிரதேசம் மாறியுள்ளது. வனத்துறையால் சமீபத்தில் நடத்தப்பட்ட மாநில அளவிலான கழுகுகள் கணக்கெடுப்பில், கழுகுகளின் எண்ணிக்கை 12 ஆயிரத்து 981 ஆக அதிகரித்துள்ளது.

## 14. சத்ரபதி சிவாஜி கோட்டைகள்

- சத்ரபதி சிவாஜி மகாராஜுடன் தொடர்புடைய 12 கோட்டைகளுக்கு யுனெஸ்கோ உலக பாரம்பரிய அந்தஸ்தைப் பெற மகாராஷ்டிரா கலாச்சார விவகார அமைச்சர் தலைமையிலான உயர்மட்டக் குழு பாரிஸ் சென்றுள்ளது.
- **ராய்காட் கோட்டை:** இது 1674 முதல் 1818 வரை மராட்டியப் பேரரசின் தலைநகராக இருந்தது.
- **ராஜ்காட் கோட்டை:** சிவாஜியின் முதல் தலைநகரம்.
- **பிரதாப்காட் கோட்டை:** 1659 ஆம் ஆண்டு சிவாஜி மகாராஜுக்கும் அப்சல் கானுக்கும் இடையிலான புகழ்பெற்ற போர் நடந்த இடமாகும்.
- **சிந்துதுர்க் கோட்டை:** கொங்கண் கடற்கரையிலிருந்து ஒரு தீவில் அமைந்துள்ளது.
- **விஜயதுர்க் கோட்டை:** வலுவான கடலோரப் பாதுகாப்பின் காரணமாக இது 'கிழக்கின் ஜிப்ரால்டர்' என்று அழைக்கப்படுகிறது.

## 15. இந்தியாவில் பன்மொழி

- 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு தரவுகளின் ஆய்வு, 26.02% இந்தியர்கள் மட்டுமே இருமொழி பேசுபவர்கள் மற்றும் 7.1% பேர் மும்மொழி பேசுபவர்கள் என்பதைக் காட்டுகிறது.
- கோவா - 77.21% இருமொழி பேசுபவர்கள் , 50.82% மும்மொழி பேசுபவர்கள் (மும்மொழி 50% ஐ விட அதிகமாக உள்ள ஒரே மாநிலம்).
- பிற உயர் தரவரிசை மாநிலங்கள்: அருணாச்சலப் பிரதேசம் (64.03%), சிக்கிம்

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

(63.71%), நாகாலாந்து (62.15%), மகாராஷ்டிரா (51.1%).

- 43.63% இந்தியர்கள் இந்தி மொழியை தங்கள் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர்.
- தென்னிந்தியாவில் ஆந்திரப் பிரதேசம் (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில் தெலுங்கானா உட்பட) 3.69% என்ற இந்தி பேசும் விகிதத்தை அதிகமாகக் கொண்டிருந்தது.
- தமிழ்நாடு மற்றும் கேரளா உட்பட 5 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் 1% க்கும் குறைவான மக்கள் இந்தி பேசுகிறார்கள்.

## 16. ஆசிய சிங்கங்கள் கணக்கெடுப்பு

- 16-ஆவது ஆசிய சிங்கங்கள் கணக்கெடுப்பு பணிகள் வரும் மே மாதம் தொடங்கவுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.
- உலக வனவிலங்குகள் தினத்தையொட்டி (மார்ச் 3) குஜராத்தின் ஜுனாகத் மாவட்டத்தில் தேசிய வனவிலங்கு வாரியத்தின் 7-ஆவது கூட்டத்துக்கு தலைமை தாங்கியபோது அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.
- தமிழகத்தின் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மனித-வனவிலங்கு இடையேயான மோதல்களை தடுக்கும் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கான சிறப்பு மையம் அமைக்கப்படும் எனவும் அவர் அறிவித்தார்.

## 17. காளியாட்டம்

- காளியாட்டம் திருவிழா மலையாள மாதமான கும்பத்தில் (பிப்ரவரி-மார்ச்) நடைபெறுகிறது.
- கேரளாவின் அருவ பாரம்பரியத்தின் இன்றியமையாத பகுதியாக அங்கீகரிக்கப்பட்ட இது, காவுஸ் (புனித தோப்புகள்) மற்றும் தாரவாடுஸ் (மூதாதையர் வீடுகள்) ஆகியவற்றில் கொண்டாடப்படுகிறது.
- தெய்யம் "கடவுள்களின் நடனம்" அல்லது "தெய்வீக நடனம்" என்றும் அழைக்கப்படுகிறது.

## 18. விக்ரமசீலா பல்கலைக்கழகம்

- நாளந்தா பல்கலைக்கழகத்திற்குப் பிறகு, பீகாரில் உள்ள மற்றொரு பழங்கால கற்றல் மையமான விக்ரமசீலா பல்கலைக்கழகம் மறுமலர்ச்சிக்கு தயாராக உள்ளது. சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக இந்திய தொல்பொருள் ஆய்வு மையம் (ASI) தற்போது இந்த பண்டைய தளத்தை மேம்படுத்தி வருகிறது.
- விக்ரமசீலா பல்கலைக்கழகம் பீகாரில் உள்ள பாகல்பூரில், கங்கை நதிக்கரையில் அமைந்து, கிழக்கு இந்தியாவின் ஒரு முக்கிய வரலாற்று தளமாக இருந்தது.
- நாளந்தா பல்கலைக்கழகம் குப்தர் காலம் (கி.பி. 320-550) முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை

SMART LEADERS IAS ACADEMY

(பாலர் காலத்தில் 8 முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை) செழித்தோங்கியது.

- கி.பி 1203 ஆம் ஆண்டில் முகமது பின் பக்தியார் கல்ஜியால் அழிக்கப்பட்டபோது விக்ரமசீலா பல்கலைக்கழகம் முடிவுக்கு வந்தது.

## 19. ஆபரேஷன் பிரம்மா

- சமீபத்தில், மியான்மரில் ஏற்பட்ட ஒரு பேரழிவு தரும் நிலநடுக்கத்தால் உயிர் இழப்பு மற்றும் பரவலான அழிவு ஏற்பட்டது.
- இதற்கு உதவி செய்யும் விதமாக, அவசர மனிதாபிமான உதவிகளை வழங்க இந்தியா 'ஆபரேஷன் பிரம்மா'வைத் தொடங்கியது.
- துருக்கி மற்றும் சிரியாவில் 'ஆபரேஷன் தோஸ்த்' போன்ற முந்தைய பணிகள், மனிதாபிமான உதவிக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை விளக்குகின்றன.

## 20. திரிபிடகா

- தாய்லாந்து பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ரா, ராஜதந்திர பரிமாற்றத்தின் போது, பிரதமர் நரேந்திர மோடிக்கு 'உலக திரிபிடகம்: சஜ்ஜாயா ஒலிப்பு பதிப்பு' (The World Tipitaka: Sajjhaya Phonetic Edition) என்ற பட்டத்தை வழங்கினார்.
- பாலி மொழியில் திரிபிடகா என்ற சொல்லுக்கு "மூன்று கூடைகள்" என்று பொருள், இது புத்த மத நூல்களின் மூன்று முதன்மை பிரிவுகளைக் குறிக்கிறது.

## 21. ஆந்திர தலைநகர் அமராவதி

- ஆந்திர மாநில தலைநகருக்காக மத்திய அரசு ரூ.4,285 கோடி நிதி வழங்கி உள்ளது.
- ஒருங்கிணைந்த ஆந்திர மாநிலம் கடந்த 2014-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் தேதி இரண்டாக பிரிக்கப்பட்டு தெலங்கானா மாநிலம் உருவானது.
- அப்போது ஹைதராபாத் தெலங் கானாவின் தலைநகராக இருக் கும் என்றும், புதிய தலைநகரை உருவாக்கும் வரை அல்லது 10 ஆண்டுகளுக்கு ஆந்திராவின் தலைநகராகவும் ஹைதராபாத் இருக்கும் என்றும் மாநில பிரிவினை மசோதாவில் கூறப் பட்டிருந்தது.
- இருந்தாலும், மாநிலம் பிரிந்த பின்னர் ஆந்திராவின் முதல்வ ரான சந்திரபாபு நாயுடு, குண்டூர் -விஜயவாடா இடையே அமராவதியை தலைநகரமாக அறிவித்தார்.
- 2014 முதல் 2019 வரை அமராவதியில் சட்டப்பேரவை, தலைமை செயலகம் போன்றவை கட்டப்பட்டு, அங்கேயே ஆட்சியும் நடந்தது.
- 2019-ல் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி அமராவதியில் சட்டப்பேரவையும், கர்னூலில் உயர் நீதிமன்றமும், விசாகப்பட்

SMART LEADERS IAS ACADEMY

டினத்தில் தலைமை செயலகமும் இருக்கும்படி மூன்று தலைநகர கொள்கையை கொண்டு வந்தார்.

## 22. டாக்டர் பி.ஆர். அம்பேத்கருக்கு இந்திய அரசின் மரியாதைகள்

- **பாரத ரத்னா** (1990): தேசத்தைக் கட்டியெழுப்புவதில் அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பிற்காக இந்தியாவின் மிக உயர்ந்த குடிமகன் விருதாக இறப்பிற்குப் பின் வழங்கப்பட்டது .
- **அம்பேத்கர் சர்க்யூட் (பஞ்சதீர்த்):** அவரது வாழ்க்கையுடன் தொடர்புடைய ஐந்து முக்கிய தளங்களின் உருவாக்கம் - மோவ் (பிறந்த இடம்), லண்டன் (சிக்ஷா பூமி), நாக்பூர் (தீக்ஷா பூமி), மும்பை (சைத்ய பூமி), மற்றும் டெல்லி (மஹாபரிநிர்வான் பூமி).
- BHIM **செயலி:** டிஜிட்டல் பணம் செலுத்துதல் மற்றும் நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதற்காக அவரது பெயரில் தொடங்கப்பட்டது.
- **டாக்டர் அம்பேத்கர் சிறப்பு மையங்கள்** (DACE): பட்டியல் சாதி மாணவர்களுக்கு இலவச UPSC பயிற்சி அளிக்க 31 மத்திய பல்கலைக்கழகங்களில் அமைக்கப்பட்டுள்ளன.
- ASIIM **திட்டம்:** அம்பேத்கர் சமூக கண்டுபிடிப்பு மற்றும் அடைகாக்கும் பணி, தொடக்க நிதி மூலம் SC இளைஞர் தொழில்முனைவோரை ஆதரிக்கிறது.
- **தேசிய நினைவுச்சின்னங்கள்: சங்கல்ப் பூமி (வதோதரா)** மற்றும் சதாராவில் உள்ள அவரது பள்ளி போன்ற இடங்கள் தேசிய நினைவுச் சின்ன அந்தஸ்துக்கு முன்மொழியப்பட்டுள்ளன.
- **அரசியலமைப்பு தினம் ( நவம்பர்** 26): **இந்திய** அரசியலமைப்பின் தலைமைச் சிற்பியாக அவரது மரபைக் கௌரவிக்கும் வகையில் 2015 முதல் அனுசரிக்கப்படுகிறது.
- **அம்பேத்கர் ஜெயந்தி:** அவரது பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் தேதி , சமூக நீதி, பட்டியலின உரிமைகள் மற்றும் இந்திய அரசியலமைப்பிற்கான அவரது பங்களிப்புகளை கௌரவிக்கும் ஒரு தேசிய விடுமுறை நாளாகக் கொண்டாடப்படுகிறது.

## 23. ரோங்காலி பிஹு

- போஹாக் பிஹு என்றும் அழைக்கப்படும் ரோங்காலி பிஹு, அசாம் முழுவதும் 2025 ஏப்ரல் 14 முதல் 20வரை கொண்டாடப்படுகிறது, இது அசாமிய புத்தாண்டையும் அறுவடை பருவத்தின் தொடக்கத்தையும் குறிக்கிறது.
- "ரோங்" என்பது அசாமிய மொழியில் மகிழ்ச்சியைக் குறிக்கிறது.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

| விழா | நேரம் | முக்கியத்துவம் |
|---|---|---|
| **ரோங்காலி பிஹூ** | ஏப்ரல் (போஹாக்) | விதைப்பு பருவத்தின் ஆரம்பம், அஸ்ஸாமிய புத்தாண்டு |
| **கதி பிஹூ** | அக்டோபர் (கதி) | பயிர் பருவத்தின் நடுப்பகுதி, நல்ல அறுவடைக்கான பிரார்த்தனை காலம். |
| **மாக் பிஹூ** | ஜனவரி (மாக்) | அறுவடை முடிவு, சமூக விருந்துகள் |

## இந்திய மாநிலங்களில் புத்தாண்டு கொண்டாட்டங்கள்

- **பைசாகி: பஞ்சாப்** மற்றும் **வட இந்தியாவில்** வசந்த கால அறுவடை காலத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- **புத்தாண்டு:** தமிழ்நாட்டிலும், உலகெங்கிலும் உள்ள தமிழ் சமூகங்களாலும் கொண்டாடப்படுகிறது. இது தமிழ் நாட்காட்டியில் சித்திரை மாதத்தின் முதல் நாளில் வருகிறது.
- **போஹேலா போய்ஷாக்: மேற்கு வங்காளத்தில்** கொண்டாடப்படும் , **இது வங்காள நாட்காட்டி ஆண்டின்** தொடக்கத்தைக் குறிக்கிறது.
- **ஜூட் ஷீத்தல்: பீகார், ஜார்க்கண்ட்** மற்றும் **நேபாளத்தில்** உள்ள **மைதிலி சமூகத்தினரால்** கொண்டாடப்படுகிறது.
- **பாண சங்கராந்தி:** ஒடிசாவில் ஒடியா புத்தாண்டாகக் கொண்டாடப்படுகிறது. இது வில் பழத்திலிருந்து (மர ஆப்பிள்) தயாரிக்கப்படும் பாரம்பரிய பானமான **பேலா பனாவுக்கு பெயர் பெற்றது.**
- **விஷு:** கேரளா மற்றும் தமிழ்நாட்டின் சில பகுதிகளில் கொண்டாடப்படும் விஷு, சூரியன் மேஷ ராசிக்கு மாறுவதைக் குறிக்கிறது.
- **உகாதி:** ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் கர்நாடகாவில் இந்து புத்தாண்டின் தொடக்கமாகக் கொண்டாடப்படுகிறது.
  - சமஸ்கிருதத்திலிருந்து பெறப்பட்ட உகாத், "யுகம்" (வயது) மற்றும் "ஆதி" (தொடக்கம்) ஆகியவை இணைந்து "ஒரு புதிய யுகத்தின் ஆரம்பம்" என்று பொருள்படும்.
- குடி **பத்வா: மகாராஷ்டிரா மற்றும் கோவாவில்** சம்வத்சர் பத்வோ என்று கொண்டாடப்படுகிறது . இது மராத்தி புத்தாண்டின் தொடக்கத்தையும் சைத்ரா


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

மாதத்தின் முதல் நாளையும் குறிக்கிறது.

- **நவ்ரேஹ்**: காஷ்மீரி பண்டிதர்கள் தங்கள் பாரம்பரிய புத்தாண்டைக் கொண்டாடுவதற்காகக் கொண்டாடுகிறார்கள். நவ்ரேஹ் என்பது சமஸ்கிருத "நவ வர்ஷா" என்பதிலிருந்து உருவானது, அதாவது "புத்தாண்டு".
- **சஜிபு நோங்மபான்பா (செய்ரோபா)**: Meitei சமூகத்தால் மணிப்பூரில் கொண்டாடப்பட்டது. இது மணிப்பூரி சந்திர நாட்காட்டி ஆண்டின் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- **பெஸ்து வராஸ்**: குஜராத்தில் புத்தாண்டாகக் கொண்டாடப்படுகிறது மற்றும் தீபாவளிக்கு அடுத்த நாள் ஐந்து நாள் பண்டிகைக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாகக் கொண்டாடப்படுகிறது.

## 24. தாஜ்மஹால்

- தாஜ்மஹால் என்பது இந்தியாவின் ஆக்ராவில் அமைந்துள்ள ஒரு தந்தம்-வெள்ளை பளிங்கு கல்லறை ஆகும்.
- இது யமுனை நதியின் தென் கரையில் அமைந்துள்ளது.
- 1632 ஆம் ஆண்டு முகலாயப் பேரரசர் ஷாஜஹானால் (1628–1658 ஆட்சி) கட்டப்பட்டது.
- இது அவரது மனைவி மும்தாஜ் மஹாலின் நினைவாக கட்டப்பட்டது.
- இது 1983 ஆம் ஆண்டு யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டது.
- இது முகலாய கட்டிடக்கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகக் கருதப்படுகிறது.

## 25. முன்னாள் இஸ்ரோ தலைவர் டாக்டர் கே.கஸ்தூரிரங்கன் மறைவு

- முன்னாள் இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் (ISRO) தலைவர் டாக்டர் கே. கஸ்தூரிரங்கன் பெங்களூருவில் காலமானார்.
- அக்டோபர் 24, 1940 அன்று கேரளாவின் எர்ணாகுளத்தில் பிறந்தார்.

**அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்:**

- இந்தியாவின் விண்வெளித் திட்டத்தை முன்னேற்றுவதில் அவர் முக்கிய பங்கு வகித்தார்.
- இவர் 1994 முதல் 2003 வரை இஸ்ரோவின் ஐந்தாவது தலைவராகப் பணியாற்றினார்.
- அவர் இஸ்ரோ செயற்கைக்கோள் மையத்தை இயக்கினார் மற்றும் இந்தியாவின் தொலை உணர்வு செயற்கைக்கோள் திட்டத்தை நிறுவினார்.
- புதிய தலைமுறை விண்கலம், இந்திய தேசிய செயற்கைக்கோள் (INSAT-2) மற்றும் இந்திய தொலை உணர்வு செயற்கைக்கோள்கள்

SMART LEADERS IAS ACADEMY

(IRS-1A & 1B) மற்றும் அறிவியல் செயற்கைக்கோள்களின் மேம்பாடு தொடர்பான நடவடிக்கைகளை அவர் மேற்பார்வையிட்டார்.

- **இந்தியாவின் துருவ செயற்கைக்கோள் ஏவுதள வாகனம் (PSLV) மற்றும் புவி ஒத்திசைவான செயற்கைக்கோள் ஏவுதள வாகனம்** (GSLV) ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அவர் பங்களித்தார்.

**கல்வி மற்றும் கொள்கை:**

- மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் தேசிய கல்விக் கொள்கை போன்ற பல முக்கியமான குழுக்களுக்கு அவர் தலைமை தாங்கினார்
- அவர் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் (JNU) வேந்தராகவும், கர்நாடக அறிவு ஆணையத்தின் தலைவராகவும் பணியாற்றினார்.
- மாநிலங்களவை உறுப்பினராக (2003–2009) இருந்தார்.
- அறிவியலுக்கான பங்களிப்புகளுக்காகவும், தேச சேவைக்காகவும் அவருக்கு பத்மஸ்ரீ, பத்ம பூஷண் மற்றும் பத்ம விபூஷண் விருதுகள் வழங்கப்பட்டன.

## 26. சிமிலிபால் புலிகள் சரணாலயம் (STR)

- காட்டு மெலனிஸ்டிக் புலிகளின் உலகின் ஒரே தாயகமான சிமிலிபால் புலிகள் காப்பகத்தை (STR) ஒடிசா அரசு தேசிய பூங்காவாக அறிவித்துள்ளது.
- 107வது தேசிய பூங்கா
- பிதர்கனிகாவிற்குப் பிறகு மாநிலத்தில் இரண்டாவது தேசிய பூங்கா.

## 27. இந்திய தேசிய ஆவணக் காப்பகம் (NAI)

- 1891 ஆம் ஆண்டு கல்கத்தாவில் இம்பீரியல் ரெக்கார்ட்ஸ் துறையாக நிறுவப்பட்டது
- தெற்காசியாவின் மிகப்பெரிய காப்பகக் களஞ்சியமாகும்.
- இந்திய அரசாங்கத்தின் நீடித்த மதிப்புள்ள பதிவுகளின் பாதுகாவலராக உள்ளது.
- NAI புது தில்லியில் அமைந்துள்ளது.
- பொது பதிவுகள், தனியார் ஆவணங்கள், ஓரியண்டல் பதிவுகள், வரைபடங்கள் மற்றும் மைக்ரோஃபிலிம்களின் பரந்த தொகுப்பைக் கொண்டுள்ளது.
- அரசுப் பதிவுகளை நிர்வகிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் பொதுப் பதிவுச் சட்டம், 1993 மற்றும் தொடர்புடைய விதிகளை செயல்படுத்துவதை ஆவணக் காப்பக இயக்குநர் மேற்பார்வையிடுகிறார்.
- இது கலாச்சார அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

# பொருளாதாரம்

## 1. 2025-2026 ஒன்றிய நிதி நிலை அறிக்கை

- இந்தியாவின் 2025- 2026-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.
- மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடர்ச்சியாக தனது எட்டாவது மத்திய பட்ஜெட்டை பிப்ரவரி 1-ல் வெளியிட்டார்.
- இதற்கு முன்பு மொரார்ஜி தேசாய் 10 பட்ஜெட்டுகளை வெவ்வேறு காலகட்டங்களில் தாக்கல் செய்துள்ளார்.
- மொரார்ஜி தேசாய் நிதியமைச்சராக 1959-64 காலகட்டத்தில் 6 பட்ஜெட்டுகளையும் பின்னர் 1967-69 காலகட்டத்தில் 4 பட்ஜெட்டுகளையும் தாக்கல் செய்திருக்கிறார்.

**வருமான வரி மசோதா**

- வருமான வரி விலக்குக்கான உச்ச வரம்பு ரூ. 12 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது, ரூ. 12 லட்சம் வருமானம் பெறுபவர்களுக்கு வருமான வரி கிடையாது.
- புதிய வருமான வரி மசோதா அடுத்த வாரம் தாக்கல் செய்யப்படும் என்று நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
- காப்பீட்டுத் துறையில் வெளிநாட்டு முதலீடு 74 சதவீதத்தில் இருந்து, 100 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.

**திருத்தப்பட்ட புதிய வருமான வரி முறை**

| ஆண்டு வருமானம் | வரி விகிதம் |
|---|---|
| ரூ. 4 லட்சம் வரை | 0 |
| ரூ. 4 - 8 லட்சம் வரை | 5% |
| ரூ. 8 - 12 லட்சம் வரை | 10% |
| ரூ. 12 - 16 லட்சம் வரை | 15% |
| ரூ. 16 - 20 லட்சம் வரை | 20% |
| ரூ. 20 - 24 லட்சம் வரை | 25% |
| ரூ. 24 லட்சத்துக்கும் அதிகம் | 30% |

ரூ. 12 லட்சத்துக்கு அதிகமாக வருவாய் ஈட்டுவோருக்கு இது பொருந்தும்.

**விவசாய துறை அறிவிப்புகள்**

- பிகாரில் மக்கானா வாரியம் அமைக்கப்படும். வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனையில் இது உதவும். மக்கானா (தாவர விதைகள்) விவசாயிகளுக்கு இது பயனளிக்கும். உலகளவில் 85% மக்கானா உற்பத்தி இந்தியாவில் நடைபெறுகிறது. இதில், இந்தியாவில் 90% மக்கானா பிகாரில் உற்பத்தியாகிறது.
- பிகாரில் உணவு பதப்படுத்துதலுக்காக தேசிய உணவு தொழில்நுட்பம், தொழில் முனைவோர் மற்றும் நிர்வாக மையம் அமைக்கப்படும்.
- வேளாண் திட்டத்தில் 100 மாவட்டங்கள் ஊக்குவிக்கப்படும். பிரதம மந்திரி தன் தானியா எனும் திட்டத்தின் கீழ் இது செயல்படுத்தப்படும்.
- உண்ணக்கூடிய எண்ணெய் வித்துக்களில் தன்னிறைவை அடைதல் என்னும் இலக்கின் அடிப்படையில் எண்ணெய் வித்துக்களுக்கான தேசிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

- அதிக விளைச்சல் தரும் விதைகளுக்கென அறிமுகப்படுத்தப்படும். புதிய திட்டம்
- காய்கறிகள் மற்றும் பழங்களுக்கென ஒருங்கிணைந்த வகையில், மாநிலங்களுடன் இணைந்து புதிய திட்டம் தொடங்கப்படும்.
- கிசான் கடன் அட்டை மூலம் விவசாயிகள் கடன் பெறும் தொகையின் அளவு ரூ.3 லட்சம் எனும் தொகையிலிருந்து ரூ. 5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

### தொழில் துறை தொடர்பான அறிவிப்புகள்

- ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தில் அரசு வழங்கும் பங்காக ஏற்கெனவே உள்ள ரூ.10,000 கோடியுடன் கூடுதலாக ரூ.10,000 கோடி ஒதுக்கப்படும்.
- முதன்முறையாக ஸ்டார்ட்-அப் நிறுவனங்களைத் தொடங்கும் 5 லட்சம் பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினரை ஊக்குவிக்கும் வகையில் புதிய திட்டம் தொடங்கப்படும்.
- காலணிகள் மற்றும் தோல் துறையில் கவனம் செலுத்தும் வகையில் திட்டம் ஒன்று தொடங்கப்படும். இதன்மூலம், 22 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- உலகளவில் பொம்மைகள் தயாரிப்பில் இந்தியா மையமாக உருவெடுக்கும் வகையில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.
- தெருவோர கடை வைத்திருப்பவர்களுக்கு பொருளாதார ரீதியாக உதவும் வகையில், ரூபாய் 30,000 வரை கடன் பெறும் வகையிலான கடன் அட்டை வழங்கப்படும். இது, யுபிஐயுடன் இணைக்கப்படும்.
- இ-ஷ்ரம் (e-shram) இணையதளத்தில் கிக் தொழிலாளர்கள் தங்களைப் பதிவு செய்துகொள்ளலாம். அதன்மூலம், அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படும். மேலும், பிரதம மந்திரி ஜன் ஆரோக்கியா யோஜனா திட்டத்தின் கீழ் அவர்களுக்கு சுகாதார காப்பீடு வழங்கப்படும்.
- நிரந்தர, முழுநேர வேலைகளுக்குப் பதிலாக, குறுகிய கால அளவில், நேர நெகிழ்வுத்தன்மையுடன் இருக்கும் வேலைவாய்ப்புகளைக் கொண்ட சந்தையே கிக் பொருளாதாரம் என அறியப்படுகிறது.
- இவை பெரும்பாலும், ஓலா, உபெர், ஸ்விக்கி, ஜொமாட்டோ, அர்பன் கம்பெனி போன்ற செயலி-சார் பணிகளாகச் சமீப காலங்களில் அடையாளப்படுத்தப்படுகின்றன.

### கல்வி

- பள்ளிகளில் குழந்தைகளிடையே அறிவியல் சிந்தனையை வளர்க்கும் வகையில் அடல் டிங்கெரிங் ஆய்வு மையங்கள் அமைக்கப்படும். நாடு முழுதும் 50 ஆயிரம் ஆய்வு மையங்கள் அடுத்த ஐந்து ஆண்டுகளில் உருவாக்கப்படும்.
- ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில்

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

இணையத் தொடர்பை ஏற்படுத்துவதற்கு பிராட்பேண்ட் வசதி ஏற்படுத்தப்படும்.

- கடந்த 10 ஆண்டுகளில் நாடு முழுவதும் உள்ள 23 ஐஐடி நிறுவனங்களில் மாணவர்களின் எண்ணிக்கை 100% அதாவது 65,000இல் இருந்து 1.35 லட்சம் எனும் அளவில் உயர்ந்துள்ளது.
- 2024ஆம் ஆண்டுக்குப் பிறகு அமைக்கப்பட்ட 5 ஐஐடி நிறுவனங்களில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். ஐஐடி பாட்னா விரிவுபடுத்தப்படும்.

### பிற அறிவிப்புகள்

- புற்றுநோய் உள்ளிட்ட தீவிரமான நோய்களுக்கான மருந்துகளுக்கான சுங்க வரி குறைக்கப்படும். ஆறு உயிர் காக்கும் மருந்துகள் மற்றும் புற்றுநோய் தொடர்பான 36 மருந்துகளுக்கு வரி விலக்கு அளிக்கப்படும்.
- இந்திய அரசின் வட்டார விமான நிலையங்களின் வளர்ச்சி தொடர்பான உடான் திட்டம் (UDAN), 120 பிராந்திய அளவில் புதிய பகுதிகளை இணைக்கும் வகையில் மாற்றியமைக்கப்படும். இதன்மூலம், அடுத்த 10 ஆண்டுகளில் 4 கோடி பயணிகள் விமானங்களில் பயணிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மூத்த குடிமக்களுக்கான டிடிஎஸ் (Tax Deducted at Source) வரம்பு 50 ஆயிரம் ரூபாயில் இருந்து இரட்டிப்பாகி 1 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- நாட்டின் முதன்மையான 50 சுற்றுலா தலங்கள் மாநில அரசுடன் இணைந்து மேம்படுத்தப்படும்.

## 2. பொருளாதார ஆய்வறிக்கை 2024-25

### சிறப்பம்சங்கள்

- ஜனவரி 31, 2025 நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2024-25 ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கை, பல்வேறு வளர்ச்சி முயற்சிகள் இருந்தபோதிலும், இந்தியாவின் விவசாயத் துறை "குறிப்பிடத்தக்க அளவில் பயன்படுத்தப்படாத வளர்ச்சி ஆற்றலைக்" கொண்டுள்ளது என்பதை வலியுறுத்தியது.
- 2025 ஆம் ஆண்டில் இந்தியப் பொருளாதாரம் 6.6% வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2026 நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 6.3% முதல் 6.8% வரை இருக்கும் என பொருளாதார ஆய்வறிக்கை கணித்துள்ளது.
- நிதி உள்ளடக்கத்தில் அரசாங்கம் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைச் செய்துள்ளது, இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) நிதி உள்ளடக்கக் குறியீடு மார்ச் 2021 இல் 53.9 இலிருந்து மார்ச் 2024 இறுதிக்குள் 64.2 ஆக உயர்ந்துள்ளது.

### வெளித்துறை

- மொத்த ஏற்றுமதிகள் 2025 நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 6% (YOY) நிலையான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

SMART LEADERS IAS ACADEMY

- உலகளாவிய சேவைகள் ஏற்றுமதியில் இந்தியா ஏழாவது பெரிய பங்கைக் கொண்டுள்ளது.
- தொலைத்தொடர்பு, கணினி மற்றும் தகவல் சேவைகளில் உலக ஏற்றுமதி சந்தையில் இந்தியா 10.2 சதவீதத்தைக் கொண்டுள்ளது.
- உலகளவில் பணம் அனுப்புவதில் இந்தியா முதலிடத்தில் உள்ளது, இது நடப்பு கணக்கு பற்றாக்குறையை (CAD) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2% ஆகக் கட்டுப்படுத்த உதவியது.

### பணவீக்கம்

- சில்லறை விற்பனை பணவீக்கம் 2024 நிதியாண்டில் 5.4 சதவீதத்திலிருந்து ஏப்ரல் முதல் டிசம்பர் 2024 வரை 4.9 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- நுகர்வோர் உணவு விலைக் குறியீட்டால் (CFPI) அளவிடப்படும் உணவுப் பணவீக்கம், 2024 நிதியாண்டில் 7.5 சதவீதத்திலிருந்து 2025 நிதியாண்டில் (ஏப்ரல்-டிசம்பர்) 8.4 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- இந்தியாவின் நுகர்வோர் விலை பணவீக்கம், நிதியாண்டு 26 இல் பணவீக்க இலக்கை நோக்கி படிப்படியாக சீரமைக்கப்படும் என்று ரிசர்வ் வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளன.

### தொழில்

- எஃகு, சிமென்ட், ரசாயனங்கள் மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் போன்ற தொழில்கள் தொழில்துறை வளர்ச்சியை உறுதிப்படுத்தியுள்ளன, அதே நேரத்தில் ஆட்டோமொபைல்கள், மின்னணுவியல் மற்றும் மருந்துகள் போன்ற நுகர்வோர் சார்ந்த துறைகள் வளர்ச்சி இயக்கிகளாக உருவெடுத்துள்ளன.
- **சிமெண்ட்:** தற்போது, சீனாவிற்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது பெரிய சிமெண்ட் உற்பத்தியாளராக இந்தியா உள்ளது. இந்தியாவில் உள்ள பெரும்பாலான சிமெண்ட் ஆலைகள் மூலப்பொருட்களின் மூலத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளன. சிமெண்ட் தொழிலில் சுமார் 87 சதவீதம் ராஜஸ்தான், ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், குஜராத், தமிழ்நாடு, மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், சத்தீஸ்கர், ஒடிசா, மேகாலயா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் குவிந்துள்ளது.
- **எஃகு தொழில்:** நிதியாண்டு 25 ஏப்ரல்-நவம்பர் மாதங்களில், நாட்டின் கச்சா எஃகு மற்றும் முடிக்கப்பட்ட எஃகு உற்பத்தி முறையே 3.3 சதவீதம் மற்றும் 4.6 சதவீதம் வளர்ச்சியைப் பதிவு செய்தது.சில மாதத்திற்கு மாதம் ஏற்ற இறக்கங்கள் இருந்தபோதிலும், ஏப்ரல்-நவம்பர் நிதியாண்டில் எஃகு உற்பத்தி மற்றும் நுகர்வில் ஒட்டுமொத்த மேல்நோக்கிய போக்கு உள்ளது.
- **வேதியியல் மற்றும் பெட்ரோ கெமிக்கல் துறை:** உற்பத்தித் துறையின் மொத்த விற்பனையில் (2011-12 விலையில்) ரசாயனங்கள் மற்றும் ரசாயனப் பொருட்கள் துறையின் பங்கு 2023 நிதியாண்டில்

SMART LEADERS IAS ACADEMY

9.5 சதவீதமாக இருந்தது. நாடு இந்த பொருட்களின் நிகர இறக்குமதியாளராக உள்ளது, பெட்ரோ கெமிக்கல் இடைநிலைகளில் சுமார் 45 சதவீதம் இறக்குமதியைச் சார்ந்துள்ளது.

- **ஜவுளித் தொழில்:** ஜவுளித் தொழில் ஒரு முக்கிய வேலைவாய்ப்பு உருவாக்கும் துறையாகும், மேலும் இது இந்தியாவின் உற்பத்தி மொத்த மதிப்பு (GVA) இல் சுமார் 11 சதவீதத்தைக் கொண்டுள்ளது. இந்தியா சணல் உற்பத்தியில் முன்னணி வகிக்கிறது மற்றும் பருத்தி, பட்டு மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட நார் உற்பத்தியில் உலகளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது. ஜவுளி மற்றும் ஆடைகளின் ஏற்றுமதியில் இந்தியா ஆறாவது பெரிய நாடாகும், மேலும் இந்தப் பிரிவில் உலகளாவிய வர்த்தகத்தில் சுமார் 4 சதவீத பங்கைக் கொண்டுள்ளது.
- **அறிவுசார் சொத்துரிமை:** இந்தியா ஒரு வலுவான அறிவுசார் சொத்து சுற்றுச்சூழல் அமைப்பைக் கொண்டுள்ளது. WIPO அறிக்கை 2022 இன் படி, உலகளவில் முதல் 10 காப்புரிமை தாக்கல் அலுவலகங்களில் இந்தியா ஆறாவது இடத்தில் உள்ளது. காப்புரிமை விண்ணப்பங்கள் பெரும்பாலும் கணினி & மின்னணுவியல், இயந்திரவியல் & உயிரி மருத்துவம் மற்றும் தகவல் தொடர்புதுறைகளில் உள்ளன.

**விவசாயம்**

- வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய செயல்பாடுகள்' துறை தற்போதைய விலைகளில் FY24 (PE)க்கான நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தோராயமாக 16 சதவீதத்தை பங்களிக்கிறது மற்றும் மக்கள் தொகையில் சுமார் 46.1 சதவீதத்தை ஆதரிக்கிறது.

**காலநிலை & சுற்றுச்சூழல்**

- உலகின் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா இருந்தாலும், இந்தியாவின் தனிநபர் கார்பன் வெளியேற்றம் உலக சராசரியில் மூன்றில் ஒரு பங்காகும்.
- காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய ஏழாவது நாடாக இந்தியா உள்ளது. இது வானிலை உச்சநிலைகள் மற்றும் ஆபத்துகள், கடல் மட்ட உயர்வு, பல்லுயிர் இழப்பு மற்றும் நீர் பாதுகாப்பின்மை போன்ற மெதுவாகத் தொடங்கும் நிகழ்வுகளால் பாதிக்கப்படுகிறது.

**வேலைவாய்ப்பு**

- 2014 ஆம் ஆண்டில், இந்தியா உலகின் பத்தாவது பெரிய பொருளாதாரமாக தரவரிசைப்படுத்தப்பட்டது. ஒரு தசாப்தத்திற்குள், இந்தியா இங்கிலாந்தை விஞ்சி நான்காவது இடத்தைப் பிடித்தது. அமெரிக்கா மற்றும் சீனாவிற்குப் பிறகு, 2030 ஆம் ஆண்டில் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறும்.
- கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதன் மூலம் வணிகம் செய்வதற்கான நிலையான செலவுகளைக்

SMART LEADERS IAS ACADEMY

குறைப்பது, நிறுவனங்கள் அதிக ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான வாய்ப்பை உருவாக்கும்.

## 3. தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2025-26

2025-2026 நிதிநிலை அறிக்கையின் கருப்பொருள்: எல்லாருக்கும் எல்லாம்

- முன்னதாக வெளியிடப்பட்ட தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை இலச்சினையில் ரூபாய் குறியீட்டிற்குப் பதிலாக 'ரூ' என மாற்றிப் பயன்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.
- பன்முக வளர்ச்சியை நோக்கி தமிழ்நாடு நடைபோடுகிறது. இந்தியாவில் இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கிறது.

| பட்ஜெட் மொத்த மதிப்பு | |
|---|---|
| மொத்த வருவாய் வரவு | ரூ.3,32,330 கோடி |
| மொத்த செலவினங்கள் | ரூ.4,39,293 கோடி |
| வருவாய் பற்றாக்குறை | ரூ.41,635 கோடி |
| நிதி பற்றாக்குறை | ரூ.1,06,963 கோடி |
| **வருவாய்** | |
| மாநில சொந்த வரி வரவு | ரூ.2,20,895 கோடி |
| வரியல்லா வருவாய் | ரூ.28,818 கோடி |
| மத்திய அரசு உதவி மானியங்கள் | ரூ.23,834 கோடி |
| மத்திய வரிகளில் பங்கு | ரூ. 58,022 |

- INEQUALITY IS A CHOICE, BUT WE CAN CHOOSE A DIFFERENT PATH என்பதன் தமிழாக்கம் "சமத்துவமின்மை என்பது ஒரு வாய்ப்பு, ஆனால் நாம் வேறு பாதையைத் தேர்ந்தெடுக்கலாம்" என்ற பொருளியல் அறிஞர் தாமஸ் பிக்கெட்டியை மேற்கோள் காட்டி நிதியமைச்சர் உரையைத் தொடங்கினார்.

**தமிழ் வளர்ச்சித் திட்டங்கள்**

| முக்கியத் துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு | |
|---|---|
| துறைகள் | நிதி |
| கல்வி | ரூ.55,261 கோடி |
| நகர்ப்புற வளர்ச்சி | ரூ.34,396 கோடி |
| ஊரக வளர்ச்சி | ரூ.29,465 கோடி |
| சுகாதாரம் | ரூ.21,906 கோடி |
| எரிசக்தி | ரூ.21,178 கோடி |
| நெடுஞ்சாலைகள் | ரூ.20,722 கோடி |
| காவல் | ரூ,13,342 கோடி |
| போக்குவரத்து | ரூ.12,965 கோடி |
| நீர்வளம் | ரூ.9460 கோடி |
| சமூக நலன் | ரூ.8597 கோடி |
| தொழில் துறைகள் | ரூ.5833 கோடி |
| ஆதிதிராவிடர், பழங்குடியினர் | ரூ.3924 கோடி |

- ஐ.நா. அவை அங்கீகரித்துள்ள 193 மொழிகளுக்கும் மொழிபெயர்க்கப்பட்ட பெருமை பெறுகிறது திருக்குறள். மேலும் 45 உலக மொழிகளில் திருக்குறளை மொழிபெயர்க்க ரூ.1.33 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.
- தமிழ்ச் செம்மொழியின் பெருமையை உலகத் தமிழர் மத்தியில் பரவச்செய்ய ஆண்டுதோறும் ரூ.1 கோடியில் ‘உலகத் தமிழ் ஒலிம்பியாட்’ போட்டிகள் நடத்தப்படும்.
- ஈரோட்டில் கொடுமணல் அகழாய்வுகளை மையப்படுத்தி ரூ.22 கோடியில் நொய்யல்


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

அருங்காட்சியகம், ராமநாதபுரத்தில் ரூ.21 கோடியில் நாவாய் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

- சிங்கப்பூர், துபாய், மலேசியாவில் தமிழ்ப் புத்தகக் கண்காட்சி நடத்த ரூ.2 கோடி ஒதுக்கப்படும்.
- தமிழ்நாடு முழுவதும் தொல்லியல் ஆய்வு மேற்கொள்ள ரூ.7 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
- கோவை உள்ளிட்ட 8 மாவட்டங்களில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படும்.
  - சிவகங்கை மாவட்டம் கீழடி,
  - தூத்துக்குடி மாவட்டம் பட்டணமருதூர்,
  - தென்காசி மாவட்டம் கரிவலம்வந்தநல்லூர்,
  - நாகப்பட்டினம்,
  - கடலூர் மாவட்டம் மணிக்கொல்லை,
  - கள்ளக்குறிச்சி மாவட்டம் ஆதிச்சனூர்,
  - கோவை மாவட்டம் வெள்ளலூர்,
  - சேலம் மாவட்டம் தெலுங்கனூர்

### மகளிர் நலன்

- ரூ.77 கோடியில் மேலும் 10 இடங்களில் 800 பணிபுரியும் பெண்கள் பயனடையும் வகையில் தோழி விடுதிகள் உருவாக்கப்படும்.
- நகர்ப்புறப் பகுதிகளில் பெண்கள் பாதுகாப்பை உறுதிசெய்ய புதிய திட்டம் ரூ.75 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.
- பத்து லட்சம் வரை மதிப்புள்ள அசையா சொத்துகளைப் பெண்கள் பெயரில் பதிவு செய்தால் 1% பதிவுக் கட்டணம் குறைக்கப்படும்.
- 10,000 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படும். இவற்றின் மூலம் ரூ.37,000 கோடி வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது.
- கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்துக்கு ரூ13,807 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதுவரை பலன்பெறாதோருக்கு உரிமைத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- கருப்பை வாய் புற்றுநோயை தடுக்க, 14 வயதுக்குட்பட்ட அனைத்து பெண்களுக்கும் படிப்படியாக கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசியை வழங்க ரூ.36 கோடி ஒதுக்கீடு.
- மகளிர் விடியல் பயண திட்டத்துக்கு ரூ.3,600 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.
- பெற்றோர் இருவரையும் இழந்த 50,000 குழந்தைகளுக்கு 18 வயது வரை மாதந்தோறும் ரூ.2,000 வழங்கப்படும்.
- 1 லட்சம் மகளிரைத் தொழில் முனைவோராக உயர்த்திடும் பெருந்திட்டம் செயல்படுத்தப்படும்.
- உயர்கல்வி பயிலும் மூன்றாம் பாலினத்தவருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.
- புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை

SMART LEADERS IAS ACADEMY

வழங்கும் திட்டம் அவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

- ஒரு முன்னோடி முயற்சியாக மூன்றாம் பாலினத்தவரை போக்குவரத்து மேலாண்மை, திருவிழாக் காலங்களில் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் வகையில், உரிய பயிற்சிகள் வழங்கி ஊர்க்காவல் படையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- இதன் முதல்கட்டமாக 50 மூன்றாம் பாலினத்தவர்களைக் கொண்டு, சென்னை தாம்பரம், ஆவடி மாநகரங்களில் இம் முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும். அவ்வாறு பணிபுரியும் மூன்றாம் பாலினத்தவரின் மதிப்பூதியம், பயிற்சி மற்றும் சீருடை போன்றவை ஊர்க்காவல் படையினருக்குச் சமமான வகையில் வழங்கப்படும்.
- **நன்னிலம் மகளிர் நிலவுடைமைத் திட்டம்:** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த பெண் விவசாயத் தொழிலாளர்களை நில உரிமையாளர்களாக உயர்த்த, நன்னிலம் மகளிர் நிலவுடைமைத் திட்டத்தை தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் மூலம், பெண்களின் பொருளாதாரப் பாதுகாப்பையும் சமூக நிலையில் அவர்களின் உயர்வை உறுதிசெய்து, அவர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில், 2025-2026-ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்துக்காக ரூ. 20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கல்வித்துறை**

- 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும்.
- அரசு பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் தொகுப்பு நிதி ரூ.700 கோடியாக உயர்த்தப்படும்.
- அரசுப் பொறியியல் கல்லூரிகளில் திறன்மிகு மையங்கள் (Centre of Excellence) ரூ.50 கோடி செலவில் உருவாக்கப்படும்.
- நாட்டிலேயே சிறந்த கல்வி நிறுவனங்களுக்கான தர வரிசையில் முதல் பத்து இடங்களுக்குள்ளும், உலக அளவிலான QS தரவரிசைப் பட்டியலில் முதல் 150 இடங்களுக்குள்ளும் அண்ணா பல்கலைக்கழகத்தை இடம்பெறச் செய்திடச் செயல்திட்டம் உருவாக்கப்படும்.
- அடுத்த 2 ஆண்டுகளில் 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு அவரவர் விருப்பப்படி கைக் கணினி அல்லது மடிக்கணினி வழங்கப்படும்.
- ரூ.100 கோடியில் சென்னை, கோயம்புத்தூரில் அடிப்படை அறிவியல் & கணித ஆராய்ச்சிப் படிப்புகள் மையம் உருவாக்கப்படும்.
- ரூ.160 கோடியில் 2,000 பள்ளிகளில் கணினி ஆய்வகங்கள் தரம் உயர்த்தப்படும்.
- ரூ.56 கோடியில், 880 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் தரம் உயர்த்தப்படும்.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

- ரூ.65 கோடியில், 2,676 பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் தரம் உயர்த்தப்படும்.
- 2025-26-இல் அரசுப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் குடிநீர் வசதி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடும் பொருட்டு ரூ,1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
- தமிழகத்தில் கல்லூரி மாணவர்கள் ஒரு லட்சம் பேருக்கு ரூ.2,500 கோடி அளவுக்கு பல்வேறு வங்கிகள் கல்விக் கடன் வழங்குவதை அரசு உறுதி செய்யும் என மாநில நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- அரசுப் பள்ளி மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடும் பொருட்டு அவர்கள் தங்களது பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை வெளிநாட்டிலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் பயின்றிட உதவித் தொகை அளிக்கும் வகையில் ரூ.10 கோடி நிதி வழங்கப்படும்.
- **அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டம்:** ரூ.65 கோடி ஒதுக்கீடுஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு உலகளாவிய கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்த மாநில அரசு உறுதியாகச் செயல்பட்டு வருகிறது.
- கலை, அறிவியல், வணிகம், சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளில் முதுநிலை அல்லது ஆராய்ச்சிப் படிப்புகளைத் தொடரும் மாணவர்களின் நிதிச் சுமையைக் குறைத்து திறமையான மாணவர்கள் உலகப் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் வாய்ப்பை வழங்க அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின் கீழ் 2025-2026-ஆம் நிதியாண்டில் ரூ.65 கோடி நிதி ஒதுக்கப்படும்.

### நகர்ப்புற மேம்பாடு

- ரூ.2,100 கோடியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகள் சீரமைக்கப்படும்.
- அனைத்து மாநகராட்சிகளிலும் முதல்வர் படைப்பகம் அமைக்கப்படும். 30 இடங்களில் ஒரு மையத்துக்கு தலா ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
- ரூ.50 கோடியில் வியன் திறன்மிகு மையம் அமைக்கப்படும்.
- ராமேஸ்வரத்தில் புதிய விமான நிலையம் அமைக்கப்படும்.
- தமிழகத்தில் 25 இடங்களில் அன்புச்சோலை முதியோர் பகல் நேர பராமரிப்பு மையம் உருவாக்கப்படும்.
- கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்துக்கு ரூ.2,000 கோடி, நகர்ப்புற உள்ளாட்சிகளில் 6,483 கி.மீ. நீள சாலைகள் மேம்பாட்டுக்கு ரூ.3,750 கோடி ஒதுக்கப்படும்.
- சென்னைக்கு அருகே உலகத் தரத்திலான வசதிகளுடன் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பில் ஒரு புதிய நகரத்தை டிட்கோ நிறுவனம் உருவாக்கும்.
- முதல்வரின் காலை உணவு திட்டம், மேலும் 3.14 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில், நகர்ப்புற அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

- உதகை ரேஸ் கோர்ஸ் பகுதியில் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்படும்.

### ஊரக மேம்பாடு

- கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் ரூ.3,500 கோடியில் ஒரு லட்சம் புதிய வீடுகள் கட்டித்தரப்படும்.
- ஊரகப் பகுதிகளில் மிகவும் பழுதடைந்த வீடுகளுக்கு பதில் புதிய வீடுகள் கட்டித்தரப்படும். சீரமைக்க இயலாத வீடுகளுக்குப் பதிலாகப் புதிய வீடுகள் ரூ.600 கோடியில் 25,000 வீடுகள் கட்டித்தரப்படும்.
- சமூக நல்லிணக்க ஊராட்சிக்கான விருதுகள் வழங்கப்படும். 10 ஊராட்சிகளுக்கு தலா ரூ.1 கோடி ஊக்கத்தொகை வழங்கப்படும்.
- முதலமைச்சரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 6100 கி.மீ. நீளம் சாலை அமைக்கப்படும், இதற்காக ரூ.2,200 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- கலைஞர் கைவினை திட்டத்தின் கீழ் 19,000 கைவினைஞர்களுக்கு மானிய நிதியாக ரூ.74 கோடி ஒதுக்கீடு

### தொழில்துறை

- இந்தியாவிலேயே அதிக குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமையப் பெற்ற மாநிலங்களில் 32 லட்சத்துக்கும் அதிகமான நிறுவனங்களுடன் தமிழகம் மூன்றாமிடத்தில் உள்ளது.
- 10 இலட்சம் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வங்கிக் கடன் உதவிக்கு ரூ.2.5 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- ரூ.366 கோடியில் சிட்கோ 9 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படும். இதன் மூலம் 17,500 வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.
- கோவை - சூலூர், பல்லடத்தில் தலா 100 ஏக்கர் பரப்பளவில் செமிகண்டக்டர் இயந்திரத் தொழிற்பூங்கா அமைக்கப்படும்.
- 250 ஏக்கரில் திருச்சியில் பொறியியல் மற்றும் வார்ப்பகத் தொழிற்பூங்கா உருவாக்கப்படும். இதன்மூலம், 5,000 வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.
- ரூ.250 கோடியில் மதுரை (மேலூர்), கடலூரில் காலணித் தொழிற்பூங்கா உருவாக்கப்படும். இதன்மூலம், 20,000 வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.
- ரூ.50 கோடியில் தமிழ்நாடு செமிகண்டக்டர் இயக்கம் 2030 செயல்படுத்தப்படும்.
- 2,000 தற்சார்புத் தொழிலாளர்களுக்கு இருசக்கர மின் வாகனம் வாங்க தலா ரூ.20,000 மானியம் வழங்கப்படும்.

### இதர அறிவிப்புகள்

- 44-ஆவது செஸ் ஒலிம்பியாட் 2022, கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள் - 2023, தெற்காசிய இளையோர் தடகள சாம்பியன்ஷிப், ஆசிய ஆண்கள் ஹாக்கி சாம்பியன்ஸ் கோப்பை - 2023 போன்ற பல்வேறு சர்வதேச மற்றும் தேசிய அளவிலான

SMART LEADERS IAS ACADEMY

விளையாட்டுப் போட்டிகள் தமிழக அரசால் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன.

- உலக அரங்கில் சதுரங்க விளையாட்டின் தலைநகராக தமிழகம் விளங்குகிறது. இதுவரை இரண்டு சாம்பியன்கள் மற்றும் 31 கிராண்ட் மாஸ்டர்கள் தமிழ் மண்ணிலிருந்து உருவாகியுள்ளனர். இந்த வெற்றியை தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டும் மாணவர்களிடையே சதுரங்க விளையாட்டை ஊக்குவிக்க பல சாம்பியன்களை எதிர்காலத்தில் உருவாக்கும் வகையிலும், பள்ளிப் பாடத்திட்டத்தில் சதுரங்க விளையாட்டினைச் சேர்த்திடும் வகையிலும், உடற்கல்விப் பாடத்திட்டம் உரிய வகையில் மாற்றியமைக்கப்படும்.
- காற்று மாசுபாட்டை குறைத்து சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நோக்கத்துடன் சென்னை மாநகரத்துக்கு 950 மின் பேருந்துகள், கோவை மாநகரத்துக்கு 75 மின் பேருந்துகள், மதுரை மாநகரத்துக்கு 100 மின் பேருந்துகள் என மொத்தம் 1,125 மின் பேருந்துகள் உலக வங்கி மற்றும் ஜெர்மன் வளர்ச்சி வங்கிக் கடனுதவியுடன் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- எட்டையபுரத்தில் உள்ள பாரதியார் இல்லம் உள்பட 17 புராதனக் கட்டடங்களைப் புதுப்பிக்க ரூ. 150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.
- சென்னை அருகே ஒரு புதிய நகரம் சுமார் 2,000 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்படும்.
- தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், நிதிநுட்ப வணிக மண்டலங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள், வங்கி மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள், வணிக வளாகங்கள், வர்த்தக மையங்கள், மாநாட்டுக் கூடங்கள் மட்டுமன்றி, அரசு மற்றும் தனியார் துறையின் மூலம் கல்வி மற்றும் சுகாதாரச் சேவைகள் அளிக்கும் நிறுவனங்களும் இந்த நகரத்தில் அமைக்கப்படும்.
- சிங்கப்பூர் அறிவியல் மையத்துடன் இணைந்து நவீன முறையில் சென்னை அறிவியல் மையம் உருவாக்கப்படும்.

## 4. பொருளாதார ஆய்வறிக்கை

- தமிழக வரலாற்றில் முதல்முறையாக மாநில பொருளாதார ஆய்வறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.
- தமிழக சட்டப்பேரவையில் 2025-2026-ம் ஆண்டுக்கான பட்ஜெட் மார்ச் 14 தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில், மாநில திட்டக்குழு சார்பில் தயாரிக்கப்பட்ட 'தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2024-25'-ஐ தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மார்ச் 13 அன்று வெளியிட்டார்.
- தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை இலச்சினையில் கடந்த

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

ஆண்டுகளில் ரூபாய் குறியீடு இடம்பெற்றிருந்தது.

- இந்த ஆண்டு ரூபாய் குறியீட்டிற்குப் பதிலாக 'ரூ' என்ற எழுத்து இடம் பெற்றுள்ளது.
- பிற மொழியைத் தவிர்த்து தமிழுக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதமாக இலச்சினையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**மாநில பொருளாதார ஆய்வறிக்கை முக்கிய அம்சங்கள்**

- 2021-22-ல் இருந்தே 8% அல்லது அதற்கு மேலான வளர்ச்சி விகிதத்தைத் தமிழ்நாடு தொடர்ந்து எட்டி வருகிறது. 2025-25லும் 8% அல்லது அதற்கு மேலான வளர்ச்சி விகிதத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- தமிழ்நாடு 2023-24 ஆம் ஆண்டில் தேசிய உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 9.21% பங்களித்துள்ளது. 2023-24ல் மாநில உள்நாட்டு உற்பத்தியானது (ஜிஎஸ்டிபி) ரூ.27.22 லட்சம் கோடியை எட்டியுள்ளது. பெயரளவு வளர்ச்சி விகிதம் 13.71% ஆகவும், உண்மையான வளர்ச்சி விகிதம் 8.33% ஆகவும் உள்ளது.
- தமிழகத்தின் தனிநபர் வருமான வளர்ச்சியானது தொடர்ந்து பல ஆண்டுகளாக தேசிய சராசரியைவிட அதிகமாகவே இருந்து வருகிறது. 2022-23ல் ரூ.2.78 லட்சமாக இருந்தது; இது தேசிய சராசரியான ரூ.1.69 லட்சத்தைக் காட்டிலும் 1.64 மடங்கு அதிகமானதாகும்.
- இதன் காரணமாக தனிநபர் வருமானத்தில் தமிழகம் நான்காம் இடம் வகிக்கிறது. மாநிலத்தின் தனி நபர் வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் தேசிய சராசரியை விட மேலே உள்ளது.
- 2023-24ல், சேவைத் துறையானது மாநிலத்தின் மொத்த மாநில உற்பத்தி மதிப்புக்கூட்டலில் (ஜிஎஸ்விஏ) 53.63% பங்களித்தது; அதற்கடுத்து இரண்டாம் நிலைத் துறை (33.37%), முதன்மைத்துறை (13%) பங்களித்துள்ளன. வளர்ந்த மாநிலங்களைப் போலவே மாநிலத்தின் இரண்டாம் நிலைத் துறையின் பங்கு 5% அளவில் அதிகரித்தால், வேலைவாய்ப்புகள் மேலும் அதிகரிக்கும்.
- தமிழ்நாட்டில் 2022-23-ல் 6% என்றிருந்த சில்லறை வர்த்தகப் பணவீக்கம், 2023-24ல் 5.4% ஆகவும், 2024-25ல் (ஜனவரி 2025 வரையில்) 4.8% ஆகவும் குறைந்துள்ளது. தமிழ்நாட்டில் 2019-20ல் 6% என்றிருந்த நகர்ப்புர பணவீக்கம் 2024-25-ல் (ஜனவரி 2025 வரையில்) 4.5% ஆகக் குறைந்துள்ளது.
- மொத்த பயிரிடப்பட்ட பரப்பளவில் நெல், மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு, தினை வகைகள் உள்ளிட்ட உணவு தானியங்கள் 62% ஆகவும், எண்ணெய் வித்துகள், கரும்பு, பருத்தி போன்ற உணவு தானியமல்லாத பயிர்கள் 38% ஆகவும் உள்ளன. பயிர்ப்பரப்பில் நெல் தொடர்ந்து முதன்மை நிலை வகித்து வருகிறது. 2019-20ல் மொத்த பயிர்ப் பரப்பில் 32.1% ஆக

SMART LEADERS IAS ACADEMY

இருந்த நெல்லின் பங்கு 2023-24ல் 34.4% ஆக அதிகரித்துள்ளது.

- தமிழக விவசாயிகளுக்கு பட்டியலிடப்பட்ட வணி வங்கிகள் வாயிலாக வழங்கப்படும் கடன் 2019-20ல் ரூ.1.83 லட்சம் கோடியிலிருந்து, 2023-24ல் ரூ.3.58 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.
- 2024-ம் ஆண்டில் உலக முதலீட்டாளர் மாநாடு நடத்தப்பட்டு ரூ.6.64 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 14.55 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 2019-20 முதல் 2023-24 வரையான காலத்தில் தமிழ்நாட்டின் தொழில் துறைக்கு வர்த்தக வங்கிகள் அளித்துள்ள கடன் ரூ.2.5 லட்சம் கோடியிலிருந்து ரூ.3.01 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. அந்நிய நேரடி முதலீடு ரூ.5,909 கோடியிலிருந்து ரூ.20,157 கோடியாக அதிகரித்துள்ளது.
- 2005-06 முதல் 2022-23 வரையான காலத்தில் தமிழ்நாட்டின் வறுமை நிலை (ஹெச்சிஆர்) 36.54%-லிருந்து வெறும் 1.43% என வெகுவாக குறைந்துள்ளது.
- சமூகத் துறைக்கான செலவினங்களை தமிழக அரசு தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது. 2019-20ல் ரூ.79,859 கோடியாக இந்த ஒதுக்கீடு, 2022-23 ஆம் ஆண்டில் ரூ.1.16 லட்சம் கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## 5. தமிழக வேளாண் பட்ஜெட் 2025

- மொத்தத்தில் வேளாண் துறைக்கு ரூ.45,661 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் கடந்த 2021-ம் ஆண்டு முதல் வேளாண் துறைக்கு தனி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது.
- அந்த வகையில், 5-வது முறையாக வேளாண் பட்ஜெட்டை சட்டப்பேரவையில் தமிழக வேளாண்மை, உழவர் நலத் துறை அமைச்சர் எம்ஆர்கே. பன்னீர்செல்வம் நேற்று தாக்கல் செய்தார்.

### முக்கியக் குறிப்புகள்

- தமிழகத்தில் கடந்த 2019-20 நிதி ஆண்டில் 1.47 கோடி ஏக்கராக இருந்த மொத்த சாகுபடி பரப்பு, 3.23 லட்சம் ஏக்கர் அதிகரித்து, 2024-25-ம் ஆண்டில் 1.50 கோடி ஏக்கராக உயர்ந்துள்ளது.
- கேழ்வரகு உற்பத்தி திறனில் தமிழகம் தேசிய அளவில் முதல் இடத்திலும், மக்காச்சோளம், எண்ணெய் வித்துகள், கரும்பு ஆகியவற்றில் 2-ம் இடத்திலும், நிலக்கடலை, குறுதானியங்கள் உற்பத்தி திறனில் 3-ம் இடத்திலும் உள்ளது.
- 2,338 கிராம ஊராட்சிகளில் தன்னிறைவு பெற்று உழவர் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடும் உன்னத முயற்சியில் ரூ.269 கோடியே 50 லட்சம் ஒதுக்கீட்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்.

SMART LEADERS IAS ACADEMY

- எஸ்சி, எஸ்டி பிரிவை சேர்ந்த சிறு, குறு விவசாயிகள் ஒருங்கிணைந்த பண்ணையம், பசுமைக் குடில், வேளாண் இயந்திரங்கள் போன்ற திட்டங்களில் அதிகபட்சம் 70 சதவீத மானியம் பெறும் வகையில், ரூ.61.12 கோடி ஒதுக்கப்பட்டு இதுவரை 15,800 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- தமிழகத்தில் பயிர் சாகுபடிக்கான குறுகியகால வேளாண் கடன் தேவைக்காக வரும் 2025-26-ம் நிதி ஆண்டில் ரூ.17,000 கோடி பயிர்க்கடன் வழங்கப்படும்.
- வேளாண் பட்டதாரிகள் மூலம் நவீன தொழில்நுட்பங்கள், வேளாண் ஆலோசனைகள் வழங்க 1,000 இடங்களில் ரூ.42 கோடியில் முதல்வரின் 'உழவர் நல சேவை மையங்கள்' தொடங்கப்படும்.
- நெல் உற்பத்தி திறனை அதிகரிக்க டெல்டா மாவட்டங்களில் 18 லட்சம் ஏக்கரிலும், மற்ற மாவட்டங்களில் 34 லட்சம் ஏக்கரிலும் ரூ.160 கோடியில் சிறப்பு தொகுப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.
- இயற்கை சீற்றங்களால் பயிர் பாதிப்பில் இருந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க ரூ.841 கோடியில் பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படும்.
- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலம் புதிய கண்டுபிடிப்புக்கான டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதியாக ரூ.1 கோடி ஒதுக்கப்படும்.
- நிலமற்ற வேளாண் தொழிலாளர்களின் விபத்து உயிரிழப்பு இழப்பீட்டு தொகை ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.2 லட்சமாகவும், இயற்கை மரணத்துக்கான நிதியுதவி ரூ.20 ஆயிரத்தில் இருந்து ரூ.30 ஆயிரமாகவும், இறுதிச்சடங்கு செலவுக்கான நிதியுதவி ரூ.2,500-ல் இருந்து ரூ.10 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படும்.
- முதல்முறையாக ரூ.10 கோடியில் முந்திரி வாரியம் உருவாக்கப்படும்.
- 20 உழவர் சந்தைகளில் பசுமை காய்கறிகளை பொதுமக்கள் தங்கள் வீடுகளில் இருந்தே ஆன்லைன் முறையில் பெற்றுக்கொள்ள, இணைய வர்த்தக தளத்துடன் இணைக்கப்படும்.
- முதல்வரின் 'மண்ணுயிர் காத்து, மன்னுயிர் காப்போம்' திட்டம் ரூ.142 கோடியில் செயல்படுத்தப்படும்.
- ரூ.35 கோடியில் ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும்
- வேளாண் விளைபொருட்களுக்கான நல்லூர் வரகு (கடலூர்), வேதாரண்யம் முல்லை (நாகப்பட்டினம்), நத்தம் புளி (திண்டுக்கல்), ஆயக்குடி கொய்யா (திண்டுக்கல்), கப்பல்பட்டி கரும்பு முருங்கை (திண்டுக்கல்) ஆகியவற்றுக்கு புவிசார் குறியீடு பெற நடவடிக்கை எடுக்கப்படும்.
- 63 ஆயிரம் மலைவாழ் ஆதிதிராவிட பழங்குடியினருக்கு மலை வாழ் உழவர் முன்னேற்றத் திட்டம் செயல்படுத்திட ரூ.22 கோடியே 80 லட்சம் ஒதுக்கீடு.

SMART LEADERS IAS ACADEMY

- உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கும் 3 விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருது வழங்கப்படும். இதற்காக ரூ. 6 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- உழவர்களை அவர்களை கிராமங்களிலேயே சந்தித்து தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கிட உழவரைத் தேடி வேளாண்மை திட்டம் தொடங்கப்படும்.
- **கோடைக்காலப் பயிர்த் திட்டம்:** கோடைக்காலங்களில் சாகுபடிக் குறைவால் ஏற்படும் காய்கறிகளின் விலை உயர்வைக் கட்டுப்படுத்திடவும், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைத்திடவும் முக்கிய காய்கறிகளை ஏப்ரல், மே மாதங்களில் சாகுபடி செய்திட ரூ.10.50 கோடி ஒதுக்கீடு.
- மக்களின் ஊட்டச்சத்து தேவையான அளவு உறுதி செய்வதுடன், விவசாயிகள் வருமானத்தை உயர்த்திட ரூ.125 கோடியில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் உருவாக்கப்படும்.
- தமிழ்நாட்டில், சிறு மற்றும் குறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதியோர் ஓய்வூதியம், மகப்பேறு சலுகைகள், இயற்கை மரண உதவி, விபத்து நிவாரணம், இறுதிச் சடங்கு உதவி மற்றும் கல்வி உதவி போன்ற சலுகைகள் வழங்கப்படுகின்றன.
- விபத்து காரணமாக ஏற்படும் மரணத்திற்கான நிவாரணம் ரூ.1 லட்சத்திலிருந்து ரூ.2 லட்சமாக உயர்த்தப்படும்.
- விபத்து காரணமாக ஏற்படும் ஊனத்திற்கான நிவாரணம் ரூ.20,000 லிருந்து ரூ.1 லட்சமாக உயர்த்தப்படும்.
- இயற்கை மரணத்திற்கான உதவி ரூ.20,000 லிருந்து ரூ.30,000 ஆக உயர்த்தப்படும்.
- இறுதிச் செலவுகளுக்கான உதவி ரூ.2,500 லிருந்து ரூ.10,000 ஆக உயர்த்தப்படும்.
- பசுமைத் தமிழ்நாட்டை உருவாக்க, தமிழ்நாடு வேளாண்காடுகள் கொள்கை உருவாக்கப்படும்.
- பருத்தியின் உற்பத்தியை அதிகரித்திட ரூ.12.21 கோடியில் பருத்தி உற்பத்திப் பெருக்குத் திட்டம் உருவாக்கப்படும்.
- உணவு எண்ணெய்த் தேவையில் தன்னிறைவு அடைய ரூ.108 கோடிய 6 லட்சத்தில் எண்ணெய் வித்துகள் இயக்கம் அமைக்கப்படும்.
- மக்காச்சோள சாகுபடிப் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க ரூ.40 கோடியே 27 லட்சத்தில் மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்படும்.
- ரூ.1.50 கோடி செலவில் இ-வாடகை செயலி மூலம் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குவதை வலுப்படுத்தப்படும்.
- ரூ.1.50 கோடியில் ஊட்டச்சத்துள்ள வெண்ணைப்பழ சாகுபடியை தென்காசி, திண்டுக்கல், தேனி, கள்ளக்குறிச்சி, நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் 500 ஏக்கர்

SMART LEADERS IAS ACADEMY

பரப்பளவில் பயிரிட ஊக்குவிக்கப்படும்.

- 'தமிழ்நாடு தினை இயக்கம்' 2023-24 முதல் 2027-28 வரை ஐந்தாண்டு திட்டமாக அறிவிக்கப்பட்டு, அனைத்து வேளாண்மை மற்றும் சகோதர துறைகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகிறது.
- இந்தத் திட்டம் 2025-26 ஆம் ஆண்டு முழுவதும் விவசாயி குழுக்கள் உருவாக்கம், பயிர் உற்பத்தி தொகுப்புகள் மற்றும் தனிப்பயன் பணியமர்த்தல் மையங்களை நிறுவுதல் போன்ற முக்கிய கூறுகளுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும், இதற்கு மத்திய மற்றும் மாநில நிதியிலிருந்து ரூ.52.44 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### பலா மேம்பாட்டு இயக்கம்!

- "முன்றில் பலவின் படுசுகளை மரீஇப்
புன்தலை மந்தி துர்ப்ப" என வீட்டு முற்றத்தில் பழந்தமிழர் வளர்த்த பலா மரத்தினைப் பற்றிய குறிப்பு நற்றிணையில் இடம் பெற்றுள்ளது.
- 2023-24 மற்றும் 2024-25 ஆம் ஆண்டுகளில், பலாப்பழ சாகுபடிக்கான சிறப்புத் திட்டம் ரூ.3.71 கோடி செலவில் அறிவிக்கப்பட்டது. பரப்பளவு விரிவாக்கம், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பூச்சி மேலாண்மை, குறைந்தபட்ச பதப்படுத்தும் பிரிவு, பலாப்பழ சாகுபடிக்கான பயிற்சி மற்றும் மதிப்பு கூட்டல் ஆகியவை இதில் அடங்கும்.

### பனை மேம்பாட்டு இயக்கம்!

- "நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையிந் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்" என நாரை விடு தூது பாடலில் பனை குறித்த குறிப்புகள் அமைந்துள்ளது.
- தமிழ்நாட்டின் மாநில மரமான பனை மரம், தமிழர்களிந் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் காலநிலை மீள்தன்மைக்கு உதவும், முக்கியத்துவம் வாய்ந்த பனைமரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு நான்கு ஆண்டுகளாகப் பனை மேம்பாட்டு இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### தமிழ்நாடு முந்திரி வாரியம்

- தமிழ்நாட்டில் அரியலூர், கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை மற்றும் தேனி மாவட்டங்களில் முந்திரி அதிகமாக பயிரிடப்படுகிறது.
- நாட்டில் தமிழ்நாடு முந்திரி உற்பத்தியில் நான்காவது இடத்தில் இருந்தாலும் ஏற்றுமதியில் இரண்டாவது இடத்தில் உள்ளது. எனவே, முந்திரியின் பரப்பினை உயர்த்தி, உற்பத்தியை அதிகரிக்கவும், முந்திரி சார் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கவும், முந்திரித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு முந்தி வாரியம் ஏற்படுத்தப்படும்.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

### நன்னிலம் மகளிர் நிலவுடைமைத் திட்டம்

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த பெண் விவசாயத் தொழிலாளர்களுக்கான நன்னிலம் மகளிர் நிலவுடைமைத் திட்டம் ரூ.20 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 6. மத்திய அரசு ஊழியர்களுக்கு 8-வது ஊதியக் குழு

- மத்திய அரசு ஊழியர்களின் ஊதியம், ஓய்வூதியதாரர்களுக்கான படிகளை மாற்றியமைப்பதற்காக எட்டாவது ஊதியக் குழு அமைக்க மத்திய அரசு ஒப்புதல் (ஜனவரி 2025) அளித்துள்ளது.
- ஏழாவது ஊதியக் குழு கடந்த 2016-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதன் பதவிக் காலம் வரும் 2026-இல் முடிவடைய உள்ள நிலையில், இந்த முடிவை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.
- மத்திய அரசு ஊழியர்களின் ஊதியத்தை மாற்றியமைப்பதற்காக 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதியக் குழுவை மத்திய அரசு அமைப்பது வழக்கம்.
- கடந்த 1947-ஆம் ஆண்டு முதல் 7 ஊதியக் குழுக்களை மத்திய அரசு அமைத்துள்ளது.

## 7. நிதி ஆயோக்கின் நிதி வளக் குறியீடு

- நிதி ஆயோக் வெளியிட்ட 'நிதி வளக் குறியீடு' தரவரிசைப் பட்டியலில் கனிம வளம் நிறைந்த ஒடிஸா, சத்தீஸ்கர், கோவா, ஜார்க்கண்ட் மாநிலங்கள் முன்னிலை வகிப்பது தெரியவந்துள்ளது.
- இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி), மக்கள்தொகை, மொத்த பொது செலவினம், வருவாய், ஒட்டுமொத்த நிதி நிலைத்தன்மை ஆகியவற்றுக்கு மாநிலங்களின் பங்களிப்பு அடிப்படையில் முதல் முறையாக நிதி வளக் குறியீட்டை (எஃப்ஹெச்ஐ 2025) வெளியிட்டது.
- இந்தப் பட்டியலில் 67.8 புள்ளிகளுடன் நிதி வளம் நிறைந்த மாநிலங்களில் ஒடிஸா முதலிடம் வகிக்கிறது.
- இதனுடன் சத்தீஸ்கர், கோவா, ஜார்க்கண்ட், மகாராஷ்டிரம், உத்தர பிரதேசம், தெலங்கானா, மத்திய பிரதேசம், கர்நாடகம் ஆகியவை முன்னிலை மாநிலங்கள் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.
- தமிழகம், பிகார், ராஜஸ்தான், ஹரியாணா உள்ளிட்ட மாநிலங்கள் பங்களிப்பாளர்கள் என்ற பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.
- நிதி பற்றாக்குறை, கடன் நிலையற்ற தன்மை உள்ளிட்ட பாதிப்புகளை எதிர் கொண்டுவரும் பஞ்சாப், ஆந்திரம், மேற்கு வங்கம், கேரளம் ஆகிய மாநிலங்கள் விருப்ப நிலை என்ற மோசமான பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 8. ஆசியானுக்கு இணையாக இந்திய சுங்க வரி

- இந்தியாவில் விதிக்கப்படும் சுங்க வரி விகிதம் சராசரியாக 11.65 சதவீதத்தில் இருந்து 10.66 சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளதாக மத்திய மறைமுக வரிகள் வாரிய

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

(சிபிஐசி) தலைவர் சஞ்சய் அகர்வால் தெரிவித்தார்.

- இதன்மூலம் கம்போடியா, வியத்நாம், மியான்மர், சிங்கப்பூர், தாய்லாந்து உள்ளிட்ட 10 நாடுகளை உள்ளடக்கிய ஆசியான் கூட்டமைப்பில் உள்ள நாடுளில் விதிக்கப்படும் சுங்க வரிக்கு நிகரான நிலையை இந்தியா அடைந்து வருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.
- கடந்த பிப்ரவரி 1-ஆம் தேதி தாக்கல் செய்த 2025-26 நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் 7 விதமான சுங்க வரியை நீக்குவதாக நிதியமைச்சர் அறிவித்தார்.

## 9. ரெப்போ வட்டி விகிதம் குறைப்பு

- வங்கிகளுக்கான குறுகிய காலக் கடனுக்கான ரெப்போ வட்டி விகிதம் 0.25% குறைத்து 6.25% ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஆர்பிஐ தெரிவித்துள்ளது.
- 5 ஆண்டுகளுக்குப் பிறகு ரெப்போ வட்டி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
- மேலும், 2025-26 ஆம் நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6.7% ஆக இருக்கும் என்றும் பணவீக்கம் 4.2% ஆக இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.
- 2025-26 ஆம் நிதியாண்டில் நான்கு காலாண்டுகளில் பொருளாதார வளர்ச்சி முறையே 6.7%, 7%, 6.5%, 6.5% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் ஆர்பிஐ கூறியுள்ளது.

## 10. தொழில்நுட்ப ஏற்பு நிதி (TAF)

- சமீபத்தில், இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACe) தொழில்நுட்ப ஏற்பு நிதி என்ற புதிய நிதியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் விண்வெளி ஸ்டார்ட்அப்களின் வளர்ச்சியை ஆதரிப்பதற்காக ரூ. 500 கோடி நிதியைக் கொண்டுள்ளது.
- இந்த நிதியானது உள்நாட்டு விண்வெளி தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதையும், இறக்குமதி செய்யப்பட்ட தீர்வுகளைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 11. பெண்கள் கடன்

- கடந்த 5 ஆண்டுகளில் வங்கி, நிதி நிறுவனங்களில் பெண்கள் கடன் வாங்குவது 22 சதவீதம் அதிகரித்துள்ளது.
- இந்தியா பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு தொடர்பான அறிக்கையை நிதி ஆயோக் தலைமைச் செயல் அதிகாரி (சிஇஓ) பி.வி.ஆர். சுப்பிரமணியன் தில்லியில் வெளியிட்டார்.
- தொழில் பயன்பாட்டுக்காக பெண்கள் கணக்குத் தொடங்குவது 2019-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இப்போது 4.6 சதவீதம் அதிகரித்துள்ளது.
- கடன் வாங்கும் பெண்களில் 60 சதவீதம் பேர் இடைநிலை நகரங்கள் மற்றும் கிராமப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

SMART LEADERS IAS ACADEMY

12. **அதிக வருமானம் கொண்ட பொருளாதாரத்தை நோக்கிய இந்தியாவின் பாதை**

- "ஒரு தலைமுறையில் உயர் வருமானம் கொண்ட பொருளாதாரமாக மாறுதல்" என்ற தலைப்பிலான உலக வங்கி அறிக்கை, 2047 ஆம் ஆண்டுக்குள் அதிக வருமானம் கொண்ட நாடு (HIC) அந்தஸ்தை அடைய, அடுத்த 22 ஆண்டுகளில் இந்தியா சராசரியாக 7.8% ஆண்டு வளர்ச்சி விகிதத்தை அடைய வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.
- உலகப் பொருளாதாரத்தில் இந்தியாவின் பங்கு 2000 ஆம் ஆண்டில் 1.6% ஆக இருந்தது, 2023 ஆம் ஆண்டில் 3.4% ஆக இரட்டிப்பாகி, உலகின் 5 வது பெரிய பொருளாதாரமாக மாறியுள்ளது.
- இந்தியா 2047 ஆம் ஆண்டுக்குள் HIC ஆக இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- இதை அடைய, அதன் தனிநபர் மொத்த தேசிய வருமானம் (GNI) 2023 இல் 2,540 அமெரிக்க டாலர்களிலிருந்து கிட்டத்தட்ட 8 மடங்கு அதிகரிக்க வேண்டும்.

13. **இந்தியாவில் மகளிர் வேலைவாய்ப்பு 48% அதிகரிப்பு**

- நடப்பு 2025-ம் ஆண்டில் மகளிருக்கான வேலைவாய்ப்பு 48% அதிகரித்துள்ளது.
- மாநிலங்களில் தலைநகருக்கு அடுத்தபடியாக உள்ள இரண்டாவது, 3-வது நிலை நகரங்களில் பெண்களுக்கான வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளது.
- மகளிர் வேலைவாய்ப்புகளில் 34 சதவீதத்தைக் கொண்ட ஐடி, கணினிகள், மென்பொருள் போன்ற தொழில்கள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றன.

14. **எட்டாவது பொருளாதார கணக்கெடுப்பு பணி**

- மத்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்தால் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை பொருளாதார கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.
- இதன்படி, 8-ஆவது பொருளாதார கணக்கெடுப்பை 2025 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை நடத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- 1977 ஆம் ஆண்டு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுடன் (UTs) இணைந்து லட்சத்தீவுகள் தவிர, நாடு முழுவதும் இந்தியாவின் முதல் பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- பொருளாதார மக்கள்தொகை கணக்கெடுப்பை புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) நடத்துகிறது.தொடர்ந்து 1980, 1990, 1998, 2005, 2013 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

15. **சமநிலை வரி**

- கூகிள் மற்றும் மெட்டா போன்ற தளங்களில் விளம்பரதாரர்களுக்கு

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

பயனளிக்கும் நோக்கில், ஆன்லைன் விளம்பரங்களுக்கான சமநிலை வரி அல்லது டிஜிட்டல் வரியை ரத்து செய்ய மத்திய அரசு முன்மொழிந்துள்ளது.

- **நோக்கம்:** ஏப்ரல் 2 முதல் பரஸ்பர கட்டணங்களை அச்சுறுத்தியுள்ள அமெரிக்காவிற்கு எதிராக மிகவும் இணக்கமான நிலைப்பாட்டைக் காட்டுவதே இந்த முன்மொழிவின் நோக்கமாகும்.
- டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கு வரி விதிக்கும் நோக்கத்துடன், அதாவது இந்தியாவிலிருந்து வெளிநாட்டு மின் வணிக நிறுவனங்களுக்குக் கிடைக்கும் வருமானத்திற்கு வரி விதிக்கும் நோக்கத்துடன், 2016 ஆம் ஆண்டு இந்தியாவில் சமநிலை வரி அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது வணிகத்திலிருந்து வணிக பரிவர்த்தனைகளுக்கு வரி விதிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பெரும்பாலும் "கூகிள் வரி" என்றும் குறிப்பிடப்படுகிறது.
- ஆன்லைன் விளம்பரங்களுக்கான சமநிலை வரி 2016 இல் அறிமுகப்படுத்தப்பட்டது, மேலும் நிதிச் சட்டம் 2020 அதை மின் வணிக சேவைகளுக்கும் நீட்டித்தது.

## 16. நிதி மசோதா 2025

- இணையவழி விளம்பரங்களுக்கு 6 சதவீத வரியை ரத்து செய்யும் திருத்தம் உள்பட மத்திய அரசின் 35 திருத்தங்களுடன், மக்களவையில் நிதி மசோதா 2025 நிறைவேற்றப்பட்டது.
- நிதி மசோதா 2025 முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வரிச்சுமையை குறைத்துள்ளது. அடுத்த நிதியாண்டில் தனிநபர் வருமான வரி வசூல் 13.14 சதவீதம் வளரும் என்று உறுதியான தரவுகள் மூலம் மதிப்பிடப்பட்டுள்ளது.
- சர்வதேச பொருளாதார சூழல் உறுதியாக இல்லை. இதை எதிர்கொள்ளும் நோக்கில், இணையவழி விளம்பரங்களுக்கு 6 சதவீத வரியை ரத்து செய்யும் திருத்தம் மசோதாவில் கொண்டுவரப்பட்டது.

## 17. 2024 ஆம் ஆண்டில் உலகின் இரண்டாவது பெரிய தேயிலை ஏற்றுமதியாளர்

- இந்திய தேயிலை வாரியத்தின் கூற்றுப்படி, இந்தியா உலகின் இரண்டாவது பெரிய தேயிலை ஏற்றுமதியாளராக மாறியுள்ளது.
- **2024 ஆம் ஆண்டில் இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி:** 255 மில்லியன் கிலோ, இலங்கையை விஞ்சி கென்யாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் உள்ளது.
- **ஏற்றுமதி மதிப்பு:** 2023 இல் ரூ.6,161 கோடியாக இருந்த ஏற்றுமதி மதிப்பு 15% அதிகரித்து, 2024 இல் ரூ.7,111 கோடியாக உயர்ந்துள்ளது.

## 18. இந்தியாவின் காபி உற்பத்தி

- மார்ச் 2025 இல் முடிவடையும் பயிர் ஆண்டில் இந்தியாவின் காபி உற்பத்தி 3.52 லட்சம் மெட்ரிக் டன்களாக இருக்கும் என்று

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

எதிர்பார்க்கப்படுகிறது, போதுமான அளவு பூக்கள் பொழிவது பெர்ரி அமைப்பிற்கு உதவுவதால் அதிக மகசூல் எதிர்பார்க்கப்படுகிறது.

- இந்தியா உலகின் ஏழாவது பெரிய காபி உற்பத்தியாளராக உள்ளது. 2023-24 நிதியாண்டில், காபி ஏற்றுமதி 1.29 பில்லியன் டாலர்களை எட்டியது, இது 2020-21 ஆம் ஆண்டில் 719.42 மில்லியன் டாலர்களை விட கிட்டத்தட்ட இரு மடங்காகும்.
- இந்தியாவில் காபி முதன்மையாக பல்லுயிர் பெருக்கத்தைக் கொண்ட மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் பயிரிடப்படுகிறது, கர்நாடகா மிகப்பெரிய உற்பத்தியாளராக உள்ளது, அதைத் தொடர்ந்து கேரளா மற்றும் தமிழ்நாடு உள்ளன.

## 19. இந்தியாவில் பருத்தி

- ஒரு காலத்தில் உலகின் முன்னணி பருத்தி உற்பத்தியாளராகவும், முக்கிய ஏற்றுமதியாளராகவும் இருந்த இந்தியா, இப்போது பருத்தியை நிகர இறக்குமதியாளராக மாறியுள்ளது.
- இந்தியாவின் பருத்தி உற்பத்தி 2002-03 ஆம் ஆண்டில் 13.6 மில்லியன் பேல்களிலிருந்து 2013-14 ஆம் ஆண்டில் 39.8 மில்லியன் பேல்களாக கிட்டத்தட்ட மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.
- 2014-க்குப் பிறகு, பருத்தி உற்பத்தி குறைந்துள்ளது, 2024-25 ஆம் ஆண்டிற்கான கணிப்புகள் 29.5 மில்லியன் பேல்கள் ஆகும், இது 2008-09 க்குப் பிறகு மிகக் குறைவு.

## 20. 9.69% வளர்ச்சியுடன் பொருளாதாரத்தில் புதிய உச்சம் தொட்டது தமிழ்நாடு!

- 2024-25 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 9.69 சதவிகித உண்மை வளர்ச்சி விகிதத்துடன் நாட்டிலேயே மிக அதிக வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
- மேலும், கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த மிக உயர்ந்த வளர்ச்சி வீதம் இதுவேயாகும். 2032-33 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கினை அடையும்.
- 2023-24 ஆம் ஆண்டில் ரூ.15,71,368 கோடியாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (ஜிஎஸ்டிபி), 2024-25 ஆம் ஆண்டில் ரூ.17,23,698 கோடியாக உயர்ந்துள்ளதாக மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் இணையதளத்தில் வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.
- இதற்கு முன் 2017-18 ஆம் ஆண்டில் அதிக வளர்ச்சி வீதம் 8.59 சதவிகிதம் பதிவாகியுள்ளது.
- 2020-21ஆம் ஆண்டில் கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் குறைந்தபட்சமாக 0.07 சதவிகிதம் எனப் பதிவாகியது.

SMART LEADERS IAS ACADEMY

SMART LEADERS IAS ACADEMY

21. **இந்தியாவின் சில்லறை பணவீக்கம் ஆறு ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் குறைந்துள்ளது.**

- இந்தியாவின் சில்லறை பணவீக்கம் 2024-25 நிதியாண்டில் 4.6% ஆகக் குறைந்துள்ளது, இது 2018-19க்குப் பிறகு மிகக் குறைவு.
- சில்லறை பணவீக்கம் நுகர்வோர் விலைக் குறியீட்டை (CPI) பயன்படுத்தி அளவிடப்படுகிறது, இது நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைகளின் கூடைக்கான விலைகளின் சராசரியைக் கணக்கிடுகிறது.
- CPI, ஒரு நிலையான கூடை பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையைக் கண்காணிக்கிறது, மேலும் அதன் இயக்கங்கள் பணவீக்கப் போக்குகளைக் குறிக்கின்றன, இது வாங்கும் திறன் மற்றும் பொருளாதாரக் கொள்கையைப் பாதிக்கிறது.

22. **இந்தியாவில் உள்ள MSMEகள் குறித்த நிதி ஆயோக் அறிக்கை**

- நிதி ஆயோக், போட்டித்திறன் நிறுவனத்துடன் இணைந்து MSME வளர்ச்சியைத் தடுக்கும் முக்கிய சவால்களை அடையாளம் கண்டு, அவற்றின் போட்டித்தன்மை மற்றும் பொருளாதார தாக்கத்தை மேம்படுத்த மூலோபாய சீர்திருத்தங்களை முன்மொழிந்து ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டது.

**நிதி ஆயோக்கின் அறிக்கையின்படி:**

- இந்தியாவில் 90% க்கும் மேற்பட்ட MSMEகள் முறைசாரா நிறுவனங்களாகவே உள்ளன.
- உதயம் போர்டல் (95 லட்சம் பதிவுகள் vs 6.34 கோடி மொத்த MSMEகள்) போன்ற முயற்சிகள் இருந்தபோதிலும் , அதிக இணக்க செலவுகள் மற்றும் ஒழுங்குமுறை சுமைகள் பலரை முறைப்படுத்துவதிலிருந்தும், கடன், திட்டங்கள் மற்றும் உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துவதிலிருந்தும் தடுக்கின்றன.
- MSMEகளுக்கான கடன் அணுகலில் குறு/சிறு நிறுவனங்களுக்கு 14% இலிருந்து 20% ஆகவும், நடுத்தர நிறுவனங்களுக்கு 4% இலிருந்து 9% ஆகவும் (2020–2024) அதிகரித்த போதிலும், குறிப்பிடத்தக்க கடன் இடைவெளி நீடிக்கிறது.
- 2014-2022 முதல், சிறிய நிறுவனங்களில் திறமையான உழைப்பு 19.94%, நடுத்தர நிறுவனங்களில் 20% மற்றும் பெரிய நிறுவனங்களில் 12.72% அதிகரித்துள்ளது (உலக வங்கி).
- இருப்பினும், அறிவு சார்ந்த பணியமர்த்தலில் 3.9% சரிவுடன் , குறிப்பிடத்தக்க திறன் பொருத்தமின்மை உள்ளது.
- இந்தியாவில் உள்ள MSMEகள் குறைந்த சந்தை விழிப்புணர்வு, தொழில்நுட்ப அறிவு மற்றும் இயந்திரங்கள் மற்றும் சந்தைப்படுத்தலுக்கான அதிக செலவுகள் காரணமாக தயாரிப்பு பல்வகைப்படுத்தலுக்கு தடைகளை எதிர்கொள்கின்றன.


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

- 2023 உலகளாவிய கண்டுபிடிப்பு குறியீட்டில் இந்தியா 40வது இடத்தில் இருந்தாலும், MSMEகள் மேம்பட்ட தொழில்நுட்பத்திற்கான வரையறுக்கப்பட்ட அணுகல், அதிக செலவுகள் மற்றும் நம்பகத்தன்மையற்ற உள்கட்டமைப்பு ஆகியவற்றை எதிர்கொள்கின்றன.
- இதனால் அவற்றின் அளவிடுதல் மற்றும் உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளில் ஒருங்கிணைப்பு ஆகியவை கட்டுப்படுத்தப்படுகின்றன.
- MSME-களில் 6% மட்டுமே மின் வணிகத்தைப் பயன்படுத்துகின்றன, மேலும் 45% மட்டுமே AI-ஐ ஏற்றுக்கொண்டுள்ளன.
- ECLGS (அவசர கடன் வரி உத்தரவாதத் திட்டம்) மற்றும் ஸ்டார்ட்அப் இந்தியா போன்ற முயற்சிகள் இருந்தபோதிலும், இந்தியாவில் உள்ள MSMEகள் குறைந்த விழிப்புணர்வு மற்றும் புரிதல் காரணமாக அரசாங்கத் திட்டங்களை அணுகவும் முழுமையாகப் பயன்படுத்தவும் சிரமப்படுகின்றன.
- இது நடுத்தர நிறுவனங்களின் குறைவான பிரதிநிதித்துவத்தை பிரதிபலிக்கிறது. 97.92% MSMEகள் நுண் என்றும், 1.89% சிறியதாகவும், 0.01% மட்டுமே நடுத்தரமாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- இந்த இடைவெளி கடுமையான விதிமுறைகள், அதிக இணக்கச் செலவுகள், வரையறுக்கப்பட்ட நிதி அணுகல் மற்றும் குறைந்த உற்பத்தித்திறன் ஆகியவற்றால் ஏற்படுகிறது.

SMART LEADERS IAS ACADEMY

# நியமனங்கள் மற்றும் குழுக்கள்

## 1. இஸ்ரோ புதிய தலைவர் வி.நாராயணன்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) 11-ஆவது தலைவராக வி.நாராயணன் நியமிக்கப்பட்டார்.
- 10வது தலைவர் எஸ். சோமநாத்
- அவர் அடுத்த 2 ஆண்டுகளுக்கு இப்பதவியில் இருப்பார்.
- இவர், தமிழகத்தின் குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்.
- திருவனந்தபுரம், வலியமலையில் அமைந்த இஸ்ரோவின் திரவ உந்து அமைப்பு மையத்தின் (எல்பிஎஸ்சி) இயக்குநரான வி.நாராயணன், கரக்பூர் ஐஐடி-யில் பட்டம் பெற்றவர்.

### இஸ்ரோவில் தமிழர்கள்

- இஸ்ரோவில் தமிழர்கள் முக்கிய பங்காற்றி வருகின்றனர். ‘ரோகிணி-2’ செயற்கைக்கோளை ஏவிய மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், ராக்கெட்டுக்களுக்கான திட எரிபொருள் ஆராய்ச்சியில் அவரது பங்கு முக்கியமானது.
- சந்திரயான்-1, மங்கள்யான் செயற்கைக்கோள்களுக்கான திட்ட இயக்குநராக மயில்சாமி அண்ணாதுரை பணியாற்றினார்.
- ஜிசாட்-12 பணியின் திட்ட இயக்குநராக ந.வளர்மதி.
- இஸ்ரோவின் 9-வது தலைவராக கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கே.சிவன்.
- சந்திரயான் - 2 பணியின் திட்ட இயக்குநராக வனிதா முத்தையா பணியாற்றினார்.
- சூரியனை ஆராயும் ஆதித்யா-எல்1 திட்ட இயக்குநராக நிகர் ஷாஜி, நிலவின் தென் துருவத்தைச் சென்றடைந்த முதல் நாடு என்கிற பெருமைக்குரிய சந்திரயான் - 3 திட்டத்தின் இயக்குநராக பி.வீரமுத்துவேல் என பல தமிழர்கள் சாதனை படைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2. தேசிய மஞ்சள் வாரியம்

- தேசிய மஞ்சள் வாரியத்தை மத்திய வர்த்தகம், தொழில்துறை அமைச்சர் புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.
- அதன் முதல் தலைவராக திரு பல்லே கங்கா ரெட்டி நியமிக்கப்பட்டுள்ளார்.
- வாரியத்தின் தலைமையகம் நிஜாமாபாத்தில் (தெலங்கானா) அமைக்கப்பட்டுள்ளது.

### மஞ்சள்

- மஞ்சள் 'கோல்டன் ஸ்பைஸ்' என்றும் அழைக்கப்படுகிறது.
- புதிதாக அமைக்கப்பட்ட வாரியம் மகாராஷ்டிரா, தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, மத்தியப்

SMART LEADERS IAS ACADEMY

பிரதேசம், மேகாலயா போன்ற மாநிலங்களில் உள்ள மஞ்சள் விவசாயிகளின் நலனில் சிறப்பு கவனம் செலுத்தும்.

- உலகளாவிய மஞ்சள் உற்பத்தியில் 70% இந்தியாவில் மேற்கொள்ளப்படுகிறது.
- இந்தியாவில் 30 வகையான மஞ்சள் உற்பத்தி செய்யப்படுகிறது.

## 3. ஓய்வூதிய திட்டங்களை ஆராய 3 பேர் கொண்ட குழு

- அரசு ஊழியர்களுக்கான பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க ஊரக வளர்ச்சித்துறை செயலர் ககன்தீப்சிங் பேடி தலைமையில் 3 பேர் கொண்ட குழுவை அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
- ஊரகவளர்ச்சித் துறை செயலர் ககன்தீப்சிங் பேடி, மெட்ராஸ் ஸ்கூல் ஆப் எகனாமிக்ஸ் முன்னாள் இயக்குநர் கே.ஆர்.சண்முகம் மற்றும் நிதித்துறை துணை செயலர் பிரத்திக் தயாள் ஆகியோர் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர்.
- கடந்த 2003-ம் ஆண்டு ஏப்.1-ம் தேதி முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- அதே வேளையில் மத்திய அரசுப் பணியாளர்களுக்கு தேசிய ஓய்வூதியத் திட்டம் 2004-ம் ஆண்டு ஜன.1-ம் தேதி முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- எனினும் மாநில அரசுப்பணியாளர்கள் 2003-ம் ஆண்டு ஏப்.1-ம் தேதிக்கு முன்பிருந்த திட்டத்தை செயல்படுத்த வேண்டி தொடர்ந்து கோரிக்கைகளை விடுத்து வருகின்றனர்.

## 4. தமிழ்நாடு லோக் ஆயுக்தா தலைவராக முன்னாள் நீதிபதி ராஜமாணிக்கம் நியமனம்

- தமிழ்நாடு லோக்ஆயுக்தா தலைவராக நீதித்துறை உறுப்பினராக இருந்த உயர் நீதி மன்ற **முன்னாள் நீதிபதி பி.ராஜமாணிக்கத்தை** நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
- தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ராஜமாணிக்கம் 2027 **ஏப்ரல்** 17-**ம்** தேதி வரை பதவியில் இருப் பார்.
- காலியாக உள்ள நீதித் துறை சாரா உறுப்பினர்கள் இடங்களுக்கு நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த மாவட்ட நுகர்வோர் விவகாரங்கள் குறைதீர்வு ஆணையத்தின் தலைவர் **வி.ராம ராஜ்**, வருமானவரி மேல்முறை யீட்டு தீர்ப்பாயத்தின் முன்னாள் உறுப்பினர் **ஆறுமுக மோகன் அலங்காமணி** ஆகியோர் தேர்வு செய்யப்பட்டு, நியமிக்கப்பட்டுள்ளனர்.

SMART LEADERS IAS ACADEMY

- புதிய உறுப்பினர்கள் 5 **ஆண்டுகள் அல்லது** 70 **வயது** - இதில் எது முதலில் வருகிறதோ அதுவரை பதவியில் இருப்பார் கள்.

## 5. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையம்

- 2020 ஆம் ஆண்டு தனது செல்லாத பணம் என்ற நாவலுக்காக சாகித்ய அகாடமி விருதை வென்ற இமயம் என்ற வி. அண்ணாமலையை துணைத் தலைவராக நியமித்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை உத்தரவு பிறப்பித்தது.
- மாநில அளவில் ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருடைய சட்டப்பூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், 'தமிழ்நாடு ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நல ஆணையம்' என்கிற புதிய அமைப்பு கடந்த 2021-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- தமிழ்நாடு மாநில எஸ்சி/எஸ்டி ஆணையச் சட்டம், 2021 இன் விதிகளின் கீழ் மாநில அரசு ஆணையத்தை அமைத்து, ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியை தலைவராகவும், துணைத் தலைவர் உட்பட ஆறு உறுப்பினர்களையும் மூன்று ஆண்டு காலத்திற்கு நியமித்தது.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையத்துக்கான தலைவராக பி.ஆர்.சிவகுமார் செயல்பட்டு வந்தார்.
- அவர் கடந்த ஆண்டு மே மாதம் ஓய்வு பெற்ற நிலையில், ஆணையத்தின் தலைவராக சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி எஸ்.தமிழ்வாணன் நியமிக்கப்பட்டார்.
- அவர் 3 ஆண்டுகளுக்கு தலைவராகச் செயல்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது.
- தற்போது இந்த ஆணையத்தின் துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவிக் காலம் நிறைவடைந்துள்ளது. எனவே, ஆணையத்தின் துணைத் தலைவராக எழுத்தாளர் இமயம் (வெ.அண்ணாமலை) நியமிக்கப்பட்டுள்ளார்.

## 6. புதிய தலைமைத் தேர்தல் ஆணையர்

- புதிய தலைமைத் தேர்தல் ஆணையராக ஞானேஷ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார். 2029, ஜனவரி 26-ஆம் தேதி வரை அவர் அந்தப் பதவியில் நீடிப்பார்.
- தேர்வுக் குழு: பிரதமர் (தலைவர்), மத்திய உள்துறை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர்.
- மேலும், 1989- ஹரியாணா பிரிவு ஐஏஎஸ் விவேக் ஜோஷி தேர்தல் ஆணையராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

SMART LEADERS IAS ACADEMY

- முன்னதாக இந்திய தலைமை தேர்தல் ஆணையரான ராஜீவ் குமார் பிப்.18 ஓய்வுபெற்றார்.

## 7. நிதி ஆயோக்

- பணியாளர் அமைச்சக உத்தரவின்படி, நிதி ஆயோக்கின் தலைமை நிர்வாக அதிகாரி பி.வி.ஆர் சுப்பிரமணியத்தின் பதவிக்காலத்தை மத்திய அரசு ஒரு வருடம் நீட்டித்துள்ளது.
- 1987 ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற இந்திய நிர்வாகப் பணி (IAS) அதிகாரியான சுப்ரமணியம், சத்தீஸ்கர் கேடரைச் சேர்ந்தவர், பிப்ரவரி 2023 இல் இரண்டு வருட காலத்திற்கு இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

## 8. தலைமைப் பொருளாதார ஆலோசகர் பதவிக் காலம் 2 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு!

- மத்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி.அனந்த நாகேஸ்வரனின் பதவிக் காலம் மேலும் 2 ஆண்டுகளுக்கு (2027, மார்ச் 31 வரை) நீட்டிக்கப்பட்டுள்ளது.
- மூன்று ஆண்டு பதவிக் காலத்துடன் மத்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக வி.அனந்த நாகேஸ்வரன் கடந்த 2022, ஜனவரி 28-ஆம் தேதி பொறுப்பேற்றார். கே.வி.சுப்பிரமணியனைத் தொடர்ந்து, இப்பதவிக்கு நாகேஸ்வரன் நியமிக்கப்பட்டார்.
- தலைமைப் பொருளாதார ஆலோசகர் அலுவலகமானது, பல்வேறு பொருளாதார கொள்கைகளை வகுப்பதிலும், பொது பட்ஜெட்டுக்கு முன்பாக தாக்கல் செய்யப்படும் பொருளாதார ஆய்வறிக்கையை தயாரிப்பதிலும் மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்கும் பொறுப்புடையதாகும்.

## 9. தினேஷ் காரா குழு

- இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI - The Insurance Regulatory and Development Authority of India), 1938 ஆம் ஆண்டு காப்பீட்டுச் சட்டத்தின் பல்வேறு அம்சங்களை ஆராய்ந்து திருத்தங்களை பரிந்துரைக்க, பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் தலைவர் தினேஷ் காரா தலைமையில் ஏழு பேர் கொண்ட உயர் அதிகாரம் கொண்ட குழுவை அமைத்துள்ளது.

## 10. உலக தமிழாராய்ச்சி நிறுவன தலைவராக ஆர்.பாலகிருஷ்ணன் நியமனம்

- சென்னை, தரமணியில் உள்ள, உலக தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக ஆர். பாலகிருஷ்ணனை தமிழக அரசு நியமித்துள்ளது.
- ஆர்.பாலகிருஷ்ணன் ஒரு புகழ்பெற்ற தமிழ்மொழி

SMART LEADERS IAS ACADEMY

அறிஞரும், ஆட்சிப்பணி வல்லுநரும் ஆவார்.

- தமிழில் குடிமைப்பணி தேர்வுகளை எழுதி வென்ற முதல் தமிழ் மாணவராவார்.

## 11. பிரதமரின் 2-வது முதன்மைச் செயலாளராக சக்திகாந்த தாஸ் நியமனம்

- பிரதமர் நரேந்திர மோடியின் இரண்டாவது முதன்மைச் செயலாளர் ஆக இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் சக்திகாந்த தாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.
- மூத்த ஐஏஎஸ் அதிகாரியான பி.கே.மிஸ்ரா, 2019 செப்டம்பர் 11 முதல் பிரதமரின் முதன்மைச் செயலாளராக இருந்து வருகிறார். அவருடன் முதன்மைச் செயலாளர்-2 ஆக சக்திகாந்த தாஸ் இருப்பார்.
- பிரதமரின் செயலராக இருவர் நியமிக்கப்படுவது இதுவே முதல் முறை.

## 12. செபி புதிய தலைவர்

- இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் (செபி) புதிய தலைவராக மத்திய நிதி மற்றும் வருவாய் துறை செயலர் துஹின் காந்த பாண்டே நியமிக்கப்பட்டார்.
- தற்போதைய செபி தலைவர் மாதபி புரி புச்-ன் மூன்றாண்டு பதவிக் காலம் பிப்ரவரி 28 உடன் நிறைவடையும் நிலையில், மத்திய அரசு இந்த நியமனத்தை மேற்கொண்டுள்ளது.

## 13. மாணவர்கள் தற்கொலை தடுப்பு: தேசிய பணிக்குழுவை அமைத்தது உச்சநீதிமன்றம்

- உயர்கல்வி நிலையங்களில் மாணவர்கள் தற்கொலை செய்துகொள்வதைத் தடுப்பதற்கான பரிந்துரைகளை அளிக்க, முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி எஸ்.ரவீந்திர பட் தலைமையில் தேசிய பணிக்குழுவை அமைத்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.
- அந்தக் குழுவில் மாநில உயர்கல்வித் துறை, சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல், சட்ட விவகாரங்கள், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறைச் செயலர்கள் பதவி வழி உறுப்பினர்களாக இருப்பர்.
- NCRB 2022 அறிக்கையின்படி, 2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் நடந்த மொத்த தற்கொலைகளில் மாணவர் தற்கொலைகள் 7.6% ஆகும்.
- மகாராஷ்டிராவில் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் தற்கொலைகள் பதிவாகியுள்ளன, அதைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஒடிசா ஆகியவை உள்ளன.

## 14. பிரதமரின் தனி செயலாளராக நிதி திவாரி நியமனம்

- பிரதமரின் தனிச் செயலாளராக நிதி திவாரி நியமிக்கப்பட்டு உள்ளார்.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

- பிரதமரின் அன்றாட அலுவல்களை அவர் கவனிப்பார்.
- குறிப்பாக அவர் பங்கேற்கும் கூட்டங்கள், அவரது உள்நாட்டு, வெளிநாட்டு பயணங்களுக்கு ஏற்பாடு செய்வார்.
- பிரதமர் அலுவலகத்துக்கும் மத்திய அரசின் இதர துறைகளுக்கும் பாலமாக அவர் செயல்படுவார்.
- மத்திய அரசின் கொள்கை முடிவுகளை வரையறுக்கும் உயர்நிலைக் குழுவில் நிதி திவாரி இடம்பெறுவார்.
- ஏற்கெனவே பிரதமரின் தனிச் செயலாளர்களாக மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள் விவேக் குமார், ஹர்திக் சதிஷ்சந்திர ஷா ஆகியோர் பணியாற்றி வருகின்றனர்.

## 15. ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக பொருளாதார நிபுணர் பூனம் குப்தா நியமனம்

- ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக பொருளாதார நிபுணர் பூனம் குப்தாவை மத்திய அரசு நியமனம் செய்துள்ளது.
- ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக இருந்த எம்.டி.பத்ராவின் பதவிக் காலம் கடந்த ஜனவரி மாதத்துடன் நிறைவடைந்தது.
- நேஷனல் கவுன்சில் ஆஃப் அப்ளைடு எக்னாமிக் ரிசர்ச்சின் (National Council of Applied Economic Research, (NCAER) தலைமை இயக்குநராக பணியாற்றும் பூனம் குப்தாவை ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநராக நியமிக்க அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- பதவிக் காலம் மூன்று ஆண்டுகள்

## 16. 23-ஆவது சட்ட ஆணையத் தலைவர் முன்னாள் நீதிபதி தினேஷ் மகேஸ்வரி

- ‘நாட்டின் 23-ஆவது சட்ட ஆணையத்தின் தலைவராக உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி தினேஷ் மகேஸ்வரி, முழுநேர உறுப்பினர்களாக வழக்குரைஞர் ஹிதேஷ் ஜெயின், பேராசிரியர் டி.பி.வர்மா ஆகியோரை நியமிக்க பிரதமர் ஒப்புதல் வழங்கினார்.
- 23-ஆவது சட்ட ஆணையம், கடந்த ஆண்டு செப்டம்பரில் அமைக்கப்பட்டது.
- நாட்டில் பொது சிவில் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வது இந்த ஆணையத்தின் முக்கியப் பணியாக இருக்கும்.

## 17. உச்சநீதிமன்ற அடுத்த தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய்

- உச்சநீதிமன்றத்தின் 51-ஆவது தலைமை நீதிபதியாக கடந்த ஆண்டு நவம்பர் 11-ஆம் தேதி பதவியேற்ற சஞ்சீவ் கன்னா, வரும் மே 13-ஆம் தேதி ஓய்வு பெறவுள்ளார்.
- இதையடுத்து, தனக்குப் பின் மிக மூத்த நீதிபதியான

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

பி.ஆர்.கவாயை (பூஷண் ராமகிருஷ்ண கவாய்), அடுத்த தலைமை நீதிபதியாக நியமிக்க சட்ட அமைச்சகத்துக்கு சஞ்சீவ் கன்னா பரிந்துரை கடிதம் அனுப்பியுள்ளார்.

- மத்திய அரசின் ஒப்புதலுக்கு பிறகு, உச்சநீதிமன்றத்தின் 52-ஆவது தலைமை நீதிபதியாக மே 14-ஆம் தேதி பி.ஆர்.கவாய் பதவியேற்றார்.
- இவர், வரும் நவம்பர் 23-ஆம் தேதி பணி ஓய்வு பெறும் வரை சுமார் 6 மாதங்களுக்கு இப்பதவியை வகிப்பார். உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயது 65 என்பது குறிப்பிடத்தக்கது.
- முன்னாள் தலைமை நீதிபதி **கே.ஜி.பாலகிருஷ்ணனுக்குப்** பிறகு தலைமை நீதிபதி பதவி ஏற்கும் 2-**வது தலித் நீதிபதி கவாய்** என்பது குறிப்பிடத்தக்கது.

## 18. தேசிய பாதுகாப்பு ஆலோசனை வாரியம்

- தேசிய பாதுகாப்பு ஆலோசனை வாரியத்தை (NSAB) அரசாங்கம் மறுசீரமைத்துள்ளது.
- இதில் முன்னாள் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவு (RAW) தலைவர் அலோக் ஜோஷி தலைவராகவும், மேலும் 7 நபர்கள் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர் (வளர்ந்து வரும் தேசிய பாதுகாப்புத் தேவைகளின் அடிப்படையில் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர்).
- 1998 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தேசிய பாதுகாப்பு ஆலோசனை வாரியம், தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகத்தின் (NSCS) கீழ் செயல்படுகிறது.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

# விருதுகள்

## 1. தமிழக அரசின் விருதுகள் அறிவிப்பு

- தமிழக அரசின் சார்பில் திருவள்ளுவர் திருநாளான ஜனவரி 15 ஆம் தேதி முதல்வரால் வழங்கப்படும் விருதுகள் அறிவிக்கப்பட்டன.
- 2025 ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது புலவர் மு. படிக்கராமுக்கு வழங்கப்பட உள்ளது.
- 2024 ஆம் ஆண்டுக்கான விருதுகள்,
  1. கலைஞர் விருது - முத்து வாவாசி
  2. அண்ணா விருது - எல்.கணேசன்
  3. பாரதியார் விருது - கவிஞர் கபிலன்
  4. பாரதிதாசன் விருது - பொன்.செல்வகணபதி
  5. திரு.வி.க.விருது - மருத்துவர் ஜி.ஆர்.ரவிந்திரநாத்
  6. கி.ஆ.பெ.விசுவநாதம் விருது - வே.மு.பொதியவெற்பன்
  7. பெரியார் விருது - விடுதலை ராஜேந்திரன்
  8. அம்பேத்கர் விருது - ரவிக்குமார் எம்.பி.

## 2. தமிழ் வளர்ச்சித் துறை விருதுகள்

- கபிலர் விருது- கவிஞர் முத்தரசன்,
- உவேசா விருது- முனைவர் ஆ.இராமநாதன்,
- கம்பர் விருது- முனைவர் ம.பெ.சீனிவாசன்,
- சொல்லின் செல்வர் விருது- முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா,
- உமறுப்புலவர் விருது- தா.சையது காதர் ஹுசைன்,
- ஜி.யு.போப் விருது- முனைவர் வெ.முருகன்,
- இளங்கோவடிகள் விருது- முனைவர் சிலம்பு ந.செல்வராசு,
- அம்மா இலக்கிய விருது- முனைவர் சரளா இராசகோபாலன்,
- சிங்காரவேலர் விருது- மு.சுப்பிரமணி,
- அயோத்திதாசப் பண்டிதர் விருது- முனைவர் மு.சச்சிதானந்தம்,
- மறைமலையடிகளார் விருது- புலவர் இராமலிங்கம்,
- அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது- முனைவர் பா.அருள்செல்வி,
- காரைக்கால் அம்மையார் விருது- முனைவர் கி.மஞ்சுளா,
- சி.பா.ஆதித்தனார் திங்களிதழ் விருது- சட்டக் கதிர் (ஆசிரியர்-முனைவர் வி.ஆர்.எஸ்.சம்பத்),
- முதலமைச்சர் கணினித் தமிழ் விருது- முனைவர் இரா.அகிலன் (சங்க இலக்கிய உருபனியல் பகுப்பான் மென்பொருள்)
- 2023-ஆம் ஆண்டுக்கான தமிழ்த்தாய் விருது தென்காசித் திருவள்ளுவர் கழகத்துக்கு வழங்கப்பட்டது.

## 3. காமராசர் விருது

- 'தெருவெங்கும் பள்ளிகள் திறந்து, இலவசக் கல்வித் திட்டம், சத்துணவுத் திட்டம் முதலிய திட்டங்கள் மூலமாகத் தமிழ்ச் சமுதாயம் கல்வி எனும் கைவிளக்கு ஏந்தி முன்னேற

SMART LEADERS IAS ACADEMY

வழிவகுத்து வரலாறு படைத்த பெருந்தலைவரின் அடிச்சுவட்டில் தொண்டாற்றி வரும் ஒருவருக்கு பெருந்தலைவர் காமராசர் விருது 2006 ஆம் ஆண்டு முதல் வழங்கப் பெற்று வருகிறது.

- 2024 ஆம் ஆண்டிற்கான 'பெருந்தலைவர் காமராசர் விருது' தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவரும் மத்திய முன்னாள் அமைச்சருமான கே.வி. தங்கபாலு தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

## 4. மராத்தி மொழிக்கு அதிகாரப்பூர்வமாக செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டது

- மராத்திக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கி சில மாதங்களுக்குப் பிறகு, மத்திய அரசு இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டது.
- சமீபத்தில் (அக்டோபர் 03, 2024), மத்திய அமைச்சரவை மராத்தி, பாலி, பிராகிருதம், அஸ்ஸாமி மற்றும் பெங்காலி ஆகிய மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்தை வழங்கி, செம்மொழிகளை பதினொன்றாக உயர்த்தியது.

### முக்கிய குறிப்புகள்

- இந்தியாவில் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஒடியா ஆகிய ஆறு செம்மொழிகள் இருந்தன .
- தமிழ் 2004 இல் செம்மொழியாகவும், 2005 இல் சமஸ்கிருதம், 2008 இல் கன்னடம், 2008 இல் தெலுங்கு, 2013 இல் மலையாளம், 2014 இல் ஒடியா மொழியும் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது .
- அனைத்து செம்மொழிகளும் அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

## 5. ஹரிவராசனம் விருது

- மலையாள இசையமைப்பாளரும் பாடலாசிரியருமான கைதப்புறம் தாமோதரன் நம்பூதிரிக்கு ஹரிவராசனம் விருது ஜனவரி 15 அன்று வழங்கப்பட்டது.
- கேரள அரசு மற்றும் திருவாங்கூர் தேவஸ்வம் வாரியத்தால் நிறுவப்பட்ட இவ்விருது, கடந்த 2012-ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வருகிறது.
- கடந்த 2012-இல் முதலாவது விருது பின்னணி பாடகர் கே.ஜே.யேசுதாஸுக்கு வழங்கப்பட்டது.
- பின்னணி பாடகர்கள் பி.ஜெயசந்திரன் (2014), எஸ்.பி.பாலசுப்பிரமணியம் (2015), இசையமைப்பாளர்கள் இளையராஜா (2020), கங்கை அமரன் (2017), பாடகிகள் கே.எஸ்.சித்ரா (2018), பி.சுசீலா (2019), பாடகர் வீரமணிதாசன் (2024) உள்ளிட்டோர் இவ்விருதை பெற்றவர்களாவர்.

## 6. பத்ம விருதுகள் 2025

- நாட்டின் உயரிய விருதுகளில் ஒன்றான பத்ம விருதுகள் பத்ம விபூஷண், பத்ம பூஷண் மற்றும் பத்மஶ்ரீ ஆகிய மூன்று பிரிவுகளில் வழங்கப்படுகின்றன.
- 2025-ம் ஆண்டிற்கான 139 பத்ம விருதுகளை வழங்க குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

- 7 பேருக்கு பத்ம விபூஷண், 19 பேருக்கு பத்ம பூஷண், 113 பேருக்கு பத்மஶ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு நல்லி குப்புசாமி செட்டிக்கு வர்த்தகம் மற்றும் தொழில்துறை பிரிவிலும் திரு ஏ அஜித்குமார், திருமதி ஷோபனா சந்திரகுமார் ஆகியோருக்கு கலைப் பிரிவிலும் பத்மபூஷன் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- விளையாட்டு பிரிவில் திரு ஆர் அஸ்வின் -க்கு பத்மஶ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

## 7. 2024 ஐசிசி விருதுகள்- சிறந்த வீரர் பும்ரா; சிறந்த வீராங்கனை அமெலியா

- ஐசிசியின் (ICC) 2024-ஆம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர் விருதை இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ரா வென்றுள்ளார்.
- சிறந்த வீராங்கனை விருது, நியூஸிலாந்து ஆல்-ரவுண்டர் அமெலியா கெர்ருக்கு கிடைத்துள்ளது.
- ஐசிசியின் சிறந்த வீரருக்கான சர் கார்ஃபீல்டு சோபர்ஸ் விருதினை வெல்லும் 5-வது இந்திய வீரர் என்ற பெருமையை ஜஸ்பிரித் பும்ரா பெற்றுள்ளார்.
- ராகுல் திராவிட் (2004), சச்சின் டெண்டுல்கர் (2010), ரவிச்சந்திரன் அஸ்வின் (2016), விராட் கோலி (2017, 2018) ஆகியோரும் இந்த விருதினை வென்றுள்ளனர்.

## 8. சச்சின் டெண்டுல்கருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

- இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கருக்கு BCCI (Board of Control for Cricket in India) சார்பில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட உள்ளது.
- பிசிசிஐ-ன் வாழ்நாள் சாதனையாளர் விருது கடந்த 1994-ம் ஆண்டு இந்திய அணியின் முதல் கேப்டன் சி.கே.நாயுடுவை கவுரவிக்கும் விதமாக உருவாக்கப்பட்டது.
- இந்த விருதினைப் பெறும் 31-வது நபர் சச்சின் டெண்டுல்கர் ஆவார்.

## 9. ஊராட்சி திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழகம் முதலிடம்

- ஊராட்சிகளின் கடமைகள், பொறுப்புகளை செயல்படுத்துவது மற்றும் அதிகார பகிர்வு அளித்து திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நாட்டிலேயே தமிழகம் முதல் இடத்தில் இருப்பதாக மத்திய அரசின் ஆய்வறிக்கையை சுட்டிக்காட்டி தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.
- ஊராட்சிகளின் கடமைகள், பொறுப்புகளை செயல்படுத்தும் விதத்திலும், அதிகார பகிர்வு அளித்து திட்டங்களை நடைமுறைப்படுத்தும் விதத்திலும் தமிழகம் முதல் இடத்தில் உள்ளது.
- செயல்முறைப்படுத்தும் காரணிகள் கணக்கீட்டின்படி தமிழகம் அதிக மதிப்பெண்களையும், 'திறன் மேம்பாடு' மற்றும் 'செயல்பாடுகள்' ஆகியவற்றில் 2-வது இடத்தையும்,

SMART LEADERS IAS ACADEMY

நிதி பரிவர்த்தனைகளை பொருத்தவரை தமிழகம் 3-வது இடத்தையும் பெற்றுள்ளது.

- ஒட்டுமொத்த குறியீட்டின்படி மாநிலங்களின் தரவரிசை பட்டியலில் தமிழகம் 3-வது இடத்தில் உள்ளது.

## 10. பேராசிரியர் அன்பழகன் விருது

- புதுமையான கற்பித்தல்-கற்றல் முறைகள், ஆசிரியர் திறன் மேம்பாடு, தலைமைத்துவம் மற்றும் மாணவர் மேம்பாடு போன்ற துறைகளில் பன்முக வளர்ச்சியை வெளிப்படுத்தும் சிறந்த அரசுப் பள்ளிகளுக்கு 'பேராசிரியர் அன்பழகன்' என்ற பெயரில் விருது 2023-24 கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பேராசிரியர் அன்பழகன் அவர்களது நூற்றாண்டு நினைவைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறை செயல்படும் D.P.I வளாகத்தில் பேராசிரியர் அன்பழகன் அவர்களின் திருவுருவச்சிலை நிறுவப்படுவதுடன் அவ்வளாகம் “பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்” என்று அழைக்கப்படுமென முதலமைச்சர் அறிவித்திருந்தார்.

## 11. காமராஜர் விருது

- தமிழகத்தில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் படித்து கல்வி, இணை செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் பிளஸ் 2, பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு 2016-ஆம் ஆண்டு முதல் பெருந்தலைவர் காமராஜர் விருதும், பரிசுத்தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.
- பத்தாம் வகுப்பில் சிறந்து விளங்கும் 15 மாணவர்கள், பிளஸ் 2 வில் சிறந்து விளங்கும் மாணவர்களில் 15 பேர் என மாவட்டத்திற்கு மொத்தம் 30 பேருக்கு 'பெருந்தலைவர் காமராஜர்' விருது மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.
- விருது பெறும் பிளஸ் 2 வகுப்பு மாணவர்களுக்கு ரூ.20 ஆயிரம், பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.10 ஆயிரம் ஊக்கத்தொகையாக அளிக்கப்படும்.

## 12. பிரதமரின் விருதுகள்

- மத்திய மற்றும் மாநில அரசுகளின் மாவட்டங்கள்/அமைப்புகளின் அசாதாரண பணிகளை அங்கீகரிக்கும் பொருட்டு பிரதமரின் விருதுகள் 2006 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.
- இந்தத் திட்டம் 2014, 2020 இல் மறுசீரமைக்கப்பட்டு, நல்லாட்சி, தரமான சாதனைகள் மற்றும் கடைசி மைல் இணைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துவதற்காக 2021 இல் புதுப்பிக்கப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான விருதுகள் பின்வரும் மூன்று பிரிவுகளில் பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக வழங்கப்படவுள்ளது.:
    - மாவட்டங்களின் முழுமையான வளர்ச்சி
    - லட்சியத் தொகுதிகள் திட்டம்
    - புதுமை

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

### 13. 'தமிழ்ச் செம்மல்' விருது

- தமிழ் மொழிக்குத் தொண்டாற்றி வரும் தனிநபர் மற்றும் அமைப்புகளுக்கு தமிழக அரசு பல்வேறு விருதுகள் மற்றும் சிறப்புகளை அளித்து, அவர்களது தமிழ்த்தொண்டுக்குப் பெருமை செய்து வருகிறது.
- அதன்படி மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் தெரிவு செய்து 25,000 பரிசுத்தொகையும், சான்றிதழும் 2015 முதல் வழங்கப்பட்டு வருகிறது.
- மாவட்ட அளவில் தமிழ்த் துறைக்கு தொண்டாற்றி வரும் தமிழறிஞர்களுக்கு ஆண்டுதோறும் 'தமிழ்ச் செம்மல் விருது' வழங்கப்படுகிறது.
- விருதாளர்களுக்கு தலா ரூ.25,000 காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டன.

### 14. ஓவியம் மற்றும் சிற்பக் கலைகளில் திறமைமிக்க 6 கலைஞர்களுக்கு கலைச் செம்மல் விருது

- 2024-2025ம் ஆண்டிற்கான 'கலைச்செம்மல்' விருதிற்கு மரபுவழி ஓவியப் பிரிவில் மணிவேலு, மரபுவழி சிற்ப பிரிவில் பாலச்சந்தர் மற்றும் கோ. கன்னியப்பன், நவீனபாணி ஓவியப் பிரிவில் முரளிதரன் மற்றும் செல்வராஜ், நவீனபாணி சிற்ப பிரிவில் ராகவன் ஆகிய 6 கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**'கலைச்செம்மல்' விருது:**

- தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் மரபுவழி ஓவியம், நவீன பாணி ஓவியம் மற்றும் சிற்பக் கலைகளில் திறமைமிக்க கலைஞர்களுக்கு 'கலைச்செம்மல்' விருது வழங்கி ஊக்குவித்து வருகிறது.
- இவ்விருதுடன், விருதாளர்களுக்கு செப்புப் பட்டயம், ஒரு லட்சம் ரூபாய் விருதுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியவை வழங்கி கௌரவிக்கப்படுகிறது.
- ஒவ்வொரு ஆண்டும் 6 புகழ்பெற்ற கலைஞர்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

### 15. "கலைஞர் எழுதுகோல்" விருது

- இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றி வரும் சிறந்த இதழியலாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் 'கலைஞர் எழுதுகோல் விருது' மற்றும் ரூ.5 லட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டு சான்றிதழும் வழங்கப்படும் என்று 2021-22ம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.
- இந்த அறிவிப்பை செயல்படுத்தும் வகையில், கடந்த 2021ம் ஆண்டிற்கான 'கலைஞர் எழுதுகோல் விருது' மூத்த பத்திரிகையாளர் சண்முகநாதன், 2022ம் ஆண்டிற்கான 'கலைஞர் எழுதுகோல் விருது' மூத்த பத்திரிகையாளர் சாமி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

SMART LEADERS IAS ACADEMY

- 2023ம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதுக்கு நக்கீரன் கோபால் மற்றும் பல்வேறு தொலைக்காட்சி நிறுவனங்களில் 18 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி நிறைந்த அனுபவம் பெற்றுள்ள சுகிதா சாரங்கராஜ் ஆகிய இருவரும் தேர்வு செய்யப்பட்டனர்.

## 16. ஐஆர்சிடிசி-க்கு நவரத்னா அந்தஸ்து

- இந்திய ரயில்வே கேட்டரிங் மற்றும் சுற்றுலா கழகம் (IRCTC - Indian Railway Catering and Tourism Corporation) மற்றும் இந்திய ரயில்வே நிதி கழகம் (IRCF - Indian Railway Finance Corporation) ஆகிய பொதுத் துறை நிறுவனங்களுக்கு நவரத்னா அந்தஸ்து வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- தற்போது நாட்டில் உள்ள நவரத்னா பொதுத் துறை நிறுவனங்களின் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துள்ளது.
- நவரத்னா அந்தஸ்து பெறும் பொதுத்துறை நிறுவனங்கள் மத்திய அரசின் ஒப்புதல் பெறாமல், ரூ. 1,000 கோடி வரை ஒரு திட்டத்தின் கீழ் முதலீடு செய்ய முடியும்.
- இந்திய அரசாங்கம் மத்திய பொதுத்துறை நிறுவனங்களை மூன்று குழுக்களாக வகைப்படுத்துகிறது: மகாரத்னா, நவரத்னா மற்றும் மினிரத்னா.

## 17. சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான சாகித்ய அகாடமி விருதுக்கு நெல்லை பேராசிரியை தேர்வு

- பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி பேராசிரியை விமலா, சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ‘என்ட ஆண்கள்’ என்ற மலையாள நூலை தமிழில் மொழிபெயர்த்ததற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட உள்ளது.
- மலையாள எழுத்தாளர் நளினி ஜமிலா எழுதிய "என்ட ஆண்கள்" என்ற நூலை "எனது ஆண்கள்" என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்த பேராசிரியை விமலா, சாகித்ய அகாடமி விருதுக்குத் தேர்வாகியுள்ளார்.

## 18. ரிசர்வ் வங்கிக்கு டிஜிட்டல் பரிமாற்ற விருது

- லண்டன் மத்திய வங்கியின் டிஜிட்டல் பரிமாற்ற விருதுக்கு இந்திய ரிசர்வ் வங்கி தேர்வு செய்யப்பட்டு உள்ளது.
- அதன்படி, 'இந்திய ரிசர்வ் வங்கிக்குழுவால் உருவாக்கப்பட்ட பிரவாஹ் மற்றும் சார்த்தி அமைப்புகள் உள்ளிட்ட அதன் முன்முயற்சிகளுக்காக விருதும், அங்கீகாரமும் வழங்கப்பட்டு உள்ளது.

## 19. 59-வது ஞானபீட விருது

- சத்தீஸ்கரை சேர்ந்த இந்தி எழுத்தாளர் வினோத்குமார் சுக்லா, 59-வது ஞானபீட விருதுக்கு தேர்வு செய்யப்பட்டு உள்ளார்.
- பாரதிய ஞானபீட ஆய்வு மற்றும் வரலாற்று அமைப்பு கடந்த 1944-ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

SMART LEADERS IAS ACADEMY

இந்த அமைப்பு சார்பில் ஞானபீட விருது வழங்கப்பட்டு வருகிறது.

- இது இந்தியாவின் மிக உயர்ந்த இலக்கிய விருதாக கருதப்படுகிறது.
- கடந்த 1965-ம் ஆண்டில் கேரளாவை சேர்ந்த சங்கர குருப் என்பவருக்கு முதல் ஞான பீட விருது வழங்கப்பட்டது.

## 20. குழந்தை இறப்பு விகிதம் குறைப்பு: இந்தியாவுக்கு ஐ.நா. பாராட்டு

- தடுக்கக்கூடிய குழந்தை இறப்புகளை குறைப்பதில் இந்தியாவின் முயற்சிகள் முன்மாதிரியாக திகழ்வதாகக் கூறி ஐ.நா பாராட்டியுள்ளது.
- மேலும், சுகாதார அமைப்பு முறையில் முதலீடுகளை செய்து, ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டு திட்டத்தின்மூலம் லட்சக்கணக்கான இளம் உயிர்களை இந்தியா காப்பாற்றியுள்ளதாகவும் ஐ.நா. சுட்டிக்காட்டியது.
- தடுக்கக் கூடிய குழந்தை இறப்புகளை குறைப்பதில் இந்தியா, நேபாளம், செனகல், கானா மற்றும் புருண்டி ஆகிய 5 நாடுகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன (முன்மாதிரியான நாடுகள்).

## 21. முதல்வரின் மாநில விருது

- சமுதாய வளர்ச்சிக்குச் சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் பொருட்டு, தமிழக அரசின் சார்பில் 'முதல்வரின் மாநில இளைஞர் விருது' ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தினத்தன்று 15 முதல் 35 வயது வரை உள்ள 3 ஆண்கள், 3 பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
- இந்த விருதுக்கு தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு விருதுக்கானச் சான்றிதழ், பதக்கம் ஆகியவற்றுடன் ஒரு லட்சம் ரூபாய் ரொக்கம் வழங்கப்படும்.

### தகுதிகள்

- விருதுக்கு விண்ணப்பிக்கும் நபர்கள் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் தமிழகத்தில் குடியிருந்தவராக இருத்தல் வேண்டும்.
- சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றியிருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்த தொண்டு கண்டறியப்படக் கூடியதாகவும், அளவிடக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.
- மத்திய, மாநில அரசுகள், பொதுத் துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகளில் பணியாற்றுபவர்கள் இந்த விருதுக்கு விண்ணப்பிக்க இயலாது.

## 22. சிறந்த திருநங்கை விருது

- திருநங்கைகளின் **நலனுக்காக அயராது பாடுபட்டு, சமூகத்தில் முன்மாதிரியாகத் திகழும்** திருநங்கைக்கு ஆண்டுதோறும் விருது வழங்கப்பட்டு வருகிறது.
- ஆண்டுதோறும் திருநங்கைகள் தினமான **ஏப். 15ஆம்** தேதி வழங்கப்படும் இந்த விருது **ரூ.1 லட்சம்** மதிப்புள்ள **காசோலையும், சான்றிதழும்** அடங்கியது.
- நிகழாண்டுக்கான விருதை நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை

SMART LEADERS IAS ACADEMY


Chennai: RBN Tower, No.AK-2, 3rd Floor, 4th Avenue, Shanthi Colony, Anna Nagar, Chennai 40.
Chennai: 7200010122, 962636444, Trichy: 9751500300, Nellai:9626252500. Krishnagiri:9514423450
www.smartleadersias.com

**அ.ரேவதி**, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த **க.பொன்னி** ஆகியோருக்கு முதல்வர் வழங்கினார்.

## 23. மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருது

- ஒலிம்பியன்களான சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஆகியோர் மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருதைப் பெற்றனர்.
- இந்தியாவின் மிக உயர்ந்த விளையாட்டு விருதாகக் கருதப்படுகிறது மற்றும் இந்திய ஹாக்கி ஜாம்பவான் மேஜர் தியான் சந்த் (1905–79) நினைவாக வழங்கப்படுகிறது.
- இது 1991-92 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது மற்றும் நான்கு ஆண்டு காலப்பகுதியில் விளையாட்டுகளில் சிறந்து விளங்கியதற்காக வழங்கப்படுகிறது.
- எம்.சி. மேரி கோம், எஸ். மீராபாய் சானு, பி.வி. சிந்து, சாய்னா நேவால், விஜேந்தர் சிங், சச்சின் டெண்டுல்கர், விராட் கோலி போன்ற புகழ்பெற்ற விளையாட்டு வீரர்கள் கடந்த காலத்தில் இந்த மிக உயர்ந்த விளையாட்டு விருதைப் பெற்றுள்ளனர்.

## 24. உலக உணவுப் பரிசு 2025

- பிரேசிலிய நுண்ணுயிரியலாளர் மரியாங்கெலா ஹங்ரியா, 2025 உலக உணவு பரிசு பெற்றவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.
- ரைசோபியா மற்றும் அசோஸ்பைரில்லம் பிரேசிலென்ஸ் போன்ற நன்மை பயக்கும் பாக்டீரியாக்களைப் பயன்படுத்தி ஹங்ரியா விதை மற்றும் மண் சிகிச்சைகளை உருவாக்கினார்.
- அவரது கண்டுபிடிப்புகள் சோயாபீன்ஸ் இயற்கையாகவே நைட்ரஜனை நிலைநிறுத்தவும், சோளம் போன்ற பயிர்களில் வேர் வளர்ச்சியை அதிகரிக்கவும், ஊட்டச்சத்து மற்றும் நீர் உறிஞ்சுதலை மேம்படுத்தவும் உதவுகின்றன.
- உலக உணவு பரிசு 1986 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற டாக்டர் நார்மன் இ. போர்லாக் அவர்களால் நிறுவப்பட்டது.
- உணவு மற்றும் விவசாயத்திற்கான நோபல் பரிசு என்று குறிப்பிடப்படுகிறது.

SMART LEADERS IAS ACADEMY

# Smart Leaders IAS

Institute For Administrative Studies

*Smart Way to Succeed*

## TNPSC தேர்வில் வெற்றி பெற்ற எமது மாணவர்கள்

## GROUP 1 TOPPERS -2024




| Rank | Name |
|---|---|
| 03 | HARI PRIYANKKA |
| 11 | DIVYA PERUMAL |
| 13 | HARSHA UNNI KRISHNAN |
| 28 | SATHIYA NARAYANAN |

## GROUP 1 TOPPERS -2023



| Rank | Name |
|---|---|
| 01 | MARUTHIP PRIYA.R |
| 20 | DEEPIKA. A |
| 30 | BHAVADHARANI.R |



| Rank | Name |
|---|---|
| 34 | PECHIYAAMMAL. M |
| 41 | ILLANCHEZHIAN |
| 43 | NALINI. S |
| 88 | FRANCIS SAHAYA AROCKIA MARY |

## GROUP 1 TOPPERS -2022



Ms.SATHYANANDHI.G
RANK -2
DEPUTY COLLECTOR

Ms.SUBHALAKSHMI.S
RANK -4
DEPUTY COLLECTOR

Ms.KRITHIKA.K
RANK -18
ASSISTANT COMMISSIONER COMMERCIAL TAX



Ms.K.RAMALI RAMALAKSHMI
RANK -22
DEPUTY SUPERINTENDENT OF POLICE

Mr.VIGNESH.C
RANK -25
ASSISTANT DIRECTOR OF RURAL DEVELOPMENT



| Name | Post |
|---|---|
| Ms.Anjali | Asst.Inspector Local Fund Audit |
| Mr.Vijay | Local Fund Audit |
| Ms.Prasannavadhani | Hindu Religious |
| Ms.Rajeswari | Senior Co-Operative Inspector |
| Ms.Nizanthi | Asst.Inspector Co-Operative |
| Mr.Vignesh | Asst.Inspector Local Fund Audit |
| Mrs.E.BanupriyaM.E., | District Fire Officer |
| Mr.Praveen Kumar | Asst.Jailer |
| Ms.T.Supriya | Local Fund Audit |
| Mr.S.Balakangathara Thilagar | Senior Ins. Co-op. Society |



| Name | Post |
|---|---|
| Ms.Archana | Senior Co-Operative Inspector |
| Ms.Janani Priyadharshini | Senior Revenue Inspector |
| Mr.Rajesh | Senior Revenue Inspector |
| Mr.K.Balu | Senior Revenue Inspector |
| Mr.A.Anbalakan | Labour Inspector |
| Ms.D.Mohana | Commercial Tax Officer |
| Ms.T.Kayalvizhi | Revenue Inspector |
| Ms.Jannath Beevi | Commercial Tax Dept. |

**1800+ TNPSC SELECTIONS**


### HEAD OFFICE

RBN Tower, No.Ak-2,
3rd Floor, 4th Ave,
Shanthi Colony,
Anna Nagar,
Chennai - 600040.

**72000 10122,**
**962636 4444**

### EXTENSIONS

No.5105, 1, 15th Main Rd,
H Block, Anna Nagar West, Anna Nagar,
Chennai, -600040

No: 38, Nehru Nagar, 2nd Ave.,
Thirumangalam, Anna Nagar West,Ch-40.
**Ph: 7200423450**

### BRANCHES

**TIRUNELVELI**

No.106B, 3rd floor,
Gilgal Complex,
VOC ground opposite,
Palayamkottai - 627 002.
**Ph: 9626252500**

**TRICHY**

No.143, 4th Floor,
Lakshmi Complex,
Salai Road, Thillai Nagar,
Trichy - 620 018.
**Ph: 9751500300 /9786500300**

**KRISHNAGIRI**

No:7 D, Anna Salai, near New Bus Stand, next to Anna Arch, Londenpet, Krishnagiri.
**Ph: 95144 23450 / 95144 23451**